

www.padippakam.com

# செம்மலர்

செப்டம்பர்
2000
ரூ. 5



அஞ்சலி:
கவிஞர் ஜாப்ரி



## ‘சுமங்கலி’ எனும் ஒரு ஆக்டோபஸ்



நேர்காணல்:
பிலிம் நியூஸ் ஆனந்தன்

படிப்பகம்

www.padippakam.com

# குறைந்தபட்சம்...

□ அ.வெண்ணிலா



இன்று பௌர்ணமி என்றேன்
என்ன செய்யலாம்? என்பது போலப்
பார்த்தாய்
ஒரு மலையுச்சியில்
நின்றபடி
நிலா பார்க்க முத்தமிட்டுக் கொள்ளலாம்
வெட்டவெளிப் பாறையில்
இரவு முழுவதும் படுத்துக் கிடக்கலாம்.
ஒவ்வொரு பௌர்ணமியையும்
பார்த்து ரசிக்கும்
மரங்களோடு பேசிக்கொண்டிருக்கலாம்.
காலடிகள் விழாத
ஒற்றையடிப் பாதையில்
நிலா வெளிச்சம் புதைய நடக்கலாம்.
துள்ளுவது மீன்களா?
நிலாத்துண்டுகளா? என
குளக்கரையில் அமர்ந்து
இரவு முழுதும் வேடிக்கை பார்க்கலாம்.
எவ்வளவோ இருக்குதான்
பௌர்ணமி இரவுக்கென்று.
குறைந்தபட்சம்
குழந்தைகளோடு
மொட்டை மாடியிலாவது
அமர்ந்திருப்போம்!
வா!

படிப்பகம்

www.padippakam.com

# நடித்துக்காட்டுவார் பாரதி



"தமிழ் இதழ்களில் கேலிச் சித்திரங்கள் என்னும் தனி ஆய்வு வெளிவந்தால் அதில் பாரதியாரின் பங்களிப்பு ஒரு வரலாற்றுச் சாதனையாக விளங்கும். அதிலும் "அரசியல் கேலிச்சித்திரம்" பதிப்பு பாரதியாரிடமிருந்தே தொடங்கியது என்னும் வரலாற்று உண்மையும் வெளிப்படும்.

பாரதியாருக்கு முன் சமூக சீர்திருத்தம் தொடர்பான கார்ட்டூன்கள் வெளிவந்துள்ளனவாகக் கூறப்படுகின்றது. ஆனால் அரசியல் கருத்துப் பிரச்சாரக் கார்ட்டூன்கள் சுயப்படைப்புகளாக பாரதியாரிடமிருந்தே தொடங்கியது என்பது விவாதத்திற்கு அப்பாற்பட்ட வரலாற்று உண்மையாகும். அதுவும் கேலிச் சித்திரங்களுக்குரிய கருத்துக்களை மட்டும் கூறிவிட்டு அமைவர் பெரும்பாலான பத்திரிகை ஆசிரியர்கள். ஆனால் பாரதியார் தமது எழுத்துக்களில் எவ்வளவு ஆர்வம் காட்டினாரோ, அந்த அளவு ஆர்வத்தை கார்ட்டூன்களிலும் காட்டினார். இவ்வுண்மையைத் தமிழ் இதழ்களைப் பற்றி ஆய்வு செய்துள்ள வரும் பாரதியை நன்கு அறிந்தவருமான பத்திரிகையாளர் 'அமிர்தகுண போதினி' ஆசிரியர் எஸ்.ஜி. இராமானுஜலு நாயுடு பின்வருமாறு உணர்த்தியுள்ளார்:

"....'இந்தியா' பத்திரிகை சனிக்கிழமை தோறும் வெளியாகி வந்தது. நாலாயிரம் பிரதிகள் வரை போய்க் கொண்டிருந்தது. ஒவ்வொரு பத்திரிகையிலும் அவ்வார வர்த்தமானத்தின் சார்பாய் ஒரு பெரிய சித்திரம் கண்ணுக்கினிய காட்சியாய் மிக்க அழகுடன் பிரசுரிக்கப்பட்டு வந்தது. அந்தப் படம் இன்னின்னவாறு இருக்க வேண்டுமென்று சித்ரீகருக்கு பாரதியார் சொல்லுங் காலையில் அப்படத்தின் அம்சங்களையெல்லாம் தமது முகத்திலும், அபிநயங்களிலும் காண்பித்து விடுவார். சித்ரீகரின் மனதில் அந்த பாவனைகள் நன்கு பதிந்துவிடும். அவ்விதமே சித்திரமும் தயாராகும்."

*-தமிழறிஞர் பெ.சு.மணி எழுதிய "விடுதலைப் போரில் தமிழ் இதழ்கள்" என்ற நூலிலிருந்து.*

**செப்டம்பர் 11** மகாகவி பாரதி நினைவு நாள்.



படிப்பகம்

www.padippakam.com



டில்லியில் நாடாளுமன்றம் முன்பு தமுஎச ஆர்ப்பாட்டம். உடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வைகோ. பி.மோகன். சுதர்சன நாச்சியப்பன்.

தமிழுக்குரிய நீதி கிடைக்க வேண்டுமென்பதற்காகத் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து போராடி வருகிறது. இந்தப் போராட்டத்தின் ஒரு புதிய அத்தியாயம்தான் இச்சங்கம். ஆகஸ்ட் 22ம் தேதியன்று இந்தியத் தலைநகர் டில்லியிலே நாடாளுமன்றம் முன் நடத்திய எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம். தமிழ் உள்ளிட்ட அனைத்து தேசிய மொழிகளையும் மத்திய அரசின் ஆட்சி மொழிகளாக அறிவிக்க வேண்டும். சமஸ்கிருதம் போன்று தமிழையும் உயர்தனிச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும்; 2001-2002ம் ஆண்டை தமிழ் ஆண்டாக அறிவிக்க வேண்டும்; பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் ஆங்கிலத்துடன் தமிழ் உள்ளிட்ட அனைத்து தேசிய மொழிகளையும் பயிற்றுமொழிகளாக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தமுஎச தலைவர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் உள்பட 300க்கும் மேற்

# டில்லியில் ஒரு புதுமைக்காட்சி...



படிப்பகம்

www.padippakam.com

பட்டோர் பங்கேற்றனர்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட "தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்" எனும் பதாகையையும், தமிழ், இந்தி, ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கோரிக்கை அட்டைகளையும் ஏந்தியபடி டில்லி வீதியில் தமிழ் முழக்கங்களுடன் ஆர்ப்பாட்ட ஊர்வலம் கம்பீர மிடுக்கோடு நாடாளுமன்றம் நோக்கிப் புறப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் வைகோ, பி.மோகன், சுதர்சன நாச்சியப்பன் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

"தமிழ் வாழ்க!", "அனைத்து தேசிய மொழிகளும் வாழ்க", தமிழுக்கு நீதி கேட்டுத் தலைநகரில் ஆர்ப்பாட்டம்" என்று முழக்கமிட்டுச் சென்றது டில்லி மக்களுக்கு ஒரு புதுமைக் காட்சியாக இருந்தது.

ஊர்வலம் நாடாளுமன்ற வீதியிலுள்ள காவல்நிலையம் அருகே தடுத்து நிறுத்தப்பட்டது. அந்த இடத்திலேயே கோரிக்கை முழக்கங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமுஎச மாநிலப் பொதுச் செயலாளர் இரா.கதிரேசன் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தை வாழ்த்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வைகோ, பி.மோகன், சுதர்சன நாச்சியப்பன், அகில இந்திய விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் கே.வரதராசன், சிஐடியு அகில இந்திய செயலாளர் உ.ரா.வரதராசன், டில்லி தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழரசு, டில்லி கல்விக் கழகத் தலைவர் நாகஜோதி, இந்தி ஜனநாயக எழுத்தாளர் சங்கத் தலைவர் சஞ்சல் சௌகான் ஆகியோர் உரையாற்றினர்.

தமுஎச தலைவர்கள் கு.சின்னப்ப பாரதி, ந.நன்மாறன், திண்டுக்கல் ஐ.லியோனி, மேலாண்மை பொன்னுச்சாமி, நா.முத்துநிலவன், இரா.தெ. முத்து, ஜீவி ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.



பிரதமர் வாஜ்பாயிடம் கோரிக்கை விண்ணப்பம்

## பிரதமருடன் சந்திப்பு

பின்னர், தமுஎச தலைவர்கள் இரா.கதிரேசன், ந.நன்மாறன், காஸ்யபன், மேலாண்மை பொன்னுச்சாமி, ஸ்ரீரசா ஆகியோர் பிரதமர் வாஜ்பாயை நேரில் சந்தித்து கோரிக்கைகள் விண்ணப்பத்தை அளித்தனர். தமிழை உயர்தனிச் செம்மொழியாக அறிவிப்பது குறித்து அரசு நடவடிக்கை எடுத்து வருகிறதென்றும், மற்ற கோரிக்கைகள் குறித்துப் பரிசீலிப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் வைகோ, பி.மோகன், சுதர்சன நாச்சியப்பன் ஆகியோரும் பிரதமரைச்



படிப்பகம்

www.padippakam.com

சந்தித்த போது உடனிருந்தனர். பின்னர் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் முரளி மனோகர் ஜோஷியையும் நேரில் சந்தித்து தமுஎச தலைவர்கள் கோரிக்கைகள் விண்ணப்பம் அளித்தனர். அத்துடன் மக்களவைத் தலைவர் அலுவலகத்திலும் கோரிக்கைகள் விண்ணப்பம் அளிக்கப்பபடடது.

இந்த டில்லி ஆர்ப்பாட்டம் தமுஎச வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம்தான்.

## சென்னையில்...

முன்னதாக, டில்லி ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பதற்காக தமிழகமெங்குமிருந்து ஆகஸ்ட் 19ல் சென்னைக்கு வந்த தமுஎச தலைவர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், மத்திய அரசு, தமிழக அரசு நிறைவேற்ற வேண்டிய தமிழ்க் கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னையிலும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். தங்கசாலை மணிக்கூண்டு அருகே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இது வழியனுப்பு விழாவாகவும் அமைந்தது. நிகழ்ச்சிக்கு தமுஎச மாநிலத் தலைவர் ச.செந்தில்நாதன் தலைமை வகித்தார்.

"தமிழக அரசே! தமிழ்ப்பயிற்று மொழி அரசாணைக்காக உச்சநீதிமன்றத்தில் வழக்கை வலுவாக நடத்திடுக. பொறியியல், மருத்துவம் போன்ற தொழில்நுட்பக் கல்வியிலும் தமிழைப் பயிற்றுமொழியாக்குக. அதற்காக மத்திய அரசின் அனுமதியைப் பெறப் போராடுக" - என்பதாக இவர்களின் கோரிக்கை முழக்கம் எழுந்தது.

தமுஎச பொதுச் செயலாளர் இரா. கதிரேசன், துணைப் பொதுச் செயலாளர் மேலாண்மை பொன்னுச்சாமி, துணைத்தலைவர் ந.நன்மாறன், துணைச்செயலாளர் நா.முத்துநிலவன், வடசென்னை மாவட்டச் செயலாளர் இரா.தெ. முத்து, 'அலைகள்' பதிப்பக உரிமையாளர் சிவம், 'முகம்' பத்திரிகை ஆசிரியர் மாமணி, திமுக வழக்கறிஞர் கருப்பன் ஆகியோர் உரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் தமுஎச மாநிலத் துணைத் தலைவர் கு.சின்னப்ப பாரதி, மாநில செயற்குழு உறுப்பினர் டி இலட்சுமணன், மாநிலத் துணைச் செயலாளர் பிரளயன், மாநிலக்குழு உறுப்பினர்கள் அ.குமரேசன், கு.ப.தேவராஜன், தி.நரேந்திரன் ஆகியோரும் பங்கேற்றனர். திரைப்பட இயக்குநர் வி.சேகர், தமது குழுவினருடன் ரயில் நிலையத்திற்கு வந்து டில்லி ஆர்ப்பாட்டத்திற்கு செல்லும் தமுஎச தோழர்களை வாழ்த்தி வழியனுப்பினார்.



மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சரிடம் கோரிக்கை விண்ணப்பம்.



படிப்பகம்

www.padippakam.com

## திரைப்பட விமர்சனம்



# சிம்மாசனம்

ஜமீன்தார் நல்லவர். இல்லையென்று வருவோர்க்கு இல்லையென்று சொல்லாது வாரிவழங்குவார். அவருக்கு இரு மனைவிகள். ஒருத்தி அரண்மனையிலும், இன்னொருத்தி வேலைக்காரன் மகளாய் தோட்டத்திலும்; இருவருக்கும் இரண்டு பிள்ளைகள். அவர்களுக்குள் மோதல் – முடிச்சு – பின்பு அவிழ்ப்பு – முடிவு என்ற வழக்கமான, புளித்துக் கொம்பாடிப்போன கதைதான். பார்த்துப்பார்த்துச் சலித்துப் போன கதைதான். இருந்தாலும் பழைய கதையைப் புதியபாணியில் சொல்லி இயக்குநர் ஈஸ்வரன் வெற்றி பெற்றுள்ளார்.

ஜமீன்தாராகவும் அவரது இரு மகன்களாகவும் மூன்று வேடங்களில் விஜயகாந்த் திறம்பட நடித்துள்ளார். ஜமீன்தாரின் இருமனைவியராக அம்பிகா, விஜியும், மருமகள்களாக குஷ்பு, மந்த்ரா, ராதிகா சவுத்ரி ஆகியோரும் நடித்துள்ளனர். அம்பிகாவின் அண்ணன்களாக ராதாரவியும், தியாகுவும் நடித்துள்ளனர். செந்தில், சுந்தரராஜன், ஷர்மிலி, வையாபுரி போன்றவர்கள் நடித்திருந்தும் சிரிப்புத்தான் வரவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

ஜமீன்தார் கணவன் வாரி வாரி வழங்குவதைப் பார்த்து வயிறெரியும் அம்பிகா மீது கொலைப்பழி விழுகிறது. பின்பு ஜமீன்தாரை விஷம் கொடுத்துக் கொன்றது மற்றொரு ஜமீன்தார் என்பது தெரிகிறது. மகன் விஜயகாந்துகள் இருவரும் தந்தையைக் கொன்றவனைப் பழிவாங்குகின்றனர். பின்பு அண்ணன் தம்பிகள் குடும்பம் ஒன்றாய் இணைகிறார்கள்.

படத்தில் உரையாடல்களும், காட்சி அமைப்புகளும், கதை சொன்ன விதமும் தான் படத்தின் வெற்றிக்கு வழிவகுத்துள்ளன. சமூக அவலங்களைச் சாடும் சாட்டையடி வசனங்கள் சில இடங்களில் உள்ளன. உச்சவரம்புச் சட்டத்திற்குப் பணிந்து தனது நிலங்களையெல்லாம் விவசாயிகளுக்குத் தானமாகப் பட்டாப் போட்டுக்கொடுக்க விஜயகாந்த் முன் வருகிறார். அதை வில்லன் ராஜன் தேவ் எதிர்த்து "நீ என்ன கம்யூனிசம் பேசறியா?" என்று கேட்கிறார். அதற்கு விஜயகாந்த், " உழுபவனுக்கே நிலம் என்று நான் பேசுவது – தத்துவம், விஞ்ஞானம், அதுக்கு நீ என்ன பேரு வேணாலும் வச்சுக்கோ" என்று கூறுவது கைதட்டல் பெறுகிறது. பாடல்கள் சுமார்தான். ராஜராஜனின் காமிரா விளை யாடியிருக்கிறது. இசை எஸ்.ஏ.ராஜ்குமார்.

"நான் விரும்புவது ஜமீன் சிம்மாசனத்தை அல்ல, மக்களின் இதய சிம்மாசனத்தைத்தான்" என்று படத்தில் எம்ஜிஆர் பாணியில் விஜயகாந்த் முழங்குகிறார். இதன் மூலம் அவர் என்ன சொல்ல வருகிறார் என்பது நமக்குப் புரியவில்லை. யதார்த்தத்தில் கலைஞரின் அரசை விமர்சித்துப்படம் எடுக்கக் கூடாது என்று நடிகர் சங்கத் தலைவராக உத்தரவு போடும் விஜயகாந்த்.

– வசந்தா


Be Proud of Popular Man

POPULAR



TAILORS

27-A, American College Buildings
Goripalayam, Madurai-625 002. Phone: 531327


படிப்பகம்

www.padippakam.com

SEMMALAR
செப்டம்பர்
2000
சரம் : 31
மலர் : 5

# ரத்தநாளங்களை அழிக்கும் கயமை!

'ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து அய்யனாரையே' கடித்த கதையாக பாஜக தலைமையிலான மத்திய கூட்டணி அரசு பொதுத்துறைகளை ஒவ்வொன்றாக அன்னிய முதலாளி களுக்கு பந்தி வைத்துவருகிறது.

காப்பீட்டுத்துறை, வங்கித்துறை, மின்துறை, சுரங்கத்துறை, துறைமுகத்துறை, விமானத்துறை என 'சகலமும்' அன்னியருக்கு அள்ளிக்கொடுத்த பிறகு இப்போது தொலைத்தொடர்புத் துறையை கிள்ளத் துவங்கியிருக்கிறது.

காலனி ஆதிக்கச் சங்கிலியிலிருந்து இந்திய நாடு விடுதலைபெற்ற சுதந்திரநாளான ஆகஸ்ட் 15ம்தேதி முதல் எஸ்டிடி எனப்படும் தொலைதூர தொலைபேசி சேவையை அன்னியருக்கும், உள்நாட்டு முதலாளிகளுக்கும் திறந்துவிடுவ தாக பிரதமர் வாஜ்பாய் அறிவித்துள்ளார். முக்கியமான பொதுத்துறை ஒன்றை தாரைவார்க்க விடுதலை நாளைத் தேர்வு செய்ததிலிருந்து பாஜகவினருக்கு நாட்டின் சுதந்திரம் மற்றும் சுயசார்பு மீது உள்ள மரியாதையைப் புரிந்துகொள்ள முடியும்.

தொலைத்தொடர்புத்துறையை தனியாருக்குத் தரக்கூடாது என்பதற்கு தொழிற்சங்கத்தினரும், தேசபக்த எண்ணம்கொண்ட இடதுசாரிக் கட்சிகளும் அடுக்கடுக்காக ஆயிரம் வாதங்களை முன்வைக்கின்றனர். தனியார்மயத்தால் நாட்டிற்கு என்ன லாபம் என்று ஒரு பதிலைக்கூட வாஜ்பாய் அரசால் வைக்க முடியவில்லை. ஒரே வரியில் அன்னிய முதலீட்டாளர்கள் நிர்ப்பந்திக்கிறார்கள். சற்றும் கூச்சநாச்சமின்றி சொல்கிறார்கள் மத்திய மந்திரி பிரதானிகள்.

தொலைபேசித்துறை ஆண்டுக்கு 17 ஆயிரம் கோடி ரூபாயை நாட்டிற்கு ஈட்டித் தருகிறது. இதில் தொலைதூர தொலைபேசி சேவை மூலம் மட்டும் ரூ.10 ஆயிரம் கோடி கிடைக்கிறது. இந்த துறை அன்னியருக்கு திறந்துவிடப் படுவதால் லாபம் முழுவதும் அன்னியருக்கும், பெருமுதலாளிகளுக்கும் போவது மட்டுமல்ல, நாட்டிற்கு பல ஆயிரம் கோடி இழப்பும் ஏற்படப் போகிறது. நாட்டின் பாதுகாப்பும் கேள்விக்குள்ளாகும்.

பொதுத்துறையாக தொலைதொடர்புத்துறை பிரம்மாண்டமாக வளர்ச்சி யடைந்துள்ளது. இந்திய எல்லைப்பரப்பில் ஆகாயவெளியிலும், பூமிக்கு கீழும் பாயும் தொலைபேசி கம்பிகள் இந்திய திருநாட்டின் ரத்தநாளங்கள். இதை அன்னியரிடம் ஒப்படைப்பது தேசவிரோதமானது. இதை எதிர்த்திடல் ரத்தத்தில் தேச பக்தியுள்ளோரின் பொறுப்பு.



படிப்பகம்

www.padippakam.com

# கேள்விகளின் அணிவகுப்பு

??????

அன்றைய ஆட்சியாளர்களையும் சனாதனவாதிகளையும் அதிர வைத்த படம், 'பராசக்தி' கலைஞர் மு.கருணாநிதியின் கதை வசனம்.

"அரசன் உத்தரவென்ன... ஆண்டவன் உத்தரவுக்கே காரணம் கேட்கும் காலம் வந்துவிட்டது" என்று 'மனோகரா' முழங்கிய வசனம், கலைஞர் கருணாநிதியின் கைவண்ணம்.




இது பழைய காலக் கலைஞர்.

அவர் மந்திரியாகி... மாநில முதல்வராகி... 1977 வரை தமிழகத்தை ஆண்டு முடித்த பின்பு...

"பாலைவன ரோஜாக்கள்" என்றொரு வெற்றிப்படம் வந்தது. சத்யராஜ் - பிரபு சேர்ந்து நடித்த படம். லட்சுமி கலெக்டராக நடித்திருப்பார்.

பத்திரிகையாளர்களைத் தாக்கி, பத்திரிகைகளையும் தாக்கி, ஜனநாயகத்தையே சாகடிக்கிற சதிகார அரசியல்வாதிகள், ஆளும் கட்சி மந்திரிகளைப் பற்றிய படம்.

கலெக்டர் லட்சுமியை அதிகாரம் படைத்த முக்கியமான மந்திரி மிரட்டுகிற போது.. தர்மாவேசமாகச் சீறுவார் லட்சுமி. "நான் விரும்பினால்... நாளையே வேலையை ராஜினாமா செய்துவிட்டு, தேர்தலில் நின்று, ஜெயித்து, மந்திரியாகிவிட முடியும். ஆனால் அதிகார வெறி பிடித்தாடுகிற நீ, எத்தனைக் குட்டி கரணம் போட்டாலும் கலெக்டராக முடியாது. அதுமட்டுமல்ல... அஞ்சு வருசம்தான் மந்திரி. ஆனா... நா எப்பவும் கலெக்டர்தான்" என்று முழங்குவார்.

இந்த முழக்கத்தை வார்த்தைப்

அன்னபாக்கியன்



படிப்பகம்

www.padippakam.com

படுத்தியதுவும் கலைஞர் மு.கருணாநிதியின் கைவண்ணம்தான்.

சிவப்புமல்லி, சிவந்த கண்கள் போன்ற எழுச்சிமயமான படங்கள் வந்து வெற்றிபெற்றன. கோமல் சுவாமிநாதன் கதை வசனத்தில், கே. பாலச்சந்தர் இயக்கத்தில் "தண்ணீர், தண்ணீர்" படம் வந்து மிகப்பெரிய பரபரப்பையே ஏற்படுத்தியது.

மக்களின் விண்ணப்பங்களை ஆளும் அதிகாரவர்க்கம் அலட்சியப் படுத்துவதையும், வாக்குப்போட்ட மக்களின் வாய்க்குத் தண்ணீர்கூடத் தராமல் அரசு நிர்வாக இயந்திரம் ஏமாற்றுவதையும், சாதி பேதம் வளர்க்கிற எம்எல்ஏ என்று... இழுக்கும் அரசியல் சமூக நிலவரத்தை அப்பட்டமாகத் தோலுரித்தபடம். அதிகாரிகளையே மிரள வைத்த படம்.

மக்களையும், மனைவியையும், சக மந்திரியையும் ஏமாற்றி வஞ்சிக்கிற கபட அரசியல் தலைவனை அம்பலப் படுத்திய கே.பாலச்சந்தரின் 'அச்சமில்லை அச்சமில்லை' படம்.

கள்ளச்சாராய வியாபாரிகளின் கைக்குள் ஆளும் மந்திரியே கைப்பொம்மையாகியிருப்பதாகச் சித்தரித்த "மக்கள் என் பக்கம்".

கட்சித் தொண்டனையும், தொண்டனின் மனைவியையும், மக்களையும் சூறையாடுகிற மந்திரி, காவல்துறை அதிகாரி, வழக்கறிஞர்களை அம்பலப் படுத்திய பாரதிராஜாவின் 'ஒரு கைதியின் டைரி' மற்றும் 'என்னுயிர்த் தோழன்' போன்ற படங்கள். நேர்மையான கலெக்டரை வேட்டையாடிச் சிரழிக்கிற ராட்சஸ மந்திரிகளைப் பற்றிய 'தமிழ்ச் செல்வன்'.

சந்தனக் கடத்தல்காரனோடு கைகோர்த்திருந்த கலெக்டர், உயர் போலீஸ் அதிகாரி, மந்திரி போன்றோரை தாட்சண்யமற்று அம்பலப் படுத்திய ஆர்.கே.செல்வமணியின் 'கேப்டன் பிரபாகரன்' படம், 'ஏழை ஜாதி' போன்ற படம் அதிகாரத் துக்கான அரசியல் வேட்டையில் ராட்சஸமாக ஈடுபடுகிற ஆளும்கட்சி மூர்க்கத்தை தோலுரித்துக்காட்டிய 'பூ ஒன்று புயலானது" படம் தெலுங்கில் வந்து, தமிழில் சக்கைபோடு போட்டது.

மணிவண்ணனின் 'இனி ஒரு சுதந்திரம்', 'அமைதிப்படை' போன்ற படங்களும் அந்த வகைதான்.

ஆளும் கட்சியின் அத்துமீறல்கள், அநியாயங்கள், அரசியல் கபடவேடதாரிகளின் மாய்மாலங்கள், அதிகார வர்க்கத்தின் மூர்க்க நடவடிக்கைகள் இவற்றால் வஞ்சிக்கப்பட்ட – நசுக்கப் பட்ட கோடானுகோடி பாமரமக்களின் வெக்கைப் பெருமூச்சுகளின் மறுவடிவங்களாக வந்த இந்த வகைப் படங்கள்.

விமர்சனத்துக்குரிய குறைபாடு



"பாலைவன ரோஜாக்கள்"



படிப்பகம்

www.padippakam.com

கள் தென்பட்டபோதிலும்... இம்மாதிரி யான படங்கள் எழுபதுகளிலும், எண் பதுகளிலும் வந்துகொண்டிருந்தன.

வஞ்சிக்கப்பட்ட மக்களின் நெஞ் சின் தீச்சுடர்களாகச் சீறி ஆதிக்க அதி காரக் கூட்டத்தை ஆவேசமாக அம்ப லப்படுத்திய படங்கள்.

இவையெல்லாம் இப்போது எங்கே?

இரண்டாயிரம் ஆண்டு முடியப் போகிற இன்றைய காலக்கட்டத்தில் ஏறிட்டுப் பார்த்தால்... இந்த வகை யான திரைப்படங்கள் காணாமல் போயிருக்கின்றன என்கிற உண்மை அதிர்வோடு முன்வருகிறது.

பார்த்துக் காதல் - பார்க்காமல் காதல் - தொலைபேசிக் காதல் - இன்டர்நெட் காதல். - வேலையற்ற காதல் - கொலைகாரக் காதல் - நாக்கை அறுக்கிற காதல் - மூக்கை அறுத்துக்கொள்கிற காதல் - பொய் சொல்லவைக்கிற காதல் என்று சினிமாக்கள் தோறும் காதல் மயம்.

'ஆதலினால் காதல் செய்குவீர்' என்கிறார் மகாகவி பாரதி. காதல் என்பது மனிதனின் இயல்புணர்ச்சி தான். உயிருற்பத்தியில் உரிய இடம் வகிக்கிற காதலை யாரும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.

மழையைப் போல காதலும் உலகப் பொது மொழி. உயிர்களின் உயிர்மொழி. ஆயினும்-

காதலே சகலமும் என்றாகி விடாது. வாழ்வின் முக்கிய பகுதி யான காதல், வாழ்வே காதல் என்று முழுப்பகுதியாகிவிடமுடியாது.

காதல்மயமான படங்களின் ஈமொய்ப்புகளுக்கிடையில் நழுவிப் போன ரசனைப் பிரக்ஞையை மீட் டெடுத்து, சுரணையோடு நினைவு படுத்திப் பார்த்தால் - எழுச்சிமய மான படங்கள் இல்லாமல்போன அவ லத்தை உணரமுடிகிறது.

நாட்டு மக்களெல்லாம் இப்போது வஞ்சிக்கப்படுவதில்லையா? வாக்குறு திகள் தந்து, வாக்குகளைப் பெற்று, எம்.எல்.ஏ., எம்.பிக்கள், ஆனவர்க ளெல்லாம் பரிசுத்தவான்களாகிவிட் டார்களா? ஆளும் அமைச்சர்கள், அதிகாரிகள் யாவரும் முழுநிறை மக்கள் பணியாளர்களாகிவிட்டார் களா? விண்ணப்பங்களோடு வருகிற விவசாயிகளை வாசல் வந்து வர வேற்கிறாரா, கலெக்டர்? நாட்டில் குறைகளே இல்லாமல் போய்விட்ட னவா? மக்கள் முழு சுபிட்சமாக இருக்கிறார்களா?

ஏன்... இந்த மாதிரிப் படங்கள் இல் லாமல் போயிற்று? எல்லாம் காத லாய் ஏனாயிற்று?

தப்பித்தவறி... 'இந்தியன்', 'முதல் வன்', 'தேசிய கீதம்' போன்ற படங்கள் அத்திபூத்தமாதிரி எப்போதோ ஒன்றி ரண்டு வருகின்றன.

'முதல்வன்' படத்தினால் ஆளுங் கட்சிக்கு ஏகப்பட்ட எரிச்சல், கடுப்பு, திருட்டு வீடியோவை கட்டுப்படுத்த வேண்டிய ஆளும் கட்சியே, 'முதல் வன்' படத்தை திருட அனுமதித்த அவலம்.

*இலைகளின் சலசலப்பு!*
*சங்கீதம் தெரியுமோ*
*காற்றுக்கு?*

**- பா. உஷாராணி**



படிப்பகம்

www.padippakam.com

குடிதண்ணீர் கிடைக்காமல் அல்லாடித் தவிக்கிற பெண்கள்... சாலை வசதியற்று சாகக்கொடுத்த கிராமத்து மக்கள் வயிறெரிந்து சொல்வார்கள். "இந்த மாதிரி அத்துவானக் காட்லே கொண்ணாந்து முதலமைச்சரை போட்டு... நாலு நாளைக்கு இருக்கச் சொன்னாத்தான்... நம்மபடுற பாடுகள் அவருக்குத் தெரியும்!"

இந்த உணர்வையே மையமாக வைத்து, சேரன் இயக்கியிருந்த "தேசிய கீதம்" படம் இன்றைய ஆளும் கட்சியை மிகவும் சீண்டியிருக்கிறது.

தென்னிந்தியத் திரைப்பட நடிகர் சங்கத்தின் தலைவராகத் தேர்வு பெற்ற விஜயகாந்த்... சக நிர்வாகிகளோடு தமிழக முதல்வரிடம் போய் ஆசிவாங்கிய பரவசத்தில்... முதல்வரை விமர்சிக்கிற 'தேசிய கீதம் திரைப்படம் இயக்கியதை வெளிப்படையாகக் குற்றம்சாட்டுகிறார். "இப்படிப்பட்ட படம் இயக்கக்கூடாது" என்கிறார்.

தவமணிதேவி போன்று வாழ்விழந்த நடிகைகள், நடிகர்கள், கலைஞர்கள் வாழ்வைக் காப்பாற்றுகிற நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய நடிகர் சங்கம்... "முதல்வரை"க் காப்பாற்ற முனைவது ஏன்? அரசியல் சமூக விமர்சனப் படங்களை ஏன் மிரட்டுகிறது?

'தண்ணீர் தண்ணீர்' போன்ற படங்களின் சமுதாய விமர்சனக் கணைகள் கண்டுகலங்கிப்போன அன்றைய முதல்வர், 'சூப்பர் சென்சார்' சட்டம் கொண்டுவந்து மிரட்டினார். தமுஎச அதை எதிர்த்து களம் இறங்கி வெற்றிகண்டது.

'முதல்வன்', 'தேசிய கீதம்' போன்ற படங்களின் மென்மையான விமர்ச




னத்தைக்கூடத் தாங்கமுடியாத தமிழக முதல்வரைக் காப்பாற்ற விஜயகாந்த் வருவதேன்? நடிகர் சங்கம் முதல்வரின் கைத்தடியா? சிவப்பு மல்லி, கேப்டன் பிரபாகரன், ஏழை ஜாதி போன்ற படங்களில் ஹீரோவாக நடித்த விஜயகாந்த்.... சிவந்த விழிகளை தெறிக்கிற மாதிரி உருட்டி விழித்து நடித்த விஜயகாந்த்... சமுதாய - அரசியல் விமர்சனப் படங்களை மிரட்டுவதேன்? சரத்குமாரும் மிரட்டுவதேன்?

நடிகர் சங்கம் நவீன சூப்பர் சென்சாரா? இன்னின்ன மாதிரி



படிப்பகம்

www.padippakam.com

கதைகளைத்தான் இயக்க வேண்டும் என்று இயக்குநர்களை நிர்ப்பந்திப்ப தன் மூலம், கலை உரிமையில் கட்டாரி வீசுவதேன்?

இயக்குநர்களும் இதற்கு உட்படுகிறார்களா? அஞ்சி நடுங்குகிறார்களா? கலை உரிமைக்காக குரல் கொடுப்பார்களா?

வாட்டர் படம் தயாரிக்கவிடாமல் தடுத்த அடாவடித்தனத்துக்கு எதிராக முணுமுணுக்கக் கூடச் செய்யாமல் முடங்கிக்கொண்ட இயக்குநர்கள், சொந்த நெஞ்சின் மீது கட்டாரி வீசப்படுகிறபோதும் மௌனம் கடைபிடிக்கப்போகிறார்களா?

மீண்டும் "தண்ணீர் தண்ணீர்", "தமிழ்ச்செல்வன்"கள் வருமா?

கள்ளச்சாராயக் கும்பலை தட்டிக் கேட்ட சப்-இன்ஸ்பெக்டர் பைத்தியமாக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட கொடுமை, சினிமாவாகுமா? மந்திரிகள் என்றாலே லட்சாதிபதிகள், கோடீஸ்வரர்கள், மாளிகை வாசிகள் என்றாகிப்போன நிஜம், திரைக்கு வருமா?

குடிதண்ணீர் கிடைக்காத கிராமங்களிலும் கள்ளச்சாராயம் கிடைக்கிற இன்றைய அவலத்தை சினிமா பேசுமா? மருந்துக்கடைக்காரனை விட ஒயின் ஷாப் கடைக்காரன் கூடுதலாகச் சம்பாதிக்கிற நிஜத்தை சினிமா சொல்லுமா?

47 கிரிமினல் குற்றவாளிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய கொடிய நிஜத்தை, சினிமா கூறுமா?

காவல்நிலையக் கற்பழிப்புகள், காவல்நிலைய மரணங்கள், பிரேமானந்தாக்கள் போன்ற உண்மைகளை யார் சொல்வது?

கரும்பு விவசாயிகளையும், தேயிலை விவசாயிகளையும் "கொதிக்க" வைத்து, டீயாற்றி குடிக்கிற தமிழக அரசைப் பற்றி சினிமா பேச வேண்டாமா?

சிமெண்ட் விலையின் திடீர் உயர்வுக்கும், முரசொலிமாறனின் கை உயர்வுக்குமுள்ள இரகசியப் பகிரங்க உறவை சினிமா சொல்லக் கூடாதா?

மணல் கொள்ளையைத் தடுக்கிற கலெக்டர்களைப் பந்தாடுகிற மந்திரிகளைப் பற்றி சினிமா சிந்திக்க வேண்டாமா?

கேபிள் டிவியாளர்களைக் கதற வைக்கிற சுமங்கலியின் ஏகபோகத்துக்கு அரசின் அனுசரணை இருப்பதை சினிமா தோலுரித்துக்காட்டக்கூடாதா?

பொதுத்துறைகளெல்லாம் தனியார்துறையாக மாறுவதிலும், அந்நியத் தொழில்கள் இந்தியாவுக்குள் நுழைவதிலும் அரசுகளுக்கும் மந்திரிகளுக்கும் இருக்கிற சம்பந்தத்தைச் சினிமா பேச வேண்டாமா?

"காதல் பூக்களால்" வருடிக் கொண்டிருக்கும் தற்போதைய தமிழ்ச் சினிமா, சமுதாய அரசியல் மோசடிகள் குறித்தும் பேச வேண்டாமா?

பேசினால்... தென்னிந்திய நடிகர் சங்கம் ஏன் தடுக்க முன்வருகிறது? தமிழக முதல்வரின் முகத்தில் புன்னகை மலரச் செய்வதுதான் நடிகர் சங்கத்தின் ஜென்மநோக்கமா?

இதற்காகவா... பசியிலும், பட்டினியிலும் அவமானங்களிலும் தத்தளித்துக்கொண்டிருக்கிற ஆயிரக்கணக்கான நடிகர் சங்க உறுப்பினர்கள்... விஜய்காந்த், சரத்குமார் போன்றோருக்கு வாக்களித்தார்களா?

இப்படி... கேள்விகள் அணிவகுத்து நிற்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வழங்கும் இலக்கியப் பரிசுகள்

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவுப் பரிசு**
தமிழ் வளர்ச்சிக்கு உதவிடும் சிறந்த நூலுக்கு ரூ. 5000

**பெருமாயி - குப்பண்ணன் இலக்கியப் பரிசு**
சிறந்த நாவலுக்கு ரூ. 5000

**செல்வன் கார்க்கி நினைவுப்பரிசு**
சிறந்த கவிதை நூலுக்கு ரூ. 2000

**தமிழறிஞர் வ.சுப.மாணிக்கனார் நினைவுப்பரிசு**
சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்குப் பரிசு ரூ.3000

இந்த நான்கு பரிசுத் திட்டங்களுக்காக **1999ல்** வெளிவந்த, **தமிழ்மொழி வளர்ச்சிக்கு - குறிப்பாக தமிழ் மொழியியல் மற்றும் தமிழில் அறிவியல் ஆகிய வற்றிற்கு உதவிடும் நூல்களும், புத்தக வடிவில் வெளிவந்த நாவல்களும், கவிதை நூல்களும், பிறமொழிகளிலிருந்து தமிழில் பெயர்க்கப்பட்ட படைப்பிலக்கிய நூல்களும் வரவேற்கப்படுகின்றன.** *ஒவ்வொரு நூலிலும் மூன்று பிரதிகளை அனுப்பி வைக்க வேண்டும்.* படைப்பாளிகள் மட்டுமல்லாது வெளியீட்டாளர்கள் அல்லது வாசகர்களும்கூட நூல்களை அனுப்பி உதவலாம். படைப்புகளை **செப்டம்பர் 30க்குள்** கிடைக்கும்படி அனுப்பிவைத்திடவும்.

முகவரி

பொதுச்செயலாளர்
தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்
6/16, புறவழிச்சாலை, மதுரை – 625 018.


படிப்பகம்

www.padippakam.com



# நகரப் பருந்துகள்


ராமா நகர் பணிமனையின் காம்பவுண்டுக்கு முந்தைய பங்களா அது. தாவீது நகருக்குப் போகிற மண்சாலை பிரிந்து கீழிறங்கும். கானாற்றுப் பாலச் சுவர்களின் நடுவே குறுகலாய் நசுங்கி நகரும் நெடுஞ் சாலை. அங்கிருந்தே அந்த பங்களா காம்பவுண்டு சுவரும், உட்புறமிருக்கும் செடி கொடிகளும் – கொத்திப் போட்ட மண் தரையும் கூடத் தெரிந்தன. எத்தனையோ ஆண்டுக் காலமாக அங்கே வேரோடியிருந்த அடர்ந்து முதிர்ந்து தளர்ந்த பெரிய மரங்களும், செடி–கொடிகளும் வேரோடும், வேரடி மண்ணோடும் பிடுங்கியெறியப்பட்டுக் கொஞ்ச நாட்கள் தானாகின்றன. பங்களாவே பார்வைக்குத் தெரியாது – முன்பெல்லாம். இப்போது – வைப்பர் துடைத்து அழித்த கார்க் கண்ணாடியில் தெரிகிற நெடுஞ் சாலையும் – எதிர்வாகனங்களும் போல, பங்களா, அதன் அலங்கார பழைய பாணி உப்பரிகை வளைவுகள், புதிதாக வடிவமைக்கப்பட்ட பரந்த தோட்டம், குறுக்கும் – நெடுக்குமாகத் தோண்டப்பட்ட குழிகள்;

கமலாலயன்



படிப்பகம்

www.padippakam.com



பாத்தி பிரித்து நடப்பட்ட குரோட் டன்ஸ் செடிகள், ரோஜா, செம் பருத்திச் செடிகள், காகிதப்பூ கொடிகள்...!

காம்பவுண்டிற்குள் காக்கி டிராயரும், கை வைத்த வெள்ளை பனியனும் அணிந்தவர்கள் பத் துப் பேருக்கு மேல் மண் கொத்தி னார்கள்; குழிகள் தோண்டினார்கள்; டியூபுகளிலிருந்து நீர் பாய்ச்சி, பாத்தி கள் பிரித்து, குப்பைகளை வாரி – சுறுசுறுப்பாய் இயங்கிக்கொண்டிருந் தார்கள்.

**அ**ன்று காலை 10, 11 மணி வாக்கில் நெடுஞ்சாலை தடதடத்து அதிர்ந்தது. இரும்பு ஆணிகள் பதித்த பூட்ஸ் கால்கள், காற்றில் சுழன்ற தடிக ளுடன் பக்கத்துக் காம்பவுண்டை



படிப்பகம்

www.padippakam.com

நோக்கிப் புழுதி கிளப்பின. பூமியின் அடிவயிறு கலங்க மிதித்தன. பரிதாபமாய் அலறிய குரல்கள். வானின் கருவறைச் சுவர்களில் மோதி அலைந்து அதிர்ந்து எதிரொலித்தன.

ஈரம் குழைத்த மண்ணில். துளிர் விடத்துவங்கியிருந்த செடி–கொடிகள், வீறிட்ட குரல்களால் செவிடுபட்ட தங்களின் காதுகளை மூடி – கண்கள் குருடாக. குவிந்து ஒடுங்கிப் போயின...

தரையின் இறுக்கமான திரையைக் கிழித்துக்கொண்டு. பக்கத்தில் என்ன நடந்ததென்றறிய எட்டிப்பார்க்க விழி மலர்த்தியது போல் தலையை நீட்டியது அந்தச் சின்னஞ்சிறிய செடி...


'ஸ்ரீனிவாசா ரோட்வேஸ்' – காம்பவுண்டுச் சுவர். கோட்டைச் சுவர் போலிருந்தது. பெரிய இரும்பு கேட், நடுவே திட்டி வாயில். ஓர் ஆள் குனிந்து காலைத் தூக்கி உடம்பை வளைத்து நுழையலாம். மாரிமுத்து முன்னால் நுழைந்தான். பல வருஷங்களாய்க் குனிந்து வளைந்து நுழைந்து திரும்பிய லாவகம் தெரிந்தது. அந்த வேகத்தைத் தொடர முடியாமல் இவன் தடுமாறினான். ஒரு மாதிரி


## தலைகீழ்த் திருக்குறள்



தேனி மாவட்டம் போடி ஜக்கம்பட் டியைச் சேர்ந்த மாணவர் ஆனந்தபாபு. திருக்குறளின் 1330 குறட்பாக்களையும் ஓலைச்சுவடியில் எழுதியிருக்கிறார். இதில் என்ன வியப்பு என்றால் எல்லாக் குறளையும் தலைகீழாக (இடவல மாற்றமாக) எழுதியுள்ளதுதான். அதனால் இந்த ஓலைச்சுவடிகளைப் படிக்க வேண்டும் என்றால் ஒரு கண்ணாடி முன்பு ஓலைச்சுவடியைக் காட்டி, கண்ணாடியில் தெரியும் பிம்பத்தைத் தான் வாசிக்க வேண்டும். மேலும் இவர் முட்டை ஓடுகளின் உட்புறம் ஓவியம் வரைந்தும் சாதனை புரிந்துள்ளார்.

– தகவல் : முத்து







படிப்பகம்

www.padippakam.com

யாக சமாளித்து உள்ளே நுழைந்தான்.

"கேட்டத் தொறந்து வெக்க மாட்டாங்களா?"

–மாரிமுத்து திரும்பிப் பார்த்தான். அந்தப் பார்வைக்குப் பிறகு இவன் எதுவும் பேசவில்லை. பார்வைகளில் சூடு தெறிக்கும்போது பேசுவதற்கு வாய்கள் திறப்பதில்லை. இந்த மருதமுத்துவின் பார்வையில் சூடு அப்படித்தெறித்தது. ஆனால், கூர்ந்து கவனித்தால் வெண்படலத்துக் கருவிழிச் சாயலில் – சூட்டின் ஒளிவட்டத்திற்கு நடுவே பயத்தின் நிழல் கருமை அப்பிக் கிடந்ததை உணர்ந்திருக்க முடியும்.

எண்ணெய்க் கலவை, குருடாயில், டீஸல், பெட்ரோல் கசிவுகள் – கிரீஸ் பிசுபிசுப்புடன் கலந்து காலிமனையில் கருப்பு கருப்பாய்ப் பரவியிருந்தன – மைதானத்து சிறுநீர்த் தடங்கள் போல. டீஸல் – பெட்ரோல் வாசனை ஷெட்டின் உட்புறம் பூராவிலுமாய்ப் பரவிக்கிடந்தது. ஒரு ஓரமாக, சரிவாகத் தொடங்கி – நடுவே பள்ளத்துடன் கூடிய இரண்டு பெரிய மேடைகள். பஸ்களை நிறுத்தி ட்யூபுகளில் விசையாக நீரைப் பாய்ச்சிக் கழுவி 'வாட்டர் சர்வீஸ்' நடந்து கொண்டிருந்தது. இடது பக்கம் – அந்த பஸ் கம்பெனி அலுவலகம். வாசலை நெருங்கினதும் மாரிமுத்து அவசரமாகத் திரும்பி இவனிடம் மெல்லச் சொன்னான்:

"ஒன்னோட நல்ல நேரம்பா. பெரீவரே கிறாரு... இப்டீ ஒரமா நில்லூ. உள்ளாற போயி அவரக் கண்டுக்னு வந்துர்றேன்..."

–தலையை ஆட்டிவிட்டு இவன் நின்றிருந்தான்.

மாரிமுத்து அலுவலகத்திற்குள் நுழையும்போது–'பெரீவர்', மேனேஜரிடம் கத்திக்கொண்டிருந்தார்:

"...ஏய்யா.. ஒனக்கு அறிவு, கிறிவு இருக்கா....? பேமானி...! நேத்தே ஒங்கிட்ட படிச்சுப் படிச்சு சொன்னனே. அந்த மயிரு ஆபீஸர வூட்லயே போயி கண்டுக்னு வந்துருண்ணு...! ஏய்யா போகல? இப்ப பாரு அவன் இதாண்டா சாக்குண்னு வண்டிய மடக்கிட்டான்!"

–மேனேஜர் தலையைக் குனிந்தபடி நின்றார். பதினைந்து வருஷத்திற்கும் மேலாக இந்த மாதிரி பேச்சுக் கேட்டுக் கேட்டுத் தடித்துப்போன தோல். ஒன்றும் உறைக்காத முகத்துடன் நின்றார்...

"சரி சரி... மரமாட்டம் நிக்காத! கேஷியரு கிட்டப்போயி நாஞ் சொன்ன கேஷ வாங்கிக்க. போ. போயி கோர்ட்டுல அவனப்பாத்து அமுத்திட்டு வந்திரு. நாளைக்கே வண்டிய ரிலீஸ் பண்ற மாதிரி செட்டப்பண்ணச்சொல்லி கேட்டாரு மொதலாளின்னு சொல்லு. அப்பிடியே... போறது போற... அங்க அந்த பெஞ்சு கிளார்க். தோலான், துருத்தின்னு கிறானுங்களே... அவனுங்களுக்கும் அஞ்சு – பத்துன்னு விசிறியடிச்சுட்டு வந்துரு... இன்னா?"

–மேனேஜர் தலையசைத்து நகர்ந்தார். பெரியவர், "உஸ்... அப்பாடா...! இன்னா வெயிலு... மண்டயப் பொளக்குதே!" என்று முனுத்தார். வியர்த்துக்கொட்டிய உடம்பை மேல் துண்டால் துடைத்தபடி ஈஸிசேரில் சாய்ந்தார். சாய்ந்து முன்னும் – பின்னும் உடம்பை ஆட்டிக்கொண்டே ஆபீசுக்



படிப்பகம்

www.padippakam.com

குள் பார்வையைச் சுழற்றினார்.

மாரிமுத்து. பவ்வியமாகப் பெரியவரின் முன்னே போய் நின்று கும்பிடு போட்டான். பெரியவரின் கண்கள் திறந்துதானிருந்தன. நேர் எதிரே இவன் குழைந்து நிற்பதை அந்தக் கண்கள்பார்த்துக் கொண்டு தானிருந்திருக்கும்...! கொஞ்ச நேரம் எந்தச் சலனமும் இல்லை.

"எங்கடா வந்தே...? பேமானி.. வண்டிய வுட்டு எறங்குனா, ஆபீஸ் பக்கம் வரமாட் டியா?"

"அய்யோ, மொத லாளி... நேத்தைக்கிக் கூட வந்திட்டுதாம் போனங்க..."

"சரி சரி, வந்த வேல யச் சொல்லுடா...!"


"நம்ம பையன் ஒருத் தனக் கூட்டியாந்திருக் கன், மொதலாளி, வேல கத்துக்கணும்னு பிரியப்படறான்... அய்யா பெரீய மனசு பண்ணனும்..."

"இப்ப எங்கடா வேலை இருக்கு...? இருக்குற வண்டிய வித்துட்டுப் போயிறலாம்னு அவனவன் ரோசன பண்றப்ப, இவன் வந்துட்டான்... வேலக்கி ஆளக் கூட்டிக்னு, போடா...!"

"அய்யா மனசு வெச்சா ஒரு நல்ல வழி காட்டலாங்க... நல்ல வெனய மான பையங்க..."

"ஆமாங்கடா... ஒங்கள மாதிரி வர்றவனுக்கெல்லாம் பெரிய மனசு பண்ணிட்டே இருந்தா கடசில நடுத் தெருவுல நிக்க வேண்டியதுதான்! சரி... கொஞ்ச நாளக்கி ஆபிஸ்லயே இருக்கச் சொல்லு... அப்பால வேணா லைன்ல அனுப்பீறலாம்... ஆமா, டெபாஸிட் கட்டச் சொன்னா கட்டு வானுல்ல...?"

"ஆமாங்கய்யா... கரீட்டா அல் லாத்தயும் விலாவரியா சொல்லித்



தாங்க இட்டாந்துருக்கேன்... அய்யா எண்ணிக்குச் சொல்றாரோ அன் னிக்கே பணம் கட்டுவாங்க..."

"சரி, பையன் வந்துருக்கானா... கூப்புடு, பாக்கலாம்..."

–மாரிமுத்து தடதடவென்று வெளியே வந்து எட்டிப்பார்த்து இவனை அவசரமாகக் கூப்பிட்டான். ஏதோ யோசனையில் இருந்தவன், மாரிமுத்து கூப்பிட்டதைக் கவனிக்க வில்லை..!

"ஏய், இந்தாப்பா...!" – என்று அடிக் குரலில் கத்தினான் , மாரிமுத்து.



படிப்பகம்

www.padippakam.com

தூக்கிவாரிப்போட்டது இவனுக்கு. அதே படபடப்புடன் மாரிமுத்துவைத் தொடர்ந்து உள்ளே போய் நின்றான்.

"அய்யா... இவன்தாங்க நாஞ் சொன்ன ஆளு..."

–பெரியவர் இவனை ஏற இறங்க பார்வையால் அளந்தார். துவைத்துத் துவைத்து அயர்ன் பண்ணாமல் நீர்க்காவி ஏறிய பேன்ட்டும், சட்டையும், பளபளப்பை இழந்து துவண்டு சுருங்கினவை. மெலிந்த உடல், கன்னங்களில், நெஞ்சில், கால் கைகளில் துருத்திக்கொண்டு நிற்கும் எலும்புகள். வரி வரியாகக் கைகளில் புடைத்து நிற்கும் நரம்புகள், வறண்டு, எண்ணெய்ப் பசையற்றுப் போன தலை, எதிலுமே நம்பிக்கையற்று, உயிர்ப்பேதுமின்றி மலங்க விழிக்கும் கண்கள்...! முகத்தை இறுக்கமாக்கிக் கொண்டு பெரியவர் வாயைத் திறந்தார்:

"ஓம் பேரென்ன...?"

"முரளீதரன் சார்... 'முரளி'ன்னு..."

"கூப்புடுவாங்களாக்கும்...! எதுவரை படிச்சிருக்க?"

" பிளஸ் டூ வரைக்குங்க அய்யா"

–பெரியவர் அதற்கு மேல் பேசவில்லை. முகம் மேலும் இறுக்கமானது. கொஞ்ச நேரம் ஏதோ திவிரமாக யோசித்தார். பின் திரும்பி மாரிமுத்துவைப் பார்த்தார். அவன், பெரியவர் வாயிலிருந்து உதிரப்போகும் முத்துக்களைப் பொறுக்கவே பிறவி எடுத்தவன் போல் பவ்யமாக நின்றான்.

"நீ இட்டாந்தவங்கறதால பாக்கலாண்ணு எடுத்துக்கறேன். இன்னிக்கே வேலயில சேரச்சொல்லு. வேலை பளகி பைய்யி வாங்கற வரைக்கும் சம்பளமெல்லாம் ஒண்ணுமில்ல... அத்த சொல்லீருக்கல்ல..? இவுரு படிப்பயெல்லாத்தயும்

## இருந்தும்...

நீ
நான் இல்லை.
நண்பா.

நீயும்
நானும்
இருவேறு
உயிர்கள்...

உடல்கள்
வேறு.
உணவும்
உடையும்
வேறு வேறு.

இனமும்
மதமும்
மொழியும்
வேறு.

இதுபோல்
இன்னும்
எத்தனை
வேறு.

நீ
நான் இல்லை
நண்பா.

எனக்கும்
உனக்கும்
இருவேறு
இயக்கம்

இருந்தும்
நமக்குள்
ஒன்றாய்
நாம்.

–பா.பாஸ்கரன்



படிப்பகம்

www.padippakam.com

காம்பவுண்டுக்கு அப்பாலயே வுட்டுட்டு வரச்சொல்லு...! உள்ளாற வந்த ஒடன இங்க இன்னா வேலை சொல்றமோ – அத்தப் பணிவா, அடக்கமாச் செஞ்சா சர்த்தான்! பெருக்குண்னா பெருக்கணும்; காப்பி வாங்கியாரச் சொன்னா வாங்கியாரணும்...! அத்தச் செய்ய மாட்டன், இத்தப் பண்ண மாட்டண்னு வாயத் தொறந்தா வூட்டுக்குப் போயிரணும்... இன்னா சர்த்தான...? அல்லாத்தயும் சப்ஜாடா சொல்லி வெய்யி... போ!"

–பெரியவர் முடித்துவிட்டு, 'அவ்வளவுதான்' என்கிற மாதிரி ஈஸிசேரின் எதிரே கிடந்த மோடாவின் மேல் கால்களைத் தூக்கிப்போட்டுக் கொண்டார். கண்களை மூடி மல்லாந்தார்.

மாரிமுத்து அவசரமாக முரளீதரனைப் பார்த்து சாடை காட்டிவிட்டு வெளியே வந்தான்.

"ஜங்ஷன் எல்லாம் எறங்கு... சீக்ரம்...யோவ். எறங்குய்யா...! ஸ்டாப்பிங் வாரதுக்கு மின்னாடியே ஏந்திரிச்சு வந்து தொலைங்களேய்யா!"

–ஜங்ஷன் மெயின் ரோடிலிருந்து உள்ளே தள்ளி இருக்கிறது. ஆனால், மேம்பால ஏற்றத்திலேயே மெயின் ரோடில் பஸ்கள் நிற்கின்றன. எந்த பிரைவேட் பஸ்சும் உள்ளேபோவதில்லை இங்கேயே நிற்கிறார்களே என்று பெரிய பெரிய சூட்கேசுகள், கைப்பைகள், பெட்டிகள், ஹோல்டால்கள் பஸ்ஸிற்குள்ளேயே தயங்கிப் பம்மின. இங்கேயிருந்து ஜங்ஷன் கட்டிடம் வரை சுமைகளைத் தூக்கி நடக்கணுமா? பஸ்காரன் உள்ளே போவதாகத் தெரியவில்லை. எல்லாரும் அவசரமாக இறங்கத்தான் வேண்டும்... பஸ் கண்டக்டர், 'செக்கிங்'குகளின் முரட்டுக் கத்தலுக்கும், சகல வசவுகளுக்கும் பயந்துகொண்டு பெட்டி படுக்கைகளோடு முட்டி மோதி இறங்கும் மனிதர்கள்...!

"ஏய்யா... ஜங்ஷனுக்கு உள்ற போவ மாட்டீங்களா?"

"யாருய்யா அது...? உள்ளாரவெல்லாம் போவாது... எறங்கு சீக்








படிப்பகம்

www.padippakam.com

ரமா... பேஜாரு பண்ணாத..."

"ஏய்யா போவாது...? ஜங்ஷனுக் குள்ளாற எல்லா பஸ்சும் கட்டாயமா போவணும்னு பேப்பர்ல போட்டிருக் காங்கள்ல...?"

"பேப்பர்லயா...? சரி, அதுல போடறதெல்லாம் அப்பிடியே நடந் துரணுமாக்கும்...?"

"என்னய்யா இது, அநியாய மாயிருக்கே...? சில்க் மில்லுல இருந்து டவுன்ஷிப் உள்ளார போய்ட்டுத் தான் வரணுமின்னு ரூட்டு. நெனச்சா திடீர்னு நேரா வந்துடறீங்க... உள் ளார போவாதுண்ணு பஸ்சுல டிக்கிட் போடறப்ப சொல்றதுமில்ல. சில்க் மில்லுல வந்து பஸ்ச நிப்பாட்ன ஒடன திடீர்னு நேராய் போவுதும்பீங்க... இங்க என்னடாண்ணா ஜங்ஷனுக் குள்ளேயே போவாம இத்தினி பேரயும் மெயின் ரோடுலயே எறக்கி வுடறீங்க... ஒங்கள ஒன்னு கேக்க இந்த ஊர்ல ஒருத்தனும் இல்லியா..?"


"அதான நீ வந்துட்டியே மச்சான்... தகிரியமா கேளு. முடிஞ்சா மேட போட்டுப் பேசு.. சும்மா மஜாவா கேப்பாங்க ஆபீசருங்க...!"

"காம்ப்ளெய்ணட் பண்றனா. இல்லியா பாரு...!"

"கம்ப்ளெய்ண்ட் பண்ணணுமா நயினா... வண்டி நம்பரு தரட்டுமா? எம் பேரு, டிரைவர் பேரு, செக்கிங்கு பேரு, ஒனரு பேரு, அல்லாப்பேரயும் தர்றம்மா கண்ணு... ஆருகிட்டப் போயி கம்ப்ளெய்ண்டு பண்ணனும். னாலும் பண்ணு... எவனும் எங்க மசுரக்கூடப் புடுங்க முடியாது. ஆமா!"

இதற்குள் ஹாரனை அலற விட்டு ஒய்ந்த டிரைவர் காட்டுக் கத்தலாய்க் கத்தினான்.

"டே, டே... பேமானிங்களா.. அங்க இன்னாடா அவங்கிட்ட நாயம் பேசிக்னு...! அத்தினி பேரும் மூடிக்னு எறங்கிப் பூட்டானுங்க. இவன் ஒத் தன்தா இன்னாவோ பெரீய்ய மசுரு மாதிரிப் பேசிக்னுகிறான்... அவன எறக்கித் தூரப் போடாண்னு சொல் லீட்டு ரைட் குடுங்கடா...!"



–கழுத்தில் கை வைத்துத் தள்ளாத குறையாக அவன் இறக்கிவிடப்பட் டான். சூட்கேசும், தோல் பையுமாக இறங்கி அவன் நடக்க ஆரம்பித்த போது – இரண்டு பேர், மூன்று பேராக பெட்டி – படுக்கைகள் – ஹோல்டால்களுடன் நடந்து கொண் டிருந்தவர்களிடமிருந்து சளசள வென்று முணுமுணுப்புக்கள் எழுந் தன:

– முகங்களே அற்றவை அந்த முணுமுணுப்புக்கள். ஒங்கி ஓர் அதட்டல் குரலில் – துச்சமான வசவில் எழுந்த இடம் தெரியாமல் அடங்கி விடுபவை.



படிப்பகம்

www.padippakam.com

–இவன் மூண்டெழுந்த எரிச்சலு டன் ஸ்டேஷனுக்குள் நுழைந்தான்.

"டேய்... இந்த ஜன்னல்ல இன் னாடா இது? ஆபீசுக்குள்ளார வந்தா எல்லாம் சுத்தமா இருக்கா, இல்லி யாண்னு பாக்க மாட்டியா நீ...?"

–முரளீதரன் அதிர்ந்து போய் நிமிர்ந்தான். உள்ளே நுழைந்ததும் கர்ணகடூரமான குரலில் கத்திக் கொண்டு வந்து நின்றது பெரியவர் தான்.அவர் யாரைச் சத்தம் போடுகி றார் என்பது கூடத் சட்டென்று பிடி படாமல், கை கால்கள் பதற நின்றான் முரளி.

"...ஒன்னத்தாண்டா, கம்னாட்டி...! இன்னாவோ பே முழி முழிச்சுக்னு நிக்கிறியே...? உள்ள வந்த உடன டேபிள், சேர் அல்லாத்தயும் சுத்தமாத் தொடச்சி வெய்யி... ஜன்னல்ல பாரு, ஏம்மாந் தூசி... சுத்தமாத் தொட! ஆபீசு ரூம்பு பெருக்கிகிறாங்களா, பாரு... இல்லண்ணா நீதான் அத்த சுத்தம்பண்ணனும், தெரியுதா...?"

முரளீதரன், தலையைக் குனிந்து கொண்டு ஜன்னல் அருகே போனான். மூலையில் கிடந்த துணிச் சுருளை எடுத்து உதறியபின் சுருட் டிக் கையில் எடுத்துக்கொண்டு ஜன் னல் கம்பியிலும், குறுக்குச் சட்டங் களிலும் மாவு போலப் படிந்திருந்த தூசியைத் தட்டித் துடைத்தான். அடுத்து ஜன்னல், திரும்பி எதிர்பக்கம் மூன்றாவது ஜன்னல், கடைசியாக நான்காவது.

பெரியவர் ஈஸிசேரில் அமர்ந்திருந் தார். கண்கள் துழாவித் திரிந்து கொண்டிருந்தன. முகத்தில் திருப்தி யின் மீது படிய வைக்கப்பட்ட கடு கடுப்புத் தூசி.

"... இத நா வந்து பாத்துச் சொன் னப்புறம்தான் செய்வியா? எதுலயும் வெனயமா, சுறுசுறுப்பா இருக்கணும்... படிச்சவன்னா இதெல்லாம் பண்ணக் கூடாதுண்ணு நெனப்பு இருந்தா, இன்னியோட வுட்டுரு...!"

பெரியவர் எழுந்து மேசையின் பின் போய் அமர்ந்தார்.

"அந்த மேனேஜர வரச் சொல் லுபா..."

மேனேஜர் வந்தார். முகப்பணிவு, கக்கத்தில் தோல் பை, வலது கையில் ஒரு காகிதம்.

"அய்யா... போன வாரம் கலெக் ஷன் சீட்டுங்க... இதுல பளனி கணக் குல கொறஞ்சேதாங்க இருக்கு. மாரி முத்து டூட்டிய வுட்டு ஏறங்கிகி றாங்க..."

காகிதத்தைக் கையில் வாங்கி மேலோட்டமாக ஒரு பார்வை பார்த் தார் பெரியவர்.

"அந்த பளனி பய ஷெட்டுல கிறானா, போயிட்டானா... பாரு..."

மேனேஜருக்கு, பெரியவர் பழனி யைக் கேட்பதன் அர்த்தம் தெரியும். பேசாமல் வெளியே போனார், ஷெட் டின் ஓரமாக நிற்கும்படி சொல்லி விட்டு வந்திருந்த பழனியைக் கையைக் காட்டி அழைத்தார். அவன் ஓடிவந்தான்.

"இன்னா, ஸார்... பெரீவரு கிட்ட மண்டகப்படிதானா?"

மேனேஜர் சுள்ளென்று விழுந் தார் அவனிடம்...

"ஆமாங்கடா...! ஒங்களுக்கும் பெல்ட்லே அடிச்சாக்கூட புத்தியே வர்றதில்ல... கலெக்ஷன் சீட்டுல



படிப்பகம்

www.padippakam.com

கொறச்சலா கிதுன்னு அவுரு கண்ணுல படாம பாத்துக்கங்க டாண்னா ஒரு வாரமா கொறச்ச லாவே இருக்கு...! அந்த மனுஷங்கிட்ட யாரால பேச முடியுது...? போயிச் சொல்லு நீயே...!"

– பழனி 'பெரீவர்' ரூமை நோக்கிப் போனான். ரூம் வாசலில் நிழலாடிய துமே உள்ளிருந்து வசவுகள் சரமாரி யாக வெளிவந்தன. பழனி தொங்கின முகத்துடன் நின்றான்.

"அந்த டிரைவரு விசுக்குண்னு ஓட்ட மாட்டோம்கிறான், அய்யா... டைம் பிக்கப்பு இல்ல. பீக் அவர்ல ரொம்ப பயப்படறான்... பின்னாடி டைம்காரவுங்க சைடு வாங்கிக்னு பூடறாங்கய்யா... கவர்மென்ட் கார னுங்கள காலியா வுட்டுட்டு நம்ம வண்டி லோடாவுற மாதிரி ஓட்டணும்னா, அதக் கேக்கவே மாட்டேங்கிறாங்க..."

–பெரியவர் இதைக் காதிலேயே வாங்காத தோரணையில் வசவு மழை பொழிந்துவிட்டு நிமிர்ந் தார்....

"சரி..சரி.. போய்த் தொலை ங்க. அந்த டிரைவர் பயவரட் டும். சொன்னபடி கேக்க லேண்னா பேசாம வூட்டுக்குப் போயிப் படுத்துக்கடாண்னு அனுப்பிச்சர்றேன்..."

–பழனி தலையைக் குனிந்து கொண்டு வெளியேறி னான்., ஷெட்டை விட்டுப் போகும்போது மேனேஜரின் குரல் கேட்டது:

".. இன்னாடா... வாங்கிக் கட்டிக் னியா...? அடுத்த டுட்டி யிலயாச்சும் பாத்துச் செய்யி. ஒன்னோட படிக்காசுலயும் தானடா கொறயும்...?"

–தலையாட்டியபடியே பழனி வெளியே போய்க்கொண்டிருந்தான்.

முரளீதரன், 1-ம் நம்பர் பஸ் ரூட்டில் அன்று முதல் கண்டக்டர் வேலைக்காக டிரெய்னிங்குக்குப் போனான். பெரியவர் சொல்லி, மேனேஜர் அவனை அனுப்பியிருந் தார். வேலையில் சேர்ந்த இந்தப் பத் துப் பதினைந்து நாட்களில் அவன் தோல் ஒரு சுற்றுத் தடித்திருந்தது. முன்பெல்லாம் காதில் விழுந்தாலே இவன் உடம்பைக் கூசவைக்கும்படி யான வார்த்தைகள் – இப்போது சர்வ சாதாரணமாக இவன் வாயிலேயே வரும்போல இருந்தன. முதலில் 'ஒன்' ரூட்டில் போவதுதான் நல்லது என்று மேனேஜர் சொல்லியிருந்தார். கொஞ் சம் நெரிசல் குறைவான ரூட். புதுசாக வேலை பழகுவதற்கு டூ ரூட்டைவிட இது பரவாயில்லை.

பேலஸிலிருந்து திரும்பி பஸ் அம்





படிப்பகம்

www.padippakam.com

பேத்கர் சிலை அருகே வரும்போது பஸ் ஸ்டாண்டை நோக்கி முன்னால் ஒரு அரசு பஸ்: அதற்கும் முன்னால் 'ஸ்ரீராம்' பஸ். ஒன்பது இருபது. ஒன்பது முப்பத்தஞ்சு டைம்–பஸ் ஸ்டாண்டில். ஒன்பது இருபத்தஞ்சு ஆகியும் ஸ்ரீராம்காரன் நகரவில்லை. அவனைப் போகவிட்டு முப்பதஞ்சு டைமுக்கு அரசு பஸ் நகர்ந்தால் பஸ் ஸ்டாப்பில் ஈ காக்கை இருக்காது. பீக் அவர்தான். கொஞ்ச நேரத்தில் மறுபடி ஜனம் குவிந்துவிடும்.

என்றாலும் இந்த 'டிரிபிள் எஸ்' கண்டக்டர் 'லபோ, லபோ'வென்று கத்திக்கொண்டு ஸ்ரீராம் காரனிடம் சண்டைக்குப் போனான். முரளீதரன் படியில் நின்றபடி எட்டிப்பார்த்தான்... அரசு பஸ் காரனுக்கும் வசை மாரி கிடைத்தது.

அம்மா, முரளீதரன் கொண்டு வந்து கொடுத்த பணத்தை வாங்கி எண்ணிப் பார்த்தாள். பதினைந்து நாள் டியூட்டி முடிந்து வந்திருக்கிறான். அடுத்த ஒரு வாரம் – பத்துநாள் வரை ஓய்வு.

"சம்பளம் எவ்வளவுப்பா...?"

"சம்பளம்னு தனியா ஒண்ணுமில்லம்மா... தெனப்படி வசூலாகறதப் பொறுத்து நமக்கு வர்ற பணம் இருக்கும்..."

– அம்மா விழித்தாள். முரளீதரன் அவளுக்கும், தனக்கும் கூடச் சொல்லிக் கொள்கிறவன் போல விளக்கம் தந்தான்.

"நா டூட்டி பாக்கற வண்டில, ஒரு நாளக்கி ஆயிர ரூவா வசூலானா சம்பளம்னு ஒண்ணுமிருக்காது. ஆயிர ரூவாய்க்கி மேல போற ஒவ்வொரு நூறு ரூவாய்க்கும் முப்பது ரூவா...! அதுல டிரைவரும் கண்டக்டருமா பிரிச்சுக்குவம்..."

–அம்மா மலைத்தாள்.

"ஆயிர ரூவாய்க்கி மேலயா...? அம்புட்டு ரூவா வருமா?"

"ஆகுதும்மா... இந்த ஊர்ல இருக்கற மெயின் ரூட் ரெண்டுதான... அந்த ரூட்லதான் எல்லா முக்கியமான எடங்களும் வருது..."

"என்னமோ... நீ வேலயில சேந்தப்போ கட்ணமே மூவாயிர ரூவா... அத்த திருப்பிக் குடுப்பாங்களா...?"

"அது..." – முரளீதரன் தயங்கினான். அம்மா கேள்விக்குறியுடன் இவன் முகத்தையே பார்த்தாள்.

"நா இந்த பஸ் கம்பேனி வேலய வுட்டு நிக்கப்போறேன்னு வச்சுக்க... அப்பதாம்மா இத குடுப்பாங்க... அதுவரைக்கும் அவுங்க கிட்டயேதான் நம்ம ரூவா இருக்கும்..."

–முரளியின் வார்த்தைகளில் அவனுக்கே நம்பிக்கை இல்லாத தொனி ஒலித்தது. அதற்கு மேல் அந்தப் பேச்சைத் தொடராமல் அம்மா சமையல் கட்டுக்குப் போனாள்.

பதினைந்து நாட்கள்... ஒன் ரூட்... டூ ரூட்... மாறி மாறி டியூட்டி பார்த்த அலுப்பு... முரளீதரன் கிணற்றடிக்குப் போனான். வாளி வாளியாக நீரை இறைத்து வாரிக்கொட்டிக்கொண்டான்.

குளிர்ந்த நீர், தலை வழிந்து நெற்றி – காதுகளில் இறங்கி, காதுகளை நிறைத்தது. பின் கழுத்து தோள் இறங்கி விரைந்தது. குட்



படிப்பகம்

www.padippakam.com

பென்று ஒரு கணம் காது அடைத்துக்கொண்டது அவனுக்கு.

"ஒன் ரூட்...

டு ரூட்... ஏறு...

எறங்கு...

ஏ. கறுப்பு சட்ட...

கம்பியக் கட்டிக்கனே நிக்காத...

முன்னாடி போ...

ஏ. மஞ்சள் பைய்யி...

பின்னாடி போ...! டிக்கிட்.. டிக்கிட்..!

டே, பேமானி... இன்னாடா ஒங்க டைமு...?"

– நறநறவென்று சாலைகள் அடைபட்டன. நகரத்து மனிதர்களின் தலைகளை, உடம்புகளை, கை – கால்கலை அரைத்து நொறுக்கிக் கொண்டு டவுன் பஸ்களின் டயர்கள் கர்ண கடூர இரைச்சலிட்டன. 'சர்ரக்'கென்று சாலைகளின் நடு வயிறுகளில் கத்திகள் இறங்கின...! முரளீதரனின் தொண்டை, அதன் முந்தைய மென்மையை இழந்து காதுகள் கிழிபட அலறும் லவுட் ஸ்பீக்கராகியிருந்தது. கக்கத்தில் இடுங்கி, கைகளில் குலுங்கிக் குலுங்கி – உப்பியும், இளைத்தும், சிதைந்தும் வியர்வை ஊறி நைந்த அந்தப் பை...

'பையை நினைத்ததும் 'கண்டக்டர்' ஆகத், தான் அவதாரமெடுத்த முதல் நாள் ஞாபகத்தில் வந்தது...

**(தொடரும்)**

# பூனையும் பூனைப் படமும்



*பூனைப் படமொன்று*
*அழகுக்கென மாட்டினேன்*
*வீட்டில்.*
*அடிக்கடி பால் காணாமல்*
*போகிறதென்றாள்*
*மனைவி.*
*ராத்திரியில் 'மியாவ்' சத்தம்*
*கேட்கிறதென்றான் மகன்.*
*இப்போது எலிகளைக் காணோம்*
*என்றாள் மகள் தன் பங்குக்கு.*

*பின்னொரு நாள் மாலை,*
*வீட்டினுள் புகுந்து*
*பாலைக் குடித்த தெருப்*
*பூனையை*
*பிரம்புடன் என் மனைவியும்*
*'விடாதே' என்று பிள்ளைகளும்*
*விரட்டிக் கொண்டு*
*ஓடினார்கள்.*

**– சி.ஜி.ராமதாஸ்**



படிப்பகம்

## வாசகர்

மேலாண்மையின் 'மண்நீதி' படித்தேன். பெண்கள் ஒரு போகப் பொருளாக பார்க்கிற சமூகத்தையும், மனுநீதி சொல்லும் பிற்போக்கான மரபுகளையும் தனது கதையில் எளிதாக சொல்கிறார். காலங்காலமாய் நிலவி வருகிற மனு தர்மத்தின் உள் சிக்கல்களை எளிதாக அவிழ்த்து விட்டிருக்கிறார். அற்புதமான சிறுகதை. காலவெள்ளத்தில் கொஞ்சம் கொஞ்சமாய் மனுநீதியை அடித்து நொறுக்க வேண்டிய பங்களிப்பு நம் ஒவ்வொருவருக்கும் உண்டென்பதை கதையின் வாயிலாக உணர வேண்டும். பிற்போக்குத்தனம், மூடநம்பிக்கைகள் ஒழிய வேண்டும். சில இடங்களில் பிரச்சார நெடி மேலோங்குகிறது. சற்றே வித்தியாசமான கதை.

**– *விழி.பா.இதயவேந்தன், சாலாமேடு.***

வளர்ந்துவரும் அநாகரீக விளம்பரப் படங்களைக் கட்டுப்படுத்த, மக்கள் விழிப்புணர்வு ஏற்பட சோழ. நாகராஜனின் கட்டுரை தூண்டுகோலாக அமைந்துள்ளது. சின்னத்திரை மூலம் விளம்பரப் படங்கள் வீட்டிற்குள்ளேயே வந்து விபரீதங்களை விளைவிப்பதால், அரங்குகளில் வெளியிடப்படும் படங்களுக்குத் தணிக்கை இருப்பது போல், இவ்விளம்பரப் படங்களுக் கும் தணிக்கை முறை வைக்க அரசை வலியுறுத்தி, சமுதாய நலம் விரும்பும் அமைப்புகள் இயக்கங்கள் நடத்த வேண்டும்.

**– *நா.திருமலை, மதுரை – 16.***

'சுதந்திரப்போர்' நிகழ்வுகளை ஒரு தொலைக்காட்சி அலைவரிசையின் நேரடி ஒளிபரப்புப்போல் இந்த ஆகஸ்ட் மாதத்தில் வெளியிட்டது பெரும் சிறப்பு. அல்லி உதயனின் 'பிடிமானம்' சிறுகதை – சமீபத்திய 'விவசாயிகளின் தற்கொலை'களை நினைவுக்குத் தந்தது. வறுமை மீளமுடியாத அந்த விவசாயச் சகோதரர்களும் 'பிடிமானம்' கிடைத்து பழனியம்மாள் குடும்பத்தைப் போல திரு(ந்தி)ம்பி இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? ரவிக்குமாரின் நேர்காணல் அவருடைய நிலைப்பாட்டை எடுத்துரைப்பதாக இருந்தது. 'இருபதிலிருந்து...' – ஸ்ரீரசாவின் உழைப்பு, ஒவ்வொரு வார்த்தையிலும் ஒட்டியிருக்கிறது.

**– *அ.உமர்பாரூக், அய்.தமிழ்மணி, கம்பம்***

டி.வி., விளம்பரங்களின் திட்டமிட்ட விபரீதம் பற்றிய சோழநாகராஜன் அவர்களின் சிறப்பு ஆய்வு பிரமாதம். அனைத்து உண்மைகளையும் அச்சாக தெரிவித்து விட்டார்.

**– *வெ.நரசிம்மன் சென்னை***

சுதந்திர நாளில் விஸ்வநாததாஸை நினைவுகூர்ந்தது சாலப் பொருத்தமே! தொலைக்காட்சியின் விளம்பரங்களை சரியாகத் தோலுரித்துக் காட்டியுள்ளீர்கள்!

**– *பாச்சுடர் வளவ. துரையன், இருட்டிணாபுரம்***

பின்நவீனத்துவம் மரபுக்கு இயைபுபடுத்துகிற வேலையைச்



www.padippakam.com
படிப்பகம்

செய்கின்ற துவேஷ மனப்பான்மையை தக்கவைத்துக் கொண்டுள்ளது எனும் ரவிக்குமாரின் கூற்று சரியானதே என்பதை பின்நவீனத்துவவாதிகளின் செயல்பாடுகளைக் கொண்டே அறிந்துகொள்ளலாம்.

*– கு.ரா.*

*மேட்டூர் அணை – 6*

இரவிக்குமாரின் நேர்காணல் செம்மலருக்கு பொருத்தமா? உழைக்கும் மக்களிடம் தலித்தியம் பேசி தலித்துக்களுக்காக பிறர் பேசுவது, எழுதுவது, போராடுவது எல்லாம் பொய். அவர்கள் விடுதலையை அவர்கள்தான் சாதிக்க வேண்டும் – முடியும் என முழங்கி யவர், சமூக மாற்றத்தின் உந்துசக்தியாக இருக்கும் உழைக்கும் மக்களை மார்க்சியத்தின் மீதும், புரட்சிகர இயக்கங்கள் மீதும் நம்பிக்கை கொள்ளவிடாமல் உழைக்கும் மக்களுக்கிடையே பிரிவினையை உண்டு பண்ணி சாதியத்திற்கு பதியம் போடும் பின்நவீனத்துவவாதியின் கருத்துக்கள் செம்மலரின் பக்கங்களில் பதிவாக வேண்டியதில்லை.

***ம.சொ விழுப்புரம்***

*அ*ரசமரத்தைப் பற்றிய எஸ்.ஏ.பியின் கட்டுரை பயனுள்ள பல செய்திகளைத் தந்தது. ஸ்ரீரசாவின் 'உறவே... உறவே!' கவிதை ஒரு பாடலாகவே இருந்தது. பாராட்டுக்கள்

***– கவிபாலா, சிலட்டூர்***

"**பிரியமான** தோழர் பி.ஆர்.பி. கட்டுரை படித்தேன். பல பரிமாணங்களில் அவரின் தியாகமும், திறமையும் தெரியவந்தது. திண்ணைப்பேச்சு – கறுப்பு நாயும் புது மாப்பிள்ளையும் சிந்தனையோடு கூடிய நகைச்சுவை. ஊர்ப்பெரியவர்களின் இரவு முகமூடி திருட்டும் பஞ்சாயத்தாராக அமர்ந்து தீர்ப்பு சொல்லும் விதத்தையுமாக அவர்களின் இரட்டை வேடத்தை கிழித்தெறிந்துள்ளார் மதுக்கூர்.

***– கல்யாணி நடராஜன்,***

***வடபாதி மங்கலம்.***

'பஞ்சாப் படுகொலை' படிக்கும் போதே கண் மட்டுமல்ல. மனமும் கசிந்தது. பல்லாயிரம் பேரை மரணம் கொண்டு விடுதலைப் பெற்ற நம் இந்திய தேசம் இன்று எங்கு செல்கிறது என்று எண்ணும் போது மனம் மேலும் கசிகின்றது.

***– க.பால்ராஜ்,***

***திருச்சென்னம்பூண்டி.***

'**கறுப்பு** நாயும் – புதுமாப்பிள்ளையும்' வயிறு குலுங்க சிரிக்க வைத்தது.

***– ரா.தட்சிணமூர்த்தி,***

***கடலூர்.***






www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

இளமதி பதில்கள்



# கலைஞர் மனசாட்சிக்குப் பயந்தவரா?

✉ ஏகலைவன்,
இராஜபாளையம்

**செம்மலரில் ஒரு கவிதை வெளி வரவேண்டுமானால் அது செம் மையாக எழுதப்பட்டிருந்தால் மட்டும் போதாது, 'செம்'மை யாலும் எழுதப்பட்டிருக்க வேண்டும் என நண்பன் ஒருவன் கூறுகிறானே?**

அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. கருமையால் எழுதப்பட்டிருந்தாலும் வெளியிடப்படும். இருமையால் எழுதியிருந்தால்தான் சிக்கல்!

✉ ஆர்.கே.எஸ்.சம்சுகனி,
டி.மாரியூர்

**நடிகைகள் பெரும்பாலும் பிஜேபி கட்சியில் சேர்வதன் நோக்கம் என்ன?**

வருமானவரி இலாகா மத்தியில் தானே உள்ளது! அப்புறம்... பெரும் பாலும் அவர்கள் உயர் சாதிகளிலிருந்து வருவது.

**மனிதன் தோன்றி ஐயாயிரம் ஆண்டு என்றும், ஐம்பதாயிரம் ஆண்டு என்றும் சொல்கிறார் களே, எது சரியானது?**

குரங்கிலிருந்து மனிதனைப் பிரிப்பது தன் கைகளை உபயோகித்துக் கருவி களைச் செய்தது. கம்போ கல்லோ முதல் கருவியாக இருந்திருக்கும். அவன் தோன்றி எழுபதாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. சக்கிமுக்கிக் கல்லாலான ஈட்டியைத் தயாரித்த அவனின் பெயர் நியாண்டர்தால் மனிதன்.

**சுயாட்சிக்கும் மாநில சுயாட்சிக் கும் வித்தியாசம் உண்டா?**

மாநிலம் என்றாலே ஒரு நாட்டுக் குள் அடங்கியது, தனி நாடு அல்ல என்பது தெளிவாகிவிடுகிறது. இதைப் புரிந்துகொள்ளாமல் சிலர் மாநில சுயாட் சிக்கு எதிர்ப்பு தெரிவித்து வருவது



படிப்பகம்

www.padippakam.com

நியாயமற்றது.

**வேதாந்தக் கருத்துக்களில் நடைமுறைக்கு ஏற்றவை எதுவும் உண்டா?**

கதா உபநிஷத்தில் நசிகேதாஸ் என்பவன் யமனிடம், "மரணத்திற்குப் பிறகு வாழ்வு உண்டா" என்று கேட்பான். "அது பற்றிக் கடவுளர்களுக்கே சந்தேகம் உண்டு. அந்தக் கேள்வியை விடு. வேறு வரம் கேள். உனக்கு மிகுந்த செல்வம் தருகிறேன்" என்று பதில் சொல்வான் யமன். நசிகேதாஸோ அதற்கெல்லாம் மயங்காமல், தான் கேட்ட கேள்வியிலேயே நிற்பான். அதற்கான பதிலே தனக்கு வேண்டிய வரம் என்று சொல்லிவிடுவான். அறிவுத் தேடலில் இறங்குபவர்கள் செல்வத்தில் மயங்கி விடக்கூடாது என்கிற நல்லதொரு செய்தி இதில் உள்ளது. பட்டம், பதவி, விருது என்பவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். கவனித்தீர்களா? மரணத்திற்குப் பிறகு வாழ்வு உண்டா என்பது பற்றி கடவுளர்களுக்கே சந்தேகம் இருந்ததாக உபநிஷத்திலேயே உள்ளது. இந்த நவீன காலத்திலும் திதி கொடுக்கிறார்களே?

**கொதிக்கும் நெய்யை தலையில் ஊற்றி சாமியார் குளித்ததாக படத்துடன் (தினகரன்) செய்தி வந்துள்ளது பற்றி?**

உண்மைகளைப் புலனாய்வு செய்து வெளியிட வேண்டிய பத்திரிகைகளே இப்படி முழு மோசடிகளுக்கு துணை போவது அநியாயம். இந்த வேலையை அந்தச் சாமியார் விஞ்ஞானிகள் முன்பு செய்து காண்பிப்பாரா? இந்தக் குளியலுக்கு முன்பு அவரையும், அந்த நெய்யையும் சோதனை செய்ய அனுமதிப்பாரா? கேட்டிருக்க வேண்டாமோ அந்தப் பத்திரிகை?

✉ *மு.அ.முத்துமாதவன், ஆத்தூர்*

**தங்களை பாதித்த செய்தி...?**

"எத்தனையோ பேர் வர்றாங்க, தெருவிலேயே அழைச்சிட்டுப் போவாங்க. ஆனா, மீசை கூடச் சரியா முளைக்காத சின்னப்பசங்க தேடி வர்றதைப் பார்க்கிறப்போ பயமாயிருக்கும். சமீபத்தில் ஒரு ஆட்டோவில் வந்த பையன்களுக்கு பதினைஞ்சு வயசிருக்கும். வந்து பேசினப்போ சத்தம்போட்டு அனுப்பிச்சேன். என்னதான் 'தொழில்'னாலும் இதுக்குன்னு வரைமுறை இருக்குல்ல. அந்தப் பசங்களைப் பார்க்கிறப்போ என் பிள்ளைகளைப் பார்க்கிற மாதிரி தோணுது சார்" - சென்னைப் பெண்மணி ஒருவரின் பேட்டி (குமுதம் 17.8.2000) இது. தாயே! இந்தக் கேடுகெட்ட சமுதாயம் உன்னை அதல பாதாளத்தில் வீழ்த்தியுள்ளபோதிலும் நீ மனத்தளவில் உயர்ந்து நிற்கிறாய். உன்னை வணங்குகிறேன்.

✉ *என்.இருதயராஜ், திருச்சி*

**கலைஞர் கருணாநிதி மனசாட்சிக்கு பயந்தவராமே?**

ஆமாம்! அதனால்தான் சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்தாமலிருக்கிறார். தனது மனசாட்சி யார் என்று கலைஞர் சொன்னது நினைவிருக்கிறதா?

✉ *ஏ.சக்திவேல் மண்டேலா, சென்னை - 19*

**ஆரியக் கலாச்சாரத்தை இந்தியக் கலாச்சாரம் என்று ஆர்எஸ்எஸ் பிரச்சாரம் செய்வது குறித்து எந்தத் தேசியக் கட்சியும் கவலைப்படாதது ஏன்?**



படிப்பகம்

www.padippakam.com

மார்க்சிஸ்ட் கட்சி கவலைப்படு கிறது. அதனால்தான் "ஒரே இனம், ஒரே மொழி, ஒரே கலாச்சாம்" - என்கிற கோஷத்தை விடாது எதிர்த்து வருகிறது. தேசியக் கட்சிகள் பற்றிக் கேட்கிறீர்களே மாநிலக் கட்சிகளான திமுக, பாமக, மதிமுக போன்றவையே கவலைப்பட வில்லையே. இதுவன்றோ ஆர்எஸ்எஸ், பிஜேபி கூட்டத்திற்கு வசதியாக இருக் கிறது.

✉ *கே.அர்ங்கராஜன், செய்யாமங்கலம், எஸ்,அபு, சாலை - இளையான்குடி*

**வீரப்பனை பிடிப்பது அவ்வளவு கஷ்டமான காரியமா?**

ஆம்! ஆனால், அவனிடமிருந்து கேசட் பெறுவது மிகவும் இலகுவான காரியம். காட்டுக்குள் கேசட் தொழிற் சாலையே வைத்திருப்பதாகத் தெரி



கிறது. மகாக் கேவலம். இன்னும் கொடுமை என்னவென்றால், தங்கள் கோரிக்கை களை அரசிடம் சொல்வதைவிட அவனிடம் சொன்னால் அரசு அக்கறையோடு பரிசீலிக்கும் என்று பேச்சு ஏற்பட்டு விட்டது! ஜனநாயக பூர்வமாக வைக்கப்படும் கோரிக்கைகளை அவற் றின் நியாயத்தன்மையைக் கொண்டு ஏற்காவிட்டால் நாட்டில் பயங்கரவாதம் தலை தூக்கும் அல்லது பயங்கரவாதிகள் தங்களை ரட்சகர்களாகக் காட்டிக் கொள்வார்கள் என்பதே இதிலிருந்து கிடைக்கும் படிப்பினை.

✉ *ரெ.மருதசாமி, மயிலாடுதுறை*

**சாராயம் குடித்தபின், தான் வந்த ரிக்ஷாவிடம் வருகிறார். ரிக்ஷா ஓட்டுனர் அதில் படுத்து தூங்குகிறார். அவரை எழுப்பாமல், தானே ரிக்ஷாவை மிதித்துக் கொண்டு தங்கும் விடுதிக்கு வருகிறார். இவர் எழுத்தாளர் ஜெயகாந்தன்... சாராயம் குடிக்கச் செல்வார். அங்குள்ளவர்களிடம் அடிதடியில் ஈடுபடுவார். உணவு விடுதிக்குச் செல்வார், அங்குள்ள சிப்பந்தியை அடிப்பார். மாடிப்படியில் எதிர்படும் அன்னிய பெண்ணை முத்தமிடுவார். இவர் எழுத்தாளர் ஜி.நாகராஜன் (கணையாழி, மே) கருத்து கூறுங்கள்....?**



சிறந்த எழுத்தாளர்களிடம் குறை வாகவோ கூடுதலாகவோ அராஜகம் இருக்கவே செய்கிறது - பானகத் துரும் பாட்டம் அதைத்தூக்கிப்போட்டுவிட்டு பானகத்தை விரும்பிக் குடிக்கிறார்கள் புத்திசாலிகள். நீங்களும் அப்படி இருந்து விடுங்களேன். எதற்கிந்த ஆராய்ச்சி?



படிப்பகம்

www.padippakam.com

✉ **செல்வநேசன்,**
**மலைக்கோவிலூர்**

**சிறந்த இலக்கியப் படைப்புகள் மக்கள் பார்வைக்குச் செல்லுவது கிடையாதே, ஏன்?**

மக்கள் எனப்பட்டோர் பல அடுக்குகளாக உள்ளனர். உயர்மட்டம், சராசரி, அடிமட்டம் என்று ஒரு வசதிக்காகப் பிரித்துக்கொள்ளலாம், ஒரு படைப்பு இந்த மூன்று வகையினருக்கும் ஒருபோதும் போய்ச்சேராது. யாருக்காக எழுதுகிறோமோ அவர்களுக்கு அது போய்ச்சேர்ந்ததா என்றே எழுத்தாளன் கவலைப்பட வேண்டும். அப்படிச் சேராவிட்டால் இவனது கலைத்திறனில் குறைபாடு இருக்க வேண்டும் அல்லது ஆதிக்க சக்திகள் சதி செய்திருக்க வேண்டும்.

✉ **கே.வி.மனோகரன்,**
**திண்டிவனம்**

**அரசியல்வாதிகளின் ஆடம்பர வாழ்வுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

என்ன சொல்ல? மதத்தலைவர்களே அப்படி இருக்கிறார்களே. காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திரரை தங்க சிம்மாசனத்தில் அமர்த்தி தங்கக் கிரீடம் சூட்டியிருக்கிறார் இளைய சங்கராச்சாரியார் விஜயேந்திரர். தினமணியில் (16.8.2000) புகைப்படத்தைக் கண்டதும் வேதனை கலந்த சிரிப்பு வந்தது. உலகே மாயம் என்று அத்வைதம் பேசுகிறவர்களுக்கே தங்கத்தின் மீதான ஆசையும், சிம்மாசனத்தின் மீதான ஆசையும் போகவில்லையே அரசியல்வாதிகளை எங்கே விமர்சிப்பது?



✉ **எம்.அபுதாகீர்,**
**வாணியம்பாடி**

**அப்துல் ரகுமானுக்கு "கணையாழி" சிறப்பிதழ் வெளியிட்டிருக்கிறதே, பார்த்தீர்களா?**

சஜ்ஜாத் புகாரி எழுதியுள்ள "சுயஞான தரிசனம்" என்கிற கட்டுரை அதில் மிகவும் பிடித்தது. கவிஞரின் கவிதைகளில் உருது, பாரசீக இலக்கியத்தின் தாக்கம் பற்றி



ஆராய்கிறது அது. கஜலின் புறவடிவக் கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து அகவடிவத்தை மேலும் செம்மையாக்கியிருக்கிறார் கவிஞர். அதிலே பிறந்தது இது-

"மலர்களைவிட எனக்கு
முட்களைப் பிடிக்கும்
ரத்த சம்பந்தம் கொள்வதால்".



படிப்பகம்

www.padippakam.com

# பரிதாப தேசம்

**பா**கிஸ்தானில் ராணுவ சர்வாதிகாரம் வந்தபின் அதிகமாக மிரட்டப்படுவது எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும்தான். ஜெனரல் முஷாரப் ராணுவ ஆட்சியைப் பிரகடனம் செய்தவுடன் இஸ்லாமாபாத்திலிருந்து வெளிவரும் ஒரு பத்திரிகை எழுதியது :

*"ஆட்சிக் கவிழ்ப்பு அரங்கேறி விட்டது*

*புரட்சி விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது"*

என்று தலைப்புச் செய்தி வெளியிட்டது.

ஜனநாயக ஆட்சி நடந்தாலும், ராணுவ ஆட்சி நடந்தாலும் பாகிஸ்தானில் குடும்பங்களின் ஆட்சிதான் நடைபெறுகிறது. இந்தக் குடும்பங்கள்தான் பாகிஸ்தானிய மக்களை ஏகபோகமாகச் சுரண்டிக் கொள்ளையடித்து வருகின்றன அவர்கள் ராணுவ ஆட்சியை ஆதரிக்கிறார்கள். ராணுவ ஆட்சி வராவிட்டால் தலிபான்களும், முஸ்லிம் அடிப்படைவாதிகளும் வந்துவிடுவார்கள் என்று கூறுகிறார்கள். ஜனநாயக ஆட்சிக்கு ராணுவ ஆட்சி ஆயா வேலை பார்க்க வேண்டிய அவசியமிருப்பதாகவும் கூறுகிறார்கள்.

ராணுவ ஆட்சி பாகிஸ்தானிய மக்களுக்கு 2+2=5 என்று சொல்லித் தருகிறது. பாகிஸ்தானின் உச்சநீதி மன்றம் ராணுவ ஆட்சி மூன்றாண்டுகளுக்கு நீடிக்கலாம் என்று காலக்கெடு விதித்துள்ளது. ஆனால் ராணுவ ஆட்சியாளர்கள் காலக்கெடுவை விரும்புவதில்லை, ஏற்பதில்லை. ஏற்கெனவே ஜியாவுல் ஹக், அயூப்கான் ஆகிய இரு தளபதிகளும் சாகும் வரை பதவி வகித்தார்கள். மரணம்தான் ஜியாவைப் பதவி நீக்கம் செய்ய முடிந்தது. பூட்டோ, நவாஸ் ஷெரீப் போன்ற ஜனநாயக ஆட்சியாளர்களை விடவும் ஜியா போன்ற ராணுவ சர்வாதிகாரிகள் நட்புறவோடு இருந்தார்கள் என்று மணிசங்கர அய்யர் கூறியுள்ளார். ஆனால் ஒரு ராணுவ சர்வாதிகாரியிடம் எதை எதிர்பார்க்க முடியும்? ஜனநாயகத்தையா? பாகிஸ்தானிய மக்கள் வதைபடுகிறார்கள்.

பாகிஸ்தானில் ராணுவ ஆட்சியாளர்கள் முன்பு பிரதமர் பூட்டோவைத் தூக்கிலிட்டு மகிழ்ந்தார்கள். இப்போது பிரதமர் நவாஸ் ஷெரீபுக்கு 25 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கியிருக்கிறார்கள். ஜனநாயக உரிமைகளைப் பறிக்கிறார்கள். பத்திரிகையாளர்களும், எழுத்தாளர்களும் ஒடுக்கப்படுகிறார்கள். இந்தியாவுக்கெதிராக சகல முனைகளிலும் செயல்பட்டு வருகிறார்கள். இதற்கு வலு



படிப்பகம்

www.padippakam.com



வான அமெரிக்கப் பின்னணியும் உள்ளது.

இந்தியாவோடும் அண்டை நாடுகளோடும் பகைமையை வளர்த்து வரும் பாகிஸ்தானிய ஆட்சியாளர்கள் தங்கள் நாட்டு மக்களோடும் பகைமையை வளர்த்து வருகிறார்கள். பாகிஸ்தானை ஒரு பரிதாபத்துக்குரிய தேசமாக ஆக்கி வருகிறார்கள்.

லெபனான் நாட்டுக் கவிஞன் கலீல் ஜிப்ரான் 1931ம் ஆண்டு ஒரு கவிதை எழுதினான்:

*"நம்பிக்கைகளை மட்டுமே*
*அதிகமாய்க் கொண்டு*
*சமயம் பற்றி ஒன்றுமறியா*
*நாட் டைப் பார்த்துப்*
*பரிதாபப்படுங்கள்;*

*அடாவடிப் பேர்வழியை*
*மாவீரனாகவும்,*
*அவன் தங்கள் நாட்டை*
*நிலை நிறுத்துவான்*
*என்று நம்பும் நாட்டைப்*
*பார்த்துப்*
*பரிதாபப்படுங்கள்;*

*தவறான ஆட்சி கண்டு,*
*சவயாத்திரைகளில்*
*மட்டுமே குரல் மட்டும்*
*கொடுத்து விட்டு*
*பின்பு அவனை அழகு*
*பார்க்கும் தேசம் மீது –*
*தங்கள் கழுத்துக்குக் கத்தி*
*வந்த பின்பு*
*மட்டுமே கிளர்ந்தெழும்*
*நாட்டின் மீது*
*பரிதாபப்படுங்கள்;*

*மூப்பின் காரணமாக*
*மௌனிகளாகிவிட்ட*
*பெரியார்களைக் கொண்ட*
*நாட்டை,*

*வலிமையான மனிதர்கள்*
*கையைக் கட்டிக் கொண்டு*
*தொட்டில்களில் உறங்கும்*
*நாட்டைப் பார்த்துப்*
*பரிதாபப்படுங்கள்;*

*பகுதிகளாய் சிதறுண்டு,*
*ஒவ்வொரு பகுதியும்*
*தானே நாடெனக் கருதும்*
*தேசத் தைப் பார்த்துப்*
*பரிதாபப்படுங்கள்"*

கவிஞர்களையும், படைப்பாளிகளையும், எழுத்தாளர்களையும் சர்வாதிகாரிகளால் ஒடுக்கிவிடமுடியாது. பாகிஸ்தானிலும் அவர்களின் போர்க்குரல் எதிரொலிக்கும் காலம் வரும்.

*– எஸ்.ஏ.பி.*

**ஹைகூ**

ஒற்றைச் சிலம்பு உதிர்ந்த
பரல்கள்
வழக்காடு காதை
வானிலுமா..?

*– ஜனநேசன்*



படிப்பகம்

www.padippakam.com

# அழகு என்பது வாழ்க்கைக்காக...

மார்க்சியம் என்பது அரசியல் மட்டுமல்ல, சமூகப் பொருளாதாரக் கோட்பாடுமட்டுமல்ல; சமுதாயத்தின் சகல கூறுகளிலும் படர்ந்து செயல்படுகிற அறிவியல் அது. கலை – இலக்கியத்துறையிலும் அதன் தாக்கம் சாதாரணமானதல்ல. அதைப்பற்றிய இரண்டு நாள் ஆய்வரங்கம் ஒன்று ஆகஸ்ட் 12, 13 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்றது. "பண்பாடு – மக்கள் தொடர்பகம்" அதனை ஏற்பாடு செய்திருந்தது.

இன்றைய தாராளமயம் – தனியார்மயம் மற்றும் – உலகமயப் பொருளாதார யுகத்தில் பொதுவுடைமையாவது இயக்கமாவது.






படிப்பகம்

www.padippakam.com

என்று சுரண்டல் வர்க்கங்களின் ஊதுகுழல்கள் பேசியும் எழுதியும் வருகின்றன. இந்நிலையில் முன்னெப் போதையும் விட இன்று தான் பொதுவுடைமை இயக்கத்தின் தேவை யும், பொறுப்பும் அதிகரித்துள்ளது என்பதை உணர்த்துவதாக இருந்தது அந்த ஆய்வரங்கம். "தமிழகப் பொது வுடைமை இயக்கங்களும் கலை இலக்கியப் போக்குகளும்" என்ற தலைப்பில் ஒரு ஆய்வரங்கம். அதுவும் புகழ்பெற்ற லயோலா கல்லூரி வளா கத்திற்குள் என்பது பலரையும் ஈர்த் தது போலும். சென்னையைச் சேர்ந்த வர்கள் மட்டுமல்லாமல் பல மாவட் டங்களிலிருந்துமாக மொத்தம் 250 பேர் கலந்து கொண்டனர்.

ஆய்வரங்க அமைப்புக் குழு சார் பில் 'தீக்கதிர்' துணை ஆசிரியர் அ.குமரேசன் அறிமுகவுரையாற்ற, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநி லச் செயலாளர் ஆர்.நல்லகண்ணு தமது வாழ்த்துரையில் "பாரதியை மதவெறியர்கள் தூக்கிச் செல்லாமல் தடுத்த பெருமை கம்யூனிஸ்ட்டுகளுக்கு உண்டு... அடித்தட்டு மக்களை ஈர்த் தால்தான் சமுதாய மாற்றம் வரும். அதற்குக் கலை இலக்கியத்தின் பங்க ளிப்பு முக்கியமானது" என்றார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் கி.வரதராசன், "தமிழகத்தில் ஜீவா, ராமமூர்த்தி, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் போன்றவர்கள் வளர்த்தார்கள். ஆனால் அறுவடை செய்தது யாரோ...! யாருக்காக எழுது கிறோம் என்பதில் தெளிவு இருக்கிறது. ஆனால் அவர்களை ஈர்க்கிற விதத்தில் படைக்கிறோமா? முன்னெப்போதும் இல்லாத தேவையும், களமும் இன்று

## ஆதங்கம்தான் வேறொன்றும் அல்ல



"மொழி என்பது நமது முகம். (Identity). அதை இழந்துகொண்டு இருக்கிறோமோ என்று எண்ணத் தோன்றுகிறது. எங்கே தமிழாராய்ச்சி மாநாடு நடந்தாலும் அது பாராட்டுப் பத்திரம் கொடுப்பதோடு நின்றுவிடக்கூடாது. உலகின் எல்லா மூலையில் இருக்கும் ஒவ்வொரு தமிழனுக்கும் அது சென்றடைய வேண்டும். தொலைபேசி, கணினி என்று மொழிமாற்றம் செய்ததோடு முடிந்துவிடுவதல்ல நம் தமிழ்ச் சேவை. நான் அரசியல் பேசவில்லை. அடுத்துவரும் சந்ததியினர் ஆங்கிலம் மட்டுமே பேசுவதாய் அமைந்து விடுமோ என்ற ஆதங்கம்தான். வேறு ஒன்றும் அல்ல."

*– இலங்கை வானொலி அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீது*

*(தினமணியிலிருந்து)*



படிப்பகம்

www.padippakam.com





உருவாகியுள்ளது. மண்ணின் உண்மையைக் காணத் தவறினோமா என்பதைக் கண்டறிந்து தொடர்ந்து முன்னே செல்ல வேண்டியுள்ளது - வேகமாகச் செல்ல வேண்டியுள்ளது" என்றார்.

'சிப்காட்' இயக்குனர் குத்சியா காந்தியின் வாழ்த்துரைக்குப் பின், தமிழக கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றுச் சுருக்கத்தை சு.ரவிக்குமார் (மதுரை, காமராஜர் பல்கலைக் கழகம்) முன்வைத்தார். 'தாமரை' ஆசிரியர் சி.மகேந்திரன் பொதுவுடைமை இயக்கங்கள் சார்ந்த கலை - இலக்கிய அமைப்புகளின் செயல்பாடுகள் குறித்துப் பேசினார்.

தமுஎச தலைவர் ச.செந்தில்நாதன் தலைமையில் படைப்பிலக்கியங்கள் குறித்த அமர்வு நடைபெற்றது. கலை - இலக்கியத்தில் முற்போக்கு, பிற்போக்கு என்ற பார்வையைக் கொடுத்ததே பொதுவுடைமை இயக்கம்தான் என்றார் அவர்.

நாவல்கள் குறித்து உரையாற்றிய தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றப் பொதுச் செயலாளர் பொன்னீலன், நாவல்கள் பற்றிச் சொன்னதுடன், "பொதுவுடைமை இயக்கங்கள் மீது மறைமுகமாகவும், நேரடியாகவும் தொடுக்கப்பட்ட தாக்குதல்களை நாம் சந்தித்து வந்திருக்கிறோம். இலக்கியத்தில் ரா.சு.நல்லபெருமாள் துவக்கி வைத்ததை இன்று உலக மயப் பொருளாதாரச் சூழலில் ஜெயமோகன் நேரடியாகக் கொச்சைத் தனமாகச் செய்கிறார். இத்தகைய எதிர்ப்புகளை நாம் நமது இலக்கியம் மூலமாகச் சந்திப்போம்" என்றார்.

சிறுகதைகள் பற்றிய ஆய்வுரை வழங்கினார் தமுஎச மாநிலத் துணைத் தலைவர் ச.தமிழ்ச்செல்வன். கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள், கட்சியுடன் தொடர்பு உள்ளவர்கள், தொடர்பு இல்லாதவர்கள் தமது படைப்புகளில் வெளிப்படுத்திய மார்க்சிய அணுகுமுறைகளை அவர் கோடிட்டுக்காட்டினார். நாம் எழுதினால் கட்சிப் பிரச்சாரம் என்கிறார்கள். செம்மலரில் வெளியான 300 கதைகளில் 10 மட்டுமே அவ்வாறு கட்சி நிலைபாடு பற்றியவை. மீதி 290 கதைகளைப்பற்றி இவர்கள் ஏன் பேசுவதில்லை எனக் கேட்டார் அவர்.

கவிதைகள் பற்றிய உரை வழங்கிய தமுஎச மாநிலத் துணைச் செயலாளர் நா.முத்துநிலவன், "கவிதை என்றாலே மெத்தப் படித்தோருக்கு மட்டுமே என்பதை மாற்றியவர்கள் பொதுவுடைமை இயக்கச் சிந்தனையாளர்களே. புதுக்கவிதை அவர்களால் தான் ஜனநாயகப்படுத்தப்பட்டது. ஹைக்கூ கவிதை வடிவம் தமிழில்



படிப்பகம்

www.padippakam.com

புதிய பரிமாணம், கொண்டதும் இவர்களது ஈடுபாட்டால்தான்" என்றார்.

நிகழ்த்து கலைகள் பற்றிய அமர்வில், பத்திரிகையாளர் அறந்தை நாராயணன் தமிழ்த் திரைப்படங்களில் பொதுவுடைமை இயக்கத்தினரின் முயற்சிகளையும் தாக்கங்களையும் விளக்கினார். ஜெயா டி.வி.யின் தமிழ்ச்சங்கம் பாலுமணிவண்ணன் சின்னத்திரையில் பொதுவுடைமையாளர்கள் கவனம் செலுத்த வேண்டிய சில உடனடிப் பிரச்சனைகளை சுட்டிக்காட்டினார்.

நாடகம் பற்றிப் பேசிய தமுஎச மாநில துணைத்தலைவர் கிரளயன், சப்தர் ஹஷ்மி படுகொலைக்குப் பிறகு அதுவரையில் பல பெயர்களில் வழங்கி வந்தவற்றுக்கும் "வீதி நாடகம்" என்ற சொல்லாக்கமே பரவலாகப் பொருந்தியது என்றார். அதிக அளவுபெண்கள் தன்னம்பிக்கையோடு ஈடுபடச் செய்தது வீதி நாடக இயக்கம் தான் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இரண்டாம் நாள் திறனாய்வுத் துறை பற்றிய அமர்வு. தலைமை தாங்கியவர் திருநெல்வேலி பல்கலைக்கழக இளைஞர் நலத்துறை இயக்குனர் ச.மாடசாமி. சாமான்ய மனிதரையும் படைப்பாளியாக, விமர்சகராக உருவாக்குவது பொதுவுடைமை இயக்கவாதிகளின் நோக்கம் எனக்கூறிய அவர், "அழகு" பற்றிய கோட்பாடுகளைச் சுட்டிக்காட்டி, "அழகை அன்புதான் தீர்மானிக்கிறது" என்ற சோவியத் கவிதையை மேற்கோள் காட்டினார்.

பேராசிரியர் "முட்டா" கே.ராஜு மார்க்சிய ஏடுகள் பற்றி உரையாற்றினார். மார்க்சிய இயக்கங்களின் 'வளர்ச்சிக்கும், அவற்றின் பத்திரிகைகளுடைய வளர்ச்சிக்கும் உள்ள தொடர்பை விளக்குவதாக அவரது உரை அமைந்தது.



பேராசிரியர் இளைய நந்தன் (திருச்சி தூய வளனார் கல்லூரி) பின் நவீனத்துவப் போக்குகளுக்கும், பொதுவுடைமைச் சிந்தனையாளர்களுக்கும் இடையேயான உடன்பாடுகளையும், முரண்பாடுகளையும் தொகுத்தளித்தார்.

மார்க்சிய அழகியல் பற்றிய உரையை வழங்கினார் பேராசிரியர் ஜார்ஜ் (சென்னை, சக்தி நிலைய மெய்யியல் கல்லூரி). முதலாளித்துவ அமைப்பில் அழகு என்பதும் விற்பனைச் சரக்காவதைக் குறிப்பிட்ட அவர், "அழகு என்பது அழகுக்காக அல்ல, அது வாழ்க்கைக்காக" என்ற புரிதலுடன் மார்க்சிய படைப்பாளி



படிப்பகம்

www.padippakam.com

கள் படைத்துவருவதை சுட்டிக்காட்டினார்.

முனைவர் தி.சு.நடராசன் (மதுரை காமராசர் பல்கலைக்கழகம்) மார்க்சியத் திறனாய்வு பற்றி உரையளித்தார். ஏன் அதைச் செய்யவில்லை. ஏன் இதைச் செய்யவில்லை என்று நம்மைப் பார்த்துதான் சுத்த இலக்கிய வாதிகள் கேட்கிறார்கள். மற்ற இயக்கங்கள். மற்ற இஸங்களைச் சார்ந்த படைப்பாளிகளிடம் கேட்பதில்லை. இதுவே நம் பெருமைக்குரிய ஒரு வெற்றிதான் என்றார் அவர். சிதைவுற்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து இறக்குமதியாகிய பின் நவீனத்துவம் போன்ற கோட்பாடுகள் இங்கே நவீன பிராமணீயமாக தலித்துகளையும். பெண்ணையும் மட்டந்தட்டுவதாக அவர் குறிப்பிட்டார்.

பண்பாடு - மக்கள் தொடர்பக இயக்குனர் ச.ராஜநாயகம் "யதார்த்த வாதம் - சில பார்வைகள்" எனப் பேச வந்தார். பங்கேற்பாளர்களுக்கு சில கேள்விகளை வீசிய அவரது பேச்சு மதியப் பசி நேரத்தில் கலகலப்பூட்டியது. எளிதில் மறுக்கக்கூடிய கேள்விகளையே முன்வைத்த அவர் "யதார்த்தவாதம் பொதுவுடைமை வாதிகளின் தனியுடமை அல்ல" என்று பொதுவுடைமைவாதிகள் கோராத ஒன்றைக் குற்றச்சாட்டாக வைத்தார். அறிவியலும் மதமும் ஒன்றுதான் என்பதாகவும் ஒரு குழப்பமான கருத்தைத் தெரிவிக்க, பின்னர் மாடசாமி அறிவியல் குறித்த மார்க்சியவாதிகளின் அறிவியல் பூர்வமான அணுகுமுறையைத் தெளிவுபடுத்தினார்.

இறுதியாக பொதுவுடைமை இயக்

## ஆண் பிறந்தால் இனிப்பு! பெண் பிறந்தால் கண்ணீரா?



இது பலவகை மக்கள், மொழி, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் நிறைந்த நாடு. ஒருபக்கம் பெண் பிரதமராக இருக்கிறார். மறுபக்கம், வரதட்சணைக் கொடுமையால் இறப்பு.

இந்த நாட்டை முன்னேற்றுவது மிகக்கடினம். ஆனால், பெண்கள் அமைப்பு இவற்றை சீர்செய்ய முடியும். ஆண் குழந்தை பிறந்தால் இனிப்பு, பெண் குழந்தை பிறந்தால் கண்ணீர் என்ற நிலை இன்னும் நீடித்துக்கொண்டுதான் உள்ளது. ஆனால், பெண்களின் பலம் இந்தியாவில் அதிகரித்துக்கொண்டுதான் இருக்கிறது. அவர்களின் நிலை மாறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது....

... பொருளாதாரச் சுதந்திரம் பெண்களை முன்னேற்றும். தங்கள் பிரச்சனைகளை வெளியில் சொன்னால்தான், அவைகள் தீர்க்கப்படும் என்பதை பெண்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

**– ஷபனா ஆஸ்மி**

*(குங்குமம் பேட்டியிலிருந்து)*



படிப்பகம்

www.padippakam.com

கங்களும், பிற இயக்கங்களும் என்ற அமர்வு. எழுத்தாளர் சு.சமுத்திரம் தலைமையில் நடந்தது. பெண்ணியம் தொடர்பான கருத்துக்களில் பொதுவுடைமை இயக்கப் படைப்பாளிகளின் பங்களிப்பை விளக்கினார். குற்றாலம் பராசக்தி கல்லூரி பேராசிரியர் பிரேமா அருணாசலம்.

திராவிட இயக்கங்கள் பற்றி உரையாற்றிய தீக்கதிர் சென்னைப்பதிப்பு



பொறுப்பாசிரியர் சு.பொ.அகத்தியலிங்கம், பெரியார் துவக்கிய பகுத்தறிவு சார்ந்த திராவிட இயக்கத்தின் நேர்மையான நோக்கங்களையும் வீச்சையும் எடுத்துரைத்தார். திமுக என உருவானதன் பின்னணியைக் குறிப்பிட்ட அவர் இன்று தலைமை காவிமடத்துடன் சமரசம் செய்து கொண்டிருக்கும் நிலைமையையும் சுட்டிக்காட்டினார்.

அய்க்கஃப் அமைப்பின் தலைவர் ஹென்றி செரோம் இளைஞர் - மாணவர் அமைப்புகள் குறித்துப் பேசினார். இளைஞர் - மாணவர் திரளும், ஒடுக்கப்பட்ட மக்கள் திரளும் பொதுவுடைமை இயக்கங்களும் மேலும் மேலும் நெருங்கி வரவேண்டியதன் வரலாற்றுத்தேவையை அவர் வலியுறுத்தினார்.

பார்வையாளராக வந்திருந்த தமிழக அரசின் சமூக நலத்துறை இயக்குனர் கிறிஸ்துதாஸ் காந்தி, தலித் மக்களின் குரலாக சில ஆதங்கங்களையும் எதிர்பார்ப்புகளையும் முன் வைத்தார்.

ஆய்வரங்க அமைப்புக்குழு சார்பில் பேராசிரியர் இரா காளீஸ்வரன் நன்றி நவில, இரண்டு நாட்களில் கிடைத்த கனமான, பல புதிய சிந்தனைகளுடன் பங்கேற்பாளர்கள் விடை பெற்றனர். இவர்களில் ஒருவர் கூறினார். "உடனடி விளைவு என்பதைவிட, நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியது இந்த ஆய்வரங்கம்"

**- அசாக்**

### தங்கள் கவனத்திற்கு...


செம்மலருக்குப் படைப்புகள் அனுப்புவோர் அஞ்சல் உறையின் மேல் 'ஆசிரியர்' என்றும், சந்தா பணம் அனுப்பும் வாசகர்களும், ஏஜெண்ட்களும் அஞ்சல் உறையின் மேல் 'நிர்வாகி' என்றும் குறிப்பிட வேண்டுகிறோம்.

(ஆ.கு.)



படிப்பகம்

www.padippakam.com



# புரட்சிக்கவிஞர் அலி சர்தார் ஜாப்ரி

**ப**ற்றி எரியும் கவிதைகளைப் படைத்தவர். உழைப்பாளி மக்களின் நெஞ்சங்களில் ஆவேச அனலை மூட்டியவர். இந்தியாவில் முற்போக்கு சகாப்தத்தைத் துவக்கிவைத்த மகத்தான கவிஞர்களில் ஒருவர். இறுதிவரை தானொரு கம்யூனிஸ்ட் என்ற பிரகடனத்தோடு வாழ்ந்தவர். அவர்தான் புரட்சிக்கவிஞர் அலி சர்தார் ஜாப்ரி.

தேசம் மோசமான சூழ்நிலையிலிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில், 1.8.2000 அன்று காலையில் அவர் காலமாகிவிட்டார். பம்பாயில் உள்ள அவரது வீட்டில் தனது 87வது வயதில் மறைந்தார். அவரது மறைவு கவிதா உலகத்துக் குப் பேரிழப்பாகும். உருதுக்கவிஞர்களில் முன்னத்தி ஏர்பிடித்தவர் அலி ஜாப்ரி. அன்பு ஒன்றுதான் அவரது கவிதையின் அடிநாதமாய் திகழ்ந்தது. மக்களிடையே வேறுபாடின்றி பரஸ்பரம் அன்பும், அமைதியும் நிலவச் செய்ய வேண்டுமென்பதை அவரது கவிதைகள் வலியுறுத்தின.

அலி சர்தார் 20.11.1913ல் உத்தரப்பிரதேசத்தில் பலராம்பூர் ஜமீன்தார் குடும்பத்தில் பிறந்தவர். விடுதலைப் போராட்ட காலத்தில் பம்பாயில் குடியேறி அங்கேயே வாழ்ந்தார். மனைவி, இரண்டு விதவைச் சகோதரிகள், மூன்று குழந்தைகளோடு அதேவீட்டில் இறுதிவரை வாழ்ந்து மறைந்திருக்கிறார். உருது மொழியில் அசாத்தியமான பாண்டித்தியம் கொண்டவர். உருது மொழியில் அது தோன்றிய காலத்திலிருந்து எழுதப்பட்ட அனைத்தையும் கரைத்துக் குடித்தவர். மனப்பாடம் செய்தவர். பெர்சியக் கவிஞர்களின் கவிதைகளைக்கூட மனப்பாடமாகச் சொல்வார். ரூமி, ஹபீஸ், மிர்சா காலிப், இக்பால் போன்ற கவிஞர்களை அலிக்கு மிகவும் பிடிக்கும்.

அவர் கட்டிலில் அமர்ந்து படிக்கும் பழக்கம் கொண்டவர். எழுதுவதும் அப்படியே. கட்டில் முழுவதும் புத்தகங்களும் எழுதிய காகிதங்களும் குவிந்திருக்கும். அவற்றின்

எஸ்.ஏ.பி.



படிப்பகம்

www.padippakam.com

மீதே படுத்துத் தூங்கிப் போவார். மீண்டும் எழுந்ததும், படிப்பதும், எழுதுவதும், தொடங்கி விடும். அவர் மார்க்சியத்தையும், கம்யூனிசத்தையும் மிகவும் நேசித்தார். வாழ்க்கையின் எல்லா நல்ல அம்சங் களையும் அவர் நேசித்தார். அவரது மனைவி சுல்தானா இறுதிவரை இம்மாபெரும் கவிஞனுக்காகவே வாழ்ந்தவர், வாழ்கிறவர்.



அலி சர்தார் அலிகார் நகரில் முஸ்லிம் சர்வ கலாசாலையில் படித்தார். அவர் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக இருந்தார். அதனால் அவரை பிரிட்டீஷ் ஆட்சி கைது செய்து 18 மாதங்கள் சிறையில் அடைத்தது. கல்லூரி நிர்வாகம் அவரைக் கல்லூரியை விட்டு வெளியேற்றியது. நாடு சுதந்திரமடைந்த பின்பு அதே முஸ்லிம் சர்வகலா சாலை அவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்து கவுரவித்தது.

இந்தியாவின் பிரபலமான எழுத்தாளர்கள் பலர் அவரோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்தனர். குஷ்வந்த் சிங் அவர்களில் முக்கியமான நண்பர். ஒருமுறை மொகரம் பண்டிகையின்போது குஷ்வந்த் சிங் அலியை சந்திக்கச் சென்றார். கறுப்பு ஆடைகள் அணிந்து ஷியா முஸ்லீம்களோடு மொகரம் ஊர்வலத்தில் மாரடித்தவாறே சென்றார். இதைப் பார்த்த குஷ்வந்த் சிங் அலியிடம் "நீ ஒரு கம்யூனிஸ்ட், நாத்திகர்; நீங்கள் இப்படி மத ஊர்வலத்தில் கலந்து கொள்வது சரியா" என்று கேட்டார்.

"எல்லா மக்களும் ஒன்றுகூடும் நேரத்தில் நான் மட்டும் தனித்திருக்க முடியாது. நான் தனித்து ஒதுங்கிவிட்டால் எனது கவிதைகள் எனது மக்களைச் சென்றடையாமல் போய்விடும்" என்று அலி பதிலளித்தார்.

அவரது கவிதைகளைப் போலவே அவரும் உயரமானவர். அருமையான குரல் வளம்; அவர் கவிதை பாடும்போது கூட்டம் மெய் மறந்து கேட்கும். நம் மீது பகைமை பாராட்டி வரும் பாகிஸ்தானியரைப் பார்த்து—

***"நீங்கள் லாகூர் லேடன் தோட்டத்திலிருந்து***
***பூக்களோடு வாருங்கள்,***
***நாங்கள் காசியிலிருந்து அதிகாலை***
***ஒளியோடு வருகிறோம்,***
***இமயத்தின் உச்சியிலிருந்து வீசும்***
***புத்திளம் தென்றலை அனுபவிப்போம்,***
***பிறகு, நாம் இருவரும் ஒன்றாகி***
***பகைவன் யாரெனக் கேட்போம்"***

என்று பாடுகிறார்.

அலி சர்தார் சோவியத் நாடு நேரு பரிசு, இக்பால் சம்மான் பரிசு, ஜானேஸ்வர் பரிசு,ஞானபீட விருது போன்ற எண்ணற்ற விருதுகளைப் பெற்றவர்.

ஆனால் பொதுமக்களிடம் அவர் கவிதை பாடும் போது கிடைக்கும் கைதட்டலைத்தான் பெரிதாக மதித்தார்.

அலி ஜாப்ரி ஒரு நம்பிக்கைவாதி. வாழ்வின் அவலங்களைப் போராடி



படிப்பகம்

www.padippakam.com

மாற்றமுடியும் என்று நம்பும் பெரும் நம்பிக்கைவாதி. பெரிசிய மகா கவிருமி கூறியதுபோல "பூமியில் பசுமை போல நாமும் வளர்ந்து கொண்டேயிருப்போம்" என்ற கொள்கையுடையவர்.

***"பகல்களும் இரவுகளும் நிரம்பிய மந்திரவீட்டில்***

***நான் ஒரு பாயும் இயக்கம்,***

***ஒரு குடுவையிலிருந்து வருங்காலமென்ற***

***மகாசமுத்திரம் நோக்கிப் பயணிக்கும் ஒருதுளிநான்.***

***நான் தூங்குவேன் எழுவதற்காக***

***நான் எழுவேன் தூங்குவதற்காக***

***மேடையில் நானோர் பாரம்பரிய நாடகம்,***

***அமரத்துவம் பெறவே நான் மரிப்பேன்"***

இதுதான் அலிஜாப்ரியின் பிரகடனம்

அன்புததும்பும் இவரின் கவிதைகள் எந்தக் காலத்துக்கும் தேவை. அதிலும் இந்தக்காலம் அதைவிட முக்கியம். மறைந்தாலும் வாழும் அந்த மகாகவிஞனுக்கு நமது புகழஞ்சலி.



"நாலரை வருசமா டிவியில் வந்துக் கிட்டிருக்கிற அந்த மெகா சீரியலின் டைரக்டர் பெயர் என்னடா?"

"நீளகண்டன்!"

– உ.ராஜாஜி


# ஹோமியோபதி மருத்துவம்

ஆண்மைக் குறைவு, தும்மல், சிறுநீரகக்கல், கால் ஆணி, அல்சர், மூலம், பவுத்திரம், தோல்வியாதிகள், பாலியல் நோய்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் சம்பந்தப்பட்ட நோய்கள், ஞாபகமறதி, தீராத தலைவலி மற்றும் அனைத்து நோய்களுக்கும் **பக்கவிளைவின்றி** சிகிச்சையளிக்கப்படும்.

**Dr.D. செங்குட்டுவன், B.Sc., D.H.M.S.,** | **Dr. ப்ரீதா செங்குட்டுவன், D.H.M.S.,**

**கென்ட் ஹோமியோ கிளினிக்** ☎ 746040

4-G.K.S. பில்டிங் முதல் தளம்,
55–மேலப் பெருமாள் மேஸ்திரி வீதி,
(காலேஜ் ஹவுஸ் அருகில்) மதுரை – 1.



காலை 11.30-2.00 மாலை 4 -6
சனி, ஞாயிறு காலை 11.30-1.00

**ப்ரீதா ஹோமியோ கிளினிக்** ☎ 521354

(Computerised Clinic)
194, வைகை காலனி,
அண்ணா நகர், மதுரை – 20.



காலை 9.30 - 11 மாலை 7 - 9
சனி, ஞாயிறு காலை 9.30-11

**நவீன் ஹோமியோ கிளினிக்**

61, V.M.R. பட்டி (A.M.C. ரோடு)
மெடிக்கல்ஸ் சந்து, **திண்டுக்கல்.**

சனி மாலை 4.30 - 8.30 மணி
வரை மட்டும்




படிப்பகம்

www.padippakam.com



# சுமங்கலி எனும் ஒரு ஆக்டோபஸ்

அன்று ஆகஸ்ட் முதல் நாள். மதுரை நகர் முழுவதும் ஒருவிதப் பரபரப்பில் மூழ்கியிருந்தது. எங்கு பார்த்தாலும் கருப்பு வண்ணத்தில் பிரம்மாண்டமான சுவரொட்டிகள். சாலையில் போவோர் வருவோரை ஒரு நிமிடம் நிறுத்தி, கவனிக்கச் செய்தது. அதிலிருந்த கொட்டை எழுத்து வாசகம் இது: *'சுமங்கலி கேபிள் டிவியைக் கண்டித்து உண்ணாவிரதம், ஒருநாள் ஒளிபரப்பு நிறுத்தம்.'*

மதுரை ரயிலடி. அதன் முன்பு போடப்பட்டிருந்த பெரிய பந்தலில் ஒருநாள் அடையாள உண்ணாவிரதமிருக்கப் பலர் கூடியிருந்தனர். பல்வேறு அரசியல் கட்சிப் பிரமுகர்கள் பங்கேற்று வாழ்த்திப் பேசினர்.

சுமங்கலி என்பது என்ன? அதைக் கண்டிக்க இவர்களுக்கு என்ன அவசியம் வந்துவிட்டது?

**சோமு.நாகராஜன்**



படிப்பகம்

www.padippakam.com



'சுமங்கலி' என்ற வடசொல்லுக்குத். திருமணமான (கணவன் உயிருடன் இருக்கும் நிலையில் இருக்கும்) பெண். அதாவது மங்கலம் நிறை மாது என்பது பொருள். இந்து சனாதன தர்மம் பெண்ணுக்கு வழங்கிய உயர் ஸ்தானம், 'சுமங்கலி' பட்டம். பெரியார் வழிவந்த, திராவிட இயக்கத்தின் பகுத்தறிவுப் பாசறை என இன்றும் சொல்லிக் கொள்கிற திமுக தலைவர் கலைஞரின் குடும்ப நிறுவனமான சன் டிவி நெட் ஒர்க் துவங்கியிருக்கும் ஒரு நிறுவனம் தான் 'சுமங்கலி'. அவர்கள் 'குங்குமம்' என்று பத்திரிகை நடத்தலாம். 'சுமங்கலி' என்றும், சன், சூர்யா, உதயா என்றெல்லாம் பகுத்தறிவுக்கும், தமிழுக்கும் துளியும் தொடர்பில்லாத பெயர்களில் வியாபாரமே செய்யலாம், யார் கேட்கப்போகிறார்கள்? ஆனால், இன்றைய பிரச்சனை இதுவல்ல.

தமிழகத்தில் சென்னை, மதுரை உள்ளிட்ட பெரிய நகரங்கள் தொடங்கி, சிறு கிராமங்கள் வரை சுமார் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கேபிள் டிவி நிறுவனத்தினர் செயல்படுகின்றனர். சன் டிவியாகட்டும், அல்லது அதன் நெட் ஒர்க்கில் உள்ள மற்ற சேனல்களாகட்டும், ஜெயா, ராஜ், விஜய் போன்ற சேனல்களாகட்டும் இந்தத் தமிழ்ச் சேனல்களோடு மற்ற வெளிநாட்டு, வடநாட்டு மற்றும் தூர்தர்ஷன் உட்பட அனைத்தையுமே ஒவ்வொரு இல்லத்திற்கும் அழைத்துச் சென்று சேர்க்கிறவர்கள் இந்த கேபிள் டிவி ஆபரேட்டர்கள்தான். இவர்களில் சென்னையில் மட்டும் சுமார் 1500 ஆபரேட்டர்கள். மதுரையில் 450. கோவையில் 600, திருச்சியில் சுமார் 550, நெல்லை மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் 300 என உள்ளனர்.

இந்த உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்களுக்கு இப்போது பெரும் அச்சுறுத்தலாக வந்துள்ளது இந்த 'சுமங்கலி' நிறுவனம். முதலில் 15 நகரங்களைக் குறிவைத்துக் கிளம்பியிருக்கிறதாம். சென்னை, கோவை நகரங்களில் ஏற்கெனவே 'சுமங்கலி'யின் கட்டுப்பாட்டிற்குள் ஏறத்தாழ வந்துவிட்டன. இப்போது மதுரை, திருச்சி, நெல்லையை நோக்கிப் படையெடுக்க எத்தனித்துள்ளது.

தனித்தனியாகவும், ஒருசிலர் கூட்டாகவும் இப்போது கேபிள் டிவி நிறுவனங்களை நடத்தி வருகின்றனர். மதுரையில் மட்டும் இப்படிப்பட்ட சுமார் 450 சிறிய, பெரிய நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒரு இடத்தில் டிஷ் ஆன்டெனாக்களை நிறுவி, 'கன்ட்ரோல் ரூம்' எனும் கட்டுப்பாட்டறைகளின் மூலம் டிவி சேனல்களின் 'சிக்னல்'களைப் பெற்று வயர்களின் வழியே வீடுகளுக்கு 24 மணி நேரமும் ஒளிபரப்பு செய்யப்படுகிறது. சிறிய அளவில் இயங்குவோர் பலர் இந்தக் கட்டுப்பாட்டறைகளிலிருந்து 'சிக்னல்'களை வாங்கியும் ('லிங்க்' என்று பெயர்) ஒளிபரப்பை வழங்குகிறார்கள். இதெல்லாம் நாம் ஓரளவு அறிந்ததே.

இந்த முறையால் ஏராளமான படித்த இளைஞர்கள் சுயதொழில் செய்யும் நிலை உள்ளது. இவர்களுக்கு உதவியாகப் பல ஆயிரம் பேர் வேலைவாய்ப்பும் பெற்றிருக்கின்றனர். மதுரையில் மட்டும் இவர்களின் ஒட்டுமொத்த முதலீடு சுமார் 10 கோடி ரூபாயாம்.



படிப்பகம்

www.padippakam.com

தனித்தனியாக செயல்பட்டு வரும் இந்நிறுவனங்களை ஒன்றாக இணைத்து ஒரே ஒரு இடத்திலிருந்து ஒரு நகரம் முழுவதற்கும் 'சிக்னல்'களை வழங்கும் ஏற்பாடுதான் 'சுமங்கலி'. அதாவது சுயதொழில் முனைவோரை தனக்குக் கீழே பணிசெய்யும் வெறும் 'வசூலிப் போராக மாற்றும் ஏற்பாடு. இதனால் என்ன தீமை வந்துவிடப்போகிறது?

"சினிமா காட்டுவதில் தொடங்கி, இன்று சேட்டிலைட் மூலம் அனைத்து டிவி சேனல்கள் வரை எங்கள் பணத்தையும், வியர்வையையும் கொட்டிப் பாடுபட்டு வளர்த்த தொழில் இது" - என்று நம்மிடையே குமுறினார் தமிழ்நாடு கேபிள் டிவி உரிமையாளர்கள் ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் டி.வி.ரமேஷ். இவர் தமிழ்நாடு இளைஞர் காங்கிரசின் மாநில இணைச்செயலாளராகவும் இருக்கிறார். சுதந்திரமாகச் செயல்பட்டு வரும் எங்களை அடிமைகளாக்கத்தான் இந்த சுமங்கலி வருகிறது என்று கூறும் டி.வி.ரமேஷ் மேலும் கூறியதாவது:

"சென்னையில் 'சுமங்கலி' சுமார் 800 கேபிள் ஆபரேட்டர்களை விழுங்கியிருக்கிறது. 60 கிலோ மீட்டர் சுற்றளவில் ஒளிபரப்பைத் தன்வசப்படுத்தியிருந்தாலும் புறநகர்களில் 'சிக்னல்' சரிவரக் கிடைக்கவில்லை. பணம் சரியாகப் பெற்றுக்கொள்கிற போதும் சேவை மோசமாக இருக்கிறது. இன்று சென்னையில் ஒரேயொரு ஒளிபரப்பு மையம். அதேபோல கோவையிலும் வந்துவிட்டது.

ஏற்கெனவே பி.பி.எல். நிறுவனம் கோவையில் இதேமாதிரி ஒரு இணைப்பைத் தர முயன்றது. ஆனால் 'இண்டர்நெட்' மட்டும் நாங்கள் தருகிறோம். நீங்கள் எப்போதும் போல செயல்படலாம் என்றனர். ஆனால் கடுமையான மிரட்டல்கள், கேபிள் வயர்களை அறுப்பது என்று பி.பி.எல். நிறுவனத்தை விரட்டிவிட்டு இன்று சுமங்கலி அங்கே காலூன்றிவிட்டது" என்றார் சற்றே கோபமாக.

சுமங்கலி நிறுவனத்திற்காகவே அரசு பல புதுச்சலுகைகளை வழங்குகிறதாம். மின்கம்பங்களில் கேபிள் வயரைக் கட்டிக் கொள்ளவும், தனியே கம்பங்கள் நட்டுக்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாம். கண்துடைப்புக்காக இதற்கு வரிவிதிப்பும் உண்டாம்.

'சுமங்கலி'யில் இணைய விரும்பாதவர்களுக்கு பலவகை மிரட்டல்கள் வரத்துவங்கியிருக்கின்றன. 'படித்த இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்பு' என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்து, ஏற்கெனவே கேபிள் டிவி வசதி இருக்கும் பகுதிகளிலேயே புதிதாக இளைஞர்களை நியமித்து, போட்டியாக சுமங்கலி இணைப்பைக் கொடுத்து, தன்னோடு


மதுரையில் எதிர்ப்புப் போஸ்டர்



படிப்பகம்

www.padippakam.com

இணையாதவர்களை மறைமுகமாக மிரட்டுவதாகப் பலர் கூறுகிறார்கள். துவக்கத்தில் 9 ஆபரேட்டர்கள் மட்டுமே இணைந்திருந்த நிலையில், கோவையில் இந்த பாணி விளம்பரங்களே அத்தனை கேபிள் ஆபரேட்டர்களையும் ஒரேசமயத்தில் சுமங்கலியிடம் சரணடையச் செய்துவிட்டதாம்.

மதுரையில் கேபிள் ஆபரேட்டர்கள் சுமங்கலி இன்று வருமோ, நாளை வருமோ என்ற அச்சத்துடனேயே உள்ளனர். கடந்தமாதம் சுமங்கலியின் நிர்வாக அதிகாரி சி.டி.ராவ் என்பவர் மதுரை வந்திருக்கிறார். வந்தவர் சன் டிவியைப் பாதுகாக்கத்தான் வந்திருப்பதாகக் கூறியிருக்கிறார். 'நீங்கள் வந்தால் எங்கள் முதலீடுகள் என்ன ஆவது? நட்டம் வருமே!' என்று அவரிடம் சொல்லியிருக்கின்றனர் மதுரையைச் சேர்ந்த ஆபரேட்டர்கள்.

'அதற்காக நாங்கள் என்ன நஷ்ட ஈடா தரமுடியும்? ஒன்றின் அழிவால் தானே ஒன்று வளரமுடியும்? எங்களோடு ஒத்துழைத்தால் நீங்களும் பிழைக்கலாம்' என்றாராம்.

"சேரவில்லை என்றால்?"

'பலவகைத் தொல்லைகள், பிரச்சனைகள் இருக்கும். பார்த்துக் கொள்ளுங்கள்' என்றாராம்.

இந்தச் சந்திப்பின்போது குளிர் பானம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் மதுரை கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் உள்ளக் கொதிப்போடுதான் வெளியேறி இருக்கின்றனர்.

அதன்பிறகே உண்ணாவிரதம், கண்டனப் போஸ்டர்கள் என இறங்கியிருக்கின்றனர். 'ஒருநாள் கூட ஒளி



டி.வி.ரமேஷ்

பரப்பை நிறுத்தக்கூடாது. உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டும்' என்றெல்லாம் மிரட்டல்கள். இதற்கு சிலர் பயந்தும் பின்வாங்கியிருக்கின்றனர். பின்பலமாக இருக்கிறோம், நிதி மட்டும் தருகிறோம் என்றும் சிலர் ஒதுங்கினாலும் போராட்டம் நடந்தே இருக்கிறது.

இந்தியப்பிரதமர், தமிழக முதல்வர், உள்துறை அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், மாநில ஆளுனருக்கும் சங்கத்தின் சார்பில் 'ஃபேக்ஸ்' தரப்பட்டிருக்கின்றது. சுமங்கலி விடுவதாக இல்லை. போராட்டம் ஓய்வதாக இல்லை.

சுமங்கலி வந்தால் இன்னும் என்னென்ன வகையில் உங்களுக்குப் பாதிப்பு? என்று கேட்டு முடிப்பதற்குள் டிவி ரமேஷ் தனது ஆதங்கத்தைக் கொட்டித்தீர்த்தார். "மதுரையில் என்ன திருவிழா நடந்தாலும் அதை உடனடியாக, நேரடி ஒளிபரப்பு செய்து வருகிறோம். இது மதுரை மக்களை மிகவும் கவர்ந்திருக்கிறது. இங்கே பல தனிச் சேனல்களை நாங்கள் நடத்துகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

நிகழ்ச்சிகளை சாட்டிலைட் சேனல் களுக்கு இணையாக வழங்குகிறோம். இதையெல்லாம் சுமங்கலி வந்துவிட் டால் நாங்கள் தொடரமுடியாது."

"கறுப்பு - வெள்ளை டிவிக்கள் தான் 70 சதவீத வீடுகளில் உள்ளன. அவற்றில் 12 சேனல்களை மட்டுமே பார்க்க முடியும். இதை பிரைம் பேண்ட் என்பார்கள். இதில் பெரும் பகுதியை சன் நெட் ஒர்க் மட்டுமே ஆக்கிரமிக்கும் அபாயம் உண்டு. சென்னையில் பெரிய சலசலப்புக்குப் பிறகுதான் ஜெயா டிவியே இந்த பிரைம் பேண்டின் கடைசியில் வைக் கப்பட்டிருக்கிறது. புதிய கலர் டிவிக் களில் மட்டுமே 60 சேனல்கள் உண்டு. இப்படி இருக்க, 60 சேனல்களையும் பெரும்பகுதி மக்கள் பார்க்கவே முடி யாது. இருந்தாலும் சுமங்கலி வந்தால் மக்கள் தலையில்தான் சுமையை ஏற்ற வேண்டிவரும். சுமங்கலி ஒரு இணைப் புக்கு 50 ரூபாய் கேட்கிறது. அதுபோக வயர் செலவு, பராமரிப்பு, சம்பளம், வரி என்று அனைத்தையும் கூட்டினால் இப்போது நாங்கள் வாங்கும் தொகையை விட இரண்டு மடங்கு மக்களிடம் வசூலிக்க வேண்டியி ருக்கும்" என்று சொல்லி முடித்தார் ஒரே மூச்சில்.

"தனியாக நாங்கள் நடத்தும் சேனல்களால் மக்களுக்கும் புதிய நிகழ்ச்சிகள் கிடைக்கின்றன. அதே சமயம் உள்ளூர்த் தொழில் நிறுவனங் களின் விளம்பரங்களால் எங்களுக்கு வருமானம் வருகிறது. இதனால் எங்களால் குறைந்த கட்டணத்தில் நிறைய சேனல்களை வழங்க முடி கிறது" என்கிறார் மதுரையில் ஒளிபரப் பாகும் உள்ளூர் டிவியான 'ஸ்கை டிவி'யைச் சேர்ந்த வி.வி.சுரேஷ்.

"உண்மையில் உள்ளூர் வர்த்தக நிறுவனங்களுக்கு உள்ளூர் டிவி சேனல் விளம்பரங்கள்தான் கட்டுப்படி யாகும். சுமங்கலி வந்தால் அந்த வணிக நிறுவனமும், சேட்டிலைட் டையே விளம்பரத்திற்கு நம்ப



**சுமங்கலி டிவி நிறுவனத்தின் நிர்வாக அதிகாரி சி.டி.ராவ் நம்மிடையே கூறியதாவது:**

**"எந்தவொரு தொழிலிலும் போட்டி என்பது இருந்தால் தான் வாடிக்கையாளர்களுக்கு நல்லது. எங்கள் மூலம் அப்படியொரு போட்டி ஏற்பட்டிருக்கிறது. இது நுகர்வோருக்குத் தரமான ஒளிபரப்புகள் கிடைக்கவே வழிவகுக்கும்.**

**கேபிள் டிவி தொழில் இப்படியே இருக்கப்போவதில்லை. எதிர்காலத்தில் மிகப்பெரிய தொழில்நுட்ப மாற்றங்களைச் சந்திக்க வேண்டிவரும். அதற்கான முதலீடு செய்ய பலமில்லாத சிறிய இயக்குனர்கள் தாக்குப்பிடிக்க முடியாது. அப்போது எங்களைப் போன்ற 'நெட்வொர்க்' நிறுவனங்களுடன் இணைந் திருந்தால், அந்தப் புதிய மாற்றங்களைச் சிறிய நிறுவனங்களால் எளிதில் சந்திக்க முடியும் – தொடர்ந்து தொழில் நடத்தவும் முடியும்.**

**எங்களுடைய நோக்கம் வாடிக்கையாளர்களுக்குத் தரமான**




படிப்பகம்

www.padippakam.com

வேண்டிய கட்டாயம் ஏற்படும். அது செலவு மிகுந்தது. மதுரையில் உள்ள வியாபாரிக்குத் தமிழ்நாடு முழுவதும் விளம்பரம் செய்து என்ன லாபம்?'' என்று கேட்கும் சுரேஷ் உள்ளிட்ட இவர்கள் சுமங்கலிக்கு விடுக்கும் வேண்டுகோள் இதுதான். 'படித்த, வேலையில்லாத இளைஞர்கள் தாங்களாகக் கஷ்டப்பட்டுப் போராடி வளர்த்த தொழிலை அவர்களே தொடர்ந்து நடத்திட ஆதரவாக இது போன்ற புதிய நிறுவனத்தைத் திணிக்க வேண்டாம்' என்பதே. இது அவர்கள் காதில் எட்டுமா?

தமிழக முதல்வரின் மருமகனும், மத்திய அமைச்சருமான முரசொலி மாறனின் மகன் கலாநிதி மாறனின் நிறுவனம் எனும்போது சுமங்கலிக்குப் பின்னணியாக, பக்கபலமாக அரசியல் இருக்காது என்பது முழுப்பூசணியைச் சோற்றில் மறைப்பதாகத்தான் இருக்க முடியும். சுமங்கலியை விரும்பாத பலரும் அதை எதிர்க்க, எதிர்கொள்ளத் தயங்குவதும் இதன்காரணத்தால்தான்.


'கண்ட்ரோல் ரூம்'

ஒரு ஜனநாயக நாட்டில் சட்டத்

**சேவையை உறுதிப்படுத்துவதுதான். இதில் அரசியல் எதுவும் இல்லை. சுமங்கலி டிவியின் நிர்வாக இயக்குனர் குடும்பத்துக்கு அரசியல் பின்னணி உண்டு என்றாலும், நிறுவனத்தில் அரசியல் இல்லை. இதில் பணிபுரிகிற எல்லோரும் தொழில்ரீதியாக உள்ளவர்கள்தான். இதை எதிர்ப்பவர்கள்தான் அரசியல் பின்னணியோடு எதிர்க்கிறார்கள்.**

**ஒரு இணைப்புக்கு 50 ரூபாய் வீதம் வசூலிக்கிறோம். ஆனால் கேபிள் ஆபரேட்டர்கள் தங்களது மொத்த இணைப்புகளில் 10 சதவீதத்துக்குத்தான் எங்களுக்குக் கட்டணம் செலுத்துகிறார்கள் — ஆனால் முழுமையாக எங்கள் சேவையைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.**


**சென்னையில் நாங்கள் சட்டவிரோதமாகச் சாலைகளைத் தோண்டி கேபிள் பதிக்கிறோம் என்ற குற்றச்சாட்டிலும் உண்மையில்லை. அதைச் செய்வது ''வொர்ல்ட் டெல்'' நிறுவனம். அந்த நிறுவனமும் இந்திய அரசுடன் உடன்பாடு செய்துகொண்டு அனுமதி பெற்றே பூமியைத் தோண்டுகிறது. நாங்கள் கம்பங்களில் கம்பி இணைப்பு ஏற்படுத்தித்தான் சானல்களை வழங்குகிறோம்.''**

—சந்திப்பு : ***அ.குமரேசன்***



படிப்பகம்

www.padippakam.com



திற்குட்பட்டு யாரும் எந்தத் தொழிலும் செய்யலாம்தான். அதே நியாயமான உரிமையைத்தான் இந்தக் கேபிள் ஆபரேட்டர்களிடமிருந்து பறிக்கக் கிளம்பியிருக்கிறது இந்தச் சுமங்கலி. சன் டிவி உட்பட அனைத்து டிவி சேனல்களின் வளர்ச்சிக்கும் வியர்வை சிந்தி உழைத்தவர்கள் இவர்களே. பணம் கொட்டி முதல் போட்டு தங்களுக்குத் தடம் போட்டுக் கொடுத்தவர்களையே விழுங்கி ஏப்பமிட 'சுமங்கலி' எண்ணுகிறது. விருப்பமில்

**கே**பிள் டி.வி. நடத்துவோருக்கென நிறைய சங்கங்கள் தமிழ்நாட்டில் முளைத்து விட்டன. அவற்றில் ஒன்றுதான் தமிழ்நாடு கேபிள் டிவி இயக்குனர்கள் சங்கம். அதன் பொதுச்செயலாளர் காயல் இளவரசு ஒரு மாறுபட்ட கருத்தைக் கூறுகிறார்.



''இப்போது நிறைய சானல்கள் [கட்டணம் செலுத்தி செயற்கைக்கோள் இணைப்புகள் பெறுவது] துவக்கப்படுகின்றன. குறைந்தது ஐம்பதாயிரம் ரூபாய் செலுத்தினால்தான் இப்படிப்பட்ட 'பே' சானல்களுடன் நாங்கள் தொடர்பு கொள்ள முடியும். சிறிய கேபிள் டிவி இயக்குனர்களால் தாங்க முடியாத தொகை இது.

அதேசமயத்தில் டிஸ்கவரி சானல், இஎஸ்பிஎன் போன்ற ஒளிபரப்புகளை நாங்கள் தராவிட்டால் வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்த முடியாது. அவையெல்லாம் 'பே' சானல்கள்தான்.

இந்த நிலைமையில் இப்படியொரு பெரிய நிறுவனம் தானே மொத்தப் பணத்தையும் செலுத்திவிட்டு எங்களுக்குக் குறைந்த கட்டணத்தில் வழங்குவது ஒரு வாய்ப்புதான். இது சிறிய இயக்குனர்கள் எல்லா சானல்களையும் வழங்க உதவுகிறது.'' என்கிறார் அவர்.

—சந்திப்பு : ***அ.குமரேசன்***



படிப்பகம்

www.padippakam.com

## நித்திய கண்டம்...

கேபிள் ஆபரேட்டர்களுக்கு ஏற்கெனவே பல்வேறு தலைவலிகள் உண்டு. அவர்களின் முதலீட்டின் பெரும் பகுதி வீதிகளில், திறந்த வெளியில் தான் இருக்கின்றது. இயற்கைச் சீற்றம், திருட்டு, வெயில், மழையால் பாதிப்பு என்று அவற்றின் ஆயுள் நித்திய கண்டத்தில் தான். அதுபோக கட்சிப் பிரமுகர்கள், அரசு அதிகாரிகள் தொடங்கி, போலீஸ், ஏரியா தாதாக்கள் வரையில் 'ஓசி' இணைப்பு வேண்டி மிரட்டல்களும், மறைமுகத் தொந்தரவுகளும் அதிகம். மாதம் முழுவதும் வசூல் செய்தாலும் 30 சதம் பாக்கி எப்போதும் நிலுவையிலிருக்குமாம். இதில் கேளிக்கை வரி ஒரு இணைப்புக்கு 20 ரூபாய், கட்டணச் சேனலுக்கு [10க்கு] 25 ரூபாய். இதுபோக மின்கட்டணம், அலுவலக, கட்டுப்பாட்டறை வாடகை, பணியாள் சம்பளம், முதலீட்டிற்கான வட்டி என்று எப்போதும் இவர்கள் தூக்கமின்றி விழி பிதுக்கிப் போய் இருக்கிறார்கள்.



லாதவர்களை எல்லாவகையிலும் மிரட்டிப் பணியவைக்க முயல்கிறது. அவர்களின் கோடிக்கணக்கான முதலீடு. டிஷ் ஆண்டெனாக்கள், கண்ட்ரோல் ரூம் உபகரணங்கள் எல்லாவற்றையும் குப்பையில் தூக்கிப்போடச் சொல்கிறது இந்த ஏகபோக முயற்சியில் இறங்கியிருக்கும் சுமங்கலி. இது தொழில் வளர்ச்சிக்கு மட்டுமல்ல, ஜனநாயகத்துக்கும், கலைச் சுதந்திரத்திற்கும் உண்டாகியிருக்கும் சவால் தான். சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கும் வேளையிது. தங்களின் சுய தம்பட்டங்களை பூதாகரமாக மக்கள் தலையில் திணிக்கவும், மாற்றுக் கருத்துக்களை மண் தோண்டிப் புதைத்துவிடவும் இந்த மின்னணு ஊடக ஆதிக்க முயற்சி நடக்கிறதோ என பலரும் சந்தேகிப்பதில் நியாயம் இல்லாமல் இல்லை. சுமங்கலி எனும் இந்த ஆக்டோபசின் கொடுங்கரங்கள் எல்லா திசைகளையும் பற்றிப் படரும் முன் விழித்துக்கொள்ளுமா தமிழகம்?

●



படிப்பகம்

www.padippakam.com



# "ஆனந்தன் பிலிம் நியூஸ் ஆனந்தன் ஆன கதை"

**சென்னை இராயப்பேட்டையில் 'பிலிம் இன்பர்மேஷன் சென்டர்' நடத்திவரும் திரு. பிலிம் நியூஸ் ஆனந்தன், தான் 'பிலிம் நியூஸ்' ஆனந்தன் ஆன கதையை இங்கே விவரிக்கிறார்**

சென்னையில் உருவான கிட்டத்தட்ட 5000க்கும் மேற்பட்ட தமிழ்த் திரைப்படங்கள் மற்றும் சென்னையில் தயாரான, கன்னட, மலையாள, தெலுங்கு, இந்தி திரைப்படங்களின் தகவல்கள் மற்றும் புகைப்படங்களைச் சேகரித்து திரைப் பட ஆய்வாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு ஓர் அரிய களஞ்சியமாகத் திகழ்பவர் பிலிம் நியூஸ் ஆனந்தன். இவரது சேவையைப் பாராட்டி 1997ம் ஆண்டில் அமெரிக்க அமைப்பு ஒன்று உலகிற் சிறந்த 5000 பேர்களுள் ஒருவராக இவரைத் தேர்ந்தெடுத்துள்ளது. தமிழக அரசின், 'கலைமாமணி' மற்றும் 'கலைச் செல்வம்' என்று இவர் பெற்ற பட்டங்கள் ஏராளம்.

**நல்ல பழக்கங்களும், பழக்கங்களை ஒட்டி அமைந்த சூழல்களும், ஒரு மனிதனை எவ்வாறு உருப்படியான சாதனையாளனாக மாற்றியது என்பதற்கு ஆனந்தன் பிலிம் நியூஸ் ஆனந்தன் ஆன கதை ஓர் உதாரணம்.**

"எனக்குச் சின்ன வயதிலிருந்தே ஸ்டாம்புகள் சேகரிக்கும் பழக்கம் இருந்தது. கல்லூரி வந்ததும் அந்தப் பொழுதுபோக்கு நின்றுவிட்டது. ஸ்டாம்புகள் பாக்கெட்டுக்ளில் கிடைக்க ஆரம்பித்தவுடன் அதிலிருந்த ஆர்வம் குறைந்துவிட்டது. அதுபோல ஒரு பொழுதுபோக்குப் பழக்கமாகத்தான் சினிமாத் தகவல்கள் சேகரிப்பும் ஆரம்பமானது. பிலிம் சேம்பரில் ஒரு புத்தகம் போடுகிறார்கள். 'Journal of the film chamber'–ன்னு மாதப்பத்திரிகை அது. அந்தப் பத்திரிகைக்காக மாதத்துக்கொரு



படிப்பகம்

www.padippakam.com

முறை ஸ்டூடியோ சென்று என்னென்ன படம் நடந்துள்ளது. அந்தப் படம் பெயர். கம்பெனியின் பெயர். ஹீரோ. ஹீரோயின். டைரக்டர் இதைச் சேகரித்துக்கொடு என்று என்னிடம் வேலை கொடுத்தார்கள். அதுக்காக மாதா மாதம் 25ம்தேதி போவேன். ஸ்டூடியோவில் 'கால்ஷீட்' ன்னு ஒரு புக் இருக்கும். அந்தப் புக்குல கம்பெனி பெயர். படம் பெயர்தான் இருக்குமேயொழிய. டைரக்டர் பெயர் மத்ததெல்லாம் இருக்காது. மாதா மாதம் இவ்வாறு செய்து டைப் பண்ணி பத்திரிகைக்குத் தருவேன். இந்தத் தகவல்களையெல்லாம் வைத்துக்கொண்டு ஏன் புள்ளிவிவரம் தயார் செய்து. பத்திரிகைகளுக்கெல்லாம் கொடுக்கக் கூடாது என்று ஒரு எண்ணம் 1954 லேயே வந்தது. அப்ப ஒரு 25 வயது இருக்கும். 1.1.1927ல் பிறந்தவன். அப்படி எண்ணம் வந்தவுடன் அது போலச் செயல்பட ஆரம்பித்தேன். வெறும் தகவல்களோடு மட்டுமல்லாமல் ஒரு படத்துக்கு ஒரு 'ஸ்டில்' சேர்த்தாலென்னன்னு ஒரு ஆசை வந்திச்சு. அப்படி சேர்க்க ஆரம்பிச்சேன்.

அது தவிர அப்ப நான் போட்டோ கிராபர். சின்ன வயசுல பாக்ஸ் கேமரா வச்சு படம் எடுப்பேன். அதுலயே டபுள் ரோல் - அதாவது ஒருத்தரே ரெட்டை வேஷத்தில் இருப்பது மாதிரியெல்லாம் படம் எடுப்பேன். படம் எடுத்து எடுத்து ஆல்பத்தில் ஒட்டி வைப்பேன். அதற்கப்புறம் கேமராமேன் ஆக வேண்டும் என்று ஆசை வந்தது.

என்.எஸ்.கே.யோட கேமராமேன் சி.கே.மோகன். அவர்தான் எனக்குக் கத்துக்கொடுத்தார். அந்த நேரம் சூட்டிங் இல்லாததால். அவரிடம் வகுப்புக்குச் செல்வேன்.

அந்தக் காலத்துல நியூடோன் ஸ்டூடியோ என ஒன்றிருந்தது. தியாகராஜ பாகவதர் நடித்த படமெல்லாம் எடுத்த இடம் - மெட்ராசிலேயே பெரிய ஸ்டூடியோ. அதன் மாடியில் தான் போட்டோகிராபி வகுப்பு நடந்தது. நான் என்னுடைய 'பாக்ஸ்' கேமராவையே எடுத்துச் சென்றேன். அது அப்போ ஸ்டூடியோவுக்கெல்லாம் எடுத்துச் செல்கிற மாதிரி இருக்காது. அவ்வளவு அசிங்கமாக இருக்கும். ஆனால், எனது குருநாதர் எனது ஆல்பத்தைப் பார்த்தார். அதிலுள்ள போட்டோவெல்லாம் நான் எடுத்ததுன்னு சொன்னா நம்பவே மாட்டேங்குறார். முடியவே முடியாது. எப்படி எடுத்தீங்க என்றார். சார் இந்த பாக்ஸ் கேமராவில தான் எடுத்தேன்.



"இவ்வளவு நல்லா இருக்கே ஏன் நீ நல்ல கேமரா ஒண்ணு வாங்கக் கூடாது" என்றார். ஜெர்மன் காமரா, 'ரோலிரிளெக்ஸ்னு' பேரு. அந்தக் காலத்தில் அதோட விலை ரூபாய் ஆறாயிரம். அதுல எடுத்தா போட்டோகிராபி கத்துக்கிறதோட ஸ்டில்ஸ்ம் பிரமாதமாக இருக்கும்னார். அந்தக் காமரா ஒண்ணு வாங்கிட்டேன்.

ஆனா அன்றைக்கு ஸ்டூடியோவுக்கு போகும்போது நிறைய



படிப்பகம்

www.padippakam.com

ஆர்ட்டிஸ்டுகள் இருப்பார்கள். நான் யாரையும் பார்க்கமாட்டேன். நான் பாட்டுக்கு மாடிக்கு வகுப்புக்குப் போவேன், வருவேன். ஏதோ ஸ்டுடியோவில் வேலை செய்கிறவன்போல என்று எல்லோரும் நினைத்தார்கள்.

புதுகேமரா வாங்கியவுடன் அதில் பிலிம் லோட் செய்து ஸ்டில்ஸ் எடுத்தாக வேண்டுமே. அப்பக் கீழே இறங்கிவந்து பார்த்தேன். சிவாஜி கணேசன் இருந்தார். ராஜா'ராணி மேக்கப்ல ஒரு சேர்ல உட்கார்ந்திருந்தார். அவர் கிட்டச் சென்று ஒரு ஸ்டில் எடுத்துக்கட்டுமா என்று கேட்டேன். உடனே அவர் "அப்கோர்ஸ், யு கேன் டேக் இட்"னு இங்கிலீசிலே சொன்னார். எனக்கே ஆச்சர்யமாக இருந்தது. அப்புறம் எடுத்தேன். சினிமா ஸ்டில் எடுத்தது அதுதான் முதல் தடவை.

அப்புறம் மாதா மாதம் ஸ்டுடியோ ரவுண்ட் போகும்போதும் படம் எடுப்பேன். ஆர்ட்டிஸ்ட் எல்லாம் செட்டில் இருப்பார்கள். நான் செட்டில் இருக்கும்போது எடுப்பதில்லை. செட்டுக்கு வெளியே இருக்கும் ஸ்டில் தான் நான் எடுப்பேன். அதுக்கு 'வொர்க்கிங் ஸ்டில்' என்று பேரு. அதுமாதிரி ஸ்டில்லு புரொடியூசர்ட்ட கிடைக்காது. யாராவது வேணும்னு போய் எடுத்தாத்தான். அந்தக் காலத்துல பத்திரிகை சம்பந்தப்பட்டவுங்க ஸ்டுடியோ போறதே அபூர்வம்.

பேசும்படத்துல சுப்பாராவ்னு ஒரு கேமரா மேன். அவரு ஸ்டில்ஸ் எடுப்பாரு. மற்றதெல்லாம் புரொடியூசர்






படிப்பகம்

www.padippakam.com

குடுப்பதுதான்.

அப்ப எடுக்குற போட்டோவை யெல்லாம் ஆல்பத்துல ஒட்டி வெச்சுக் கிட்டு என் குரு சொன்னபடி அதுக் குக்கிழே அந்தப் படம் எப்படி எடுக் கப்பட்டது, எந்தத் தேதியில் எடுத்தது என்கிற விபரத்தையும் எழுதி ஒட்டி வைத்து விடுவேன்.

இந்த ஆல்பம் பத்திரிகைக்கு குடுக் கணும்னு எண்ணத்துல தயாரிச்ச தில்லை. அதோட சம்பந்தப்படாதது. படம் எடுத்தாச்சுன்னா ஒட்ட வேண் டியது. அப்பவே, கத்துக்கிறதுக்கு முன்னே, பசங்கள வைச்சு எடுத்த படங்களே 500 இருக்கும்.

அப்ப, தாம்பரத்துக்கிட்ட பாண்டி பஜார்னு ஒரு இடம் இருக்கு. எங்க என்னுடைய காலேஜ்மேட்– கவர்ன் மெண்ட் ஆர்ட்ஸ் காலேஜ்ல நான் படிச்சது – அந்தக் காலேஜ் மேட், அவ ரைப் பார்த்தபோது எனது வண் டியை – அப்பக் கார் வைச்சிருந்தேன் – நிறுத்தினேன். அவர் வண்டியிலே ஏறினார். ஏறினதும் பார்த்தார். வண்டிக்குள் ஆல்பம் இருந்தது. படம் எல்லாம் பார்த்து ஆச்சரியப்பட்டார். என்ன காரணம்னா, அவரு இப்ப காலேஜெல்லாம் விட்டுட்டு ஒரு பத்திரிகை ஆரம்பித்திருக்கிறார். 'பிலிம் நியூஸ்'னு ஒரு பத்திரிகை அவர் நடத்தினார். அவர் பெயர் தேவரா ஜன். அவர்தான் ஆசிரியர்.

ஆல்பத்துல இருந்த சிவாஜி, பத்மினி, எல்லோரோட படங்களை யும் பார்த்துட்டு இவ்வளவையும் வச் சிட்டு என்னப்பா செய்கிறாய் என் றார். நான் சும்மா எடுப்பேன், ஒட்டி வைத்துக்கொள்வேன் என்றேன். அவர் 'என் பத்திரிகைக்குக் கொடு நான் போடுகிறேன்' என்றார். என்ன பத்திரிகைன்னு கேட்டேன். 'பிலிம் நியூஸ்'னு சொன்னார். நான் தவறா மல் வாங்கும் பத்திரிகை. ஆனால் அவர்தான் ஆசிரியர்னு தெரியாது. அப்புறம் அதிலிருந்து பிலிம் நியூஸ் பத்திரிகையில் படங்கள் வெளி வந்தன. அந்தப் பத்திரிகை 1954, 55, 56 ஆகிய மூன்று ஆண்டுகள்தான் வெளி வந்தது. நான் எடுத்த போட்டோக் களை அதில் பிரசுரித்து கீழே, புகைப்படம் – பிலிம் நியூஸ் ஆனந் தன்னு போடுவாரு.

அதுமுதல் எல்லோரும் வெறும் ஆனந்தன் என அழைக்கமாட்டார் கள். 'பிலிம் நியூஸ் ஆனந்தன்'னுதான் கூப்பிடுவார்கள். வித்தியாசமான புகைப்படங்களாக அவை இருந்த தால், அன்று தனிமரியாதை. நல்ல வரவேற்பு இருந்தது. 'ஆனந்தன் சார்'ன்னு தான் கூப்பிடுவார்கள். அது அந்தக் காலம். இப்பொழு தெல்லாம் 'ஆனந்தா'ன்னு கூப்பிடு கிறவர்களெல்லாம் இருக்கிறார்கள். அந்தக் காலத்தில் நான் இருந்தேன் என்கிற பெருமிதம் எனக்குண்டு.

அந்தக் காலத்துல நான் எடுத்த படங்கள்ள அபூர்வமா நான் நினைக் கிறது முதல்படக் கதாநாயகி டி.பி. ராஜலட்சுமி, முதல் சலனப்படம் எடுத்த நடராஜ முதலியார் ஆகியோர் படங்களே. அவர யாருன்னு தெரி யாது. தமிழ் சினிமா வெள்ளி விழாவின்போது எஸ்.எஸ்.வாசன் ஒரு விழா நடத்தினார். அந்த விழா வில் நடராஜ முதலியாருக்குப் பொன் னாடை போர்த்தி மரியாதை செய்த னர்.

நான் முதல் சலனப்படம்



படிப்பகம்

www.padippakam.com

## இவர் நகைச்சுவை நிரந்தரமானது





'ஒரு காலத்தில் ஒரு வேளை உணவுக்கும் வகையற்றுப்போய் தெருக்களில் தன் அம்மாவுடன் சேர்ந்து பிச்சையெடுத்துத் திரிந்தவர்தான் சார்லி சாப்ளின். பிற்காலத்தில் அவர் வீதிகளில் நடந்தால் அவரைக் காண்பதற்காக போலீசாரே கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு மக்கள் கூட்டம் அலைமோதியது. அவர், நம்மைச் சிரிக்க வைத்ததோடு, அழவும் வைத்தார். சாப்ளின் நகைச்சுவை நிரந்தரமானது. இன்று பல திரைப்படங்களின் புகழ் பத்து தினங்களுக்கு மேல் நீடிப்பதில்லை. ஆனால் சாப்ளின் படங்களின் புகழ் ஆண்டுகள் செல்லச்செல்ல அதுவும் அதிகரித்துக்கொண்டே போகிறது'.

*– கேரள மாநில கோழிக்கோடு நகரில் நடைபெற்ற சார்லி சாப்ளின் விழாவில் பிரபல மாலையாள திரைப்படப் பாடலாசிரியர் எம்.டி.வாசுதேவன் நாயர் பேசுகையில் கூறியது.*

எடுத்தவர் என்கிறார்களே என்று ஒரு ஸ்டில் எடுத்துக்கொண்டேன். அந்த நெகட்டிவை விவரங்கள் எழுதி ஒரு கவரில் போட்டு வைத்துவிட்டேன். ஏறக்குறைய மறந்தும் விட்டேன். அதற்கப்புறம் சினிமாவின் 50வது வருடத்தில் பல நெகட்டிவ்களைத் தேடியபோது இந்தக் கவர் கிடைத்தது. எனக்கு ஒரே சந்தோஷம். சினிமாவின் 50வது வருடத்தில் நடராஜ முதலியார் உயிருடன் இல்லை.

பிலிம் நியூஸ் பத்திரிகை நின்று போனபின்னும் எனது சேகரிப்பைத் தொடர்ந்தேன். 1931 முதல் 53 வரை விவரங்கள் கிடைக்கவில்லை. படாத பாடுபட்டு இரண்டு வருடங்கள் அலைந்து அந்தக் காலத்தில் வந்த படங்கள் குறித்த விவரங்கள், சென்சார் சர்டிபிகேட், சினிமா பத்திரிகைகள், பழைய பாட்டுப்புத்தகங்கள் போன்றவற்றின் மூலம் சேகரித்தேன். இப்பத் தேதிவரைக்கும் உள்ள படங்கள் குறித்த விவரங்களைச் சேகரித்துக்கொண்டே வருகிறேன்.

1954ல் 'நடிகன் குரல்'னு ஒரு பத்திரிகை. சினிமா நடிகர்கள் சங்கப் பத்திரிகை. அதுக்கு நான் 'ஸ்டார் போட்டோ கிராபர்'. எம்ஜிஆர்தான் பப்ளிஷர். வீரப்பன்தான் மானேஜர். நாடோடி மன்னன் படம் அப்ப நடந்துக்கிட்டிருந்திச்சு. அந்தப் படத்துக்கான ஸ்டில்ஸ் எல்லாம் இருந்தன. வீரப்பன் சாரிடம் கேட்டேன், இதெல்லாம் என்ன சார்? என்று. அவர்



படிப்பகம்

www.padippakam.com

இவை படங்களுக்கான ஸ்டில்ஸ் என்றார். அவற்றை யார் யார் விளம்பரம் தருகிறார்களோ அவர்களுக்கு மட்டும் தான் கொடுப்பார்கள். வேற சோர்ஸ் கிடையாது. சார் இந்த ஸ்டில்ஸை எல்லாம் பத்திரிகைக்கு நான் குடுக்கலாமா என்று வீரப்பன் சாரிடம் கேட்டேன். அவர் நீ குடுத்தா என்ன? யார் குடுத்தா என்ன? எனக்கு வேண்டியது பத்திரிகையில் வரணும். அவ்வளவுதான் என்றார். அப்ப தென்னிந்திய சினிமா பத்திரிகையாளர் சங்கம்னு ஒண்ணு இருந்தது. நான் அதில ஒரு ஆக்டிங் மெம்பர். அதனால அடிக்கடி பத்திரிகையாளர்கள் சந்தித்துக்கொள்வோம். நான் நாடோடி மன்னன் ஸ்டில்ஸ்களை எல்லோரிடமும் கொடுத்தேன். எம்ஜிஆர் படம் என்றதும் எல்லோரும் போட்டுவிட்டனர். எம்ஜிஆருக்கே பெரிய ஆச்சரியம். எந்தப் பத்திரிகையில் பார்த்தாலும் நாடோடி மன்னன் ஸ்டில்ஸ் வந்திருக்கிறதே என்று! வீரப்பனிடம் விசாரித்துவிட்டு, என்னிடம் நன்றி சொல்லச் சொல்லியிருந்தார். அப்போதிருந்துதான் பி.ஆர்.ஓ. என்றொரு முறையே தமிழ்ச் சினிமா உலகில் உருவாகியது.

இவ்வளவும் செய்தும் டைட்டிலில் எனது பெயர் இல்லை. பி.ஆர்.ஓ. என்ற சிஸ்டம் அப்போது இல்லை. அந்த நேரம் எனக்குப் போட்டியாக ஆளே இல்லை. எனது அசிஸ்டெண்ட்தான் அடுத்த பிஆர்ஓ ஆனார். கிளாமர் கிருஷ்ணமூர்த்தி அவர் பெயர்.

அப்புறம் நடிகர் நடிகைகளுக்கு நூறு படங்கள் முடியும்போது. அவர் நடித்த படங்களின் கண்காட்சி வைக்கிற முறையே நான்தான் கொண்டு வந்தேன். ஜெயலலிதா. கே.ஆர். விஜயா போன்றவர்களுக்கு ஆரம்பத்தில் அவ்வாறு செய்தேன். அது குறித்து ஒரு புத்தகமும் வெளியிட்டேன்.

தமிழ்ப்படங்கள் மட்டுமல்லாது காலப்போக்கில், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்றவையும் சேகரித்தேன். அதாவது தமிழ்நாட்டில் தயாரான படங்கள்.



சில ஸ்டில்ஸ்களைப் பணம் கொடுத்தும் வாங்கிச் சேகரிப்பேன். ஆனால் நான் இவ்வாறு செய்வது பலருக்குப் பிடிக்காமல். நான் விவரங்கள் சேகரிக்கச் செல்லும்போது உதாசினப்படுத்துபவர்களும் உண்டு. நான் அவர்களை நம்பாமல் தினசரி பத்திரிகைகளில் வருபவற்றிலிருந்தும் எனது சேகரிப்பைத் தொடர்கிறேன்.

எனது காலத்திற்குப்பின் எனது சேகரிப்புக்கள் என்ன ஆகும் என்பது தெரியாது. பலர் வந்து கேட்கிறார்கள். எல்லாம் பணம் பின்னால் தருகிறோம். இப்போது கொடுங்கள் என்கிறார்கள். சிங்கப்பூரிலிருந்தெல்லாம் வந்து கேட்டார்கள்.

நான் யாரிடமும் தருவதாக இல்லை. நான் இருக்கும் வரை இது பலருக்கும் பயன்பட்டால் சரி. என்னுடைய திருப்திக்காகத்தான் இவையெல்லாம் செய்கிறேன். இந்தியாவில் மட்டுமல்ல வெளி நாட்டிலும் எனது பெயர் பரவியிருக்கிறது. எனக்குக் கிடைத்திருக்கும் விருதுகளைவிட. கிடைக்காத அபூர்வமான படங்கள் கிடைக்கும்போதுதான் எனக்கு எப்போதும் சந்தோஷம்.

சந்திப்பு - **ஸ்ரீரசா. அ.குமரேசன்**



படிப்பகம்

www.padippakam.com

# மகளே... மாணிக்கத் தேரே...

நவகலி

நிலவுக்குள் இருந்து வந்தாயோ – மகளே
மலருக்குள் இருந்து வந் தாயோ (நிலவுக்குள்)
ஐயிரண்டு மாதம் அன்னை மணிவயிற்றில்
ஒளிந்துகொண் டிருந்தபின் உலகில் வந்தாயோ? (நிலவுக்குள்)
உன்னைத் தழுவுகின்ற பொழுது – இந்த
உலகைத் தழுவுகின்ற மகிழ்வு
என்னையும் குழந்தை என மாற்றி – புது
இன்பத்தைத் தந்தாய்
அன்பின் அமுதத்தை ஊற்றி
பெண்ணே என் கண்ணே என்
பிஞ்சு உலகமே
உன்னை அணைக்கின்றேன் உயிர் எனப்போற்றி (நிலவுக்குள்)
வயலில் வளரும் இளநாற்றே – என்னை
வளைய வரும் தென்றல் காற்றே
பெண்ணின் பெருமையினைப் பேசும் – புதுப்
பிறவி எடுத்த உன்னை
நினைக்க நெஞ்சில் ஒளி வீசும்
மகளாக வந்த மாணிக்கத் தேரே
சொல்லில் அடங்குமோ நான் கொண்ட பாசம் (நிலவுக்குள்)
பெண்ணடிமை பேசுகிற நாடு – பணப்
பேய்கள் உலவும் சுடுகாடு
முன்னடியை கம்பீரமோடு – உன்
மூச்சையே புயலாய்
விடணும் கோபக் குறியோடு
உன்னடிமை தீர
ஓங்கி வளர்ந்து வா
பாரதிக் கவிஞனின் பாட்டுப் பலத்தோடு (நிலவுக்குள்)





படிப்பகம்

www.padippakam.com



# நான் எந்தப் பக்கம்?

நான் மூன்று நபராகப் பிரிந்திருக்கிறேன். அதில் இருவர் தங்களுக்கிடையில் விவாதம் செய்து கொண்டிருக்கின்றனர். மூன்றாவது நபர் – நான் – இருவரது விவாதங்களையும் விருப்பு வெறுப்பின்றி கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். என் மனம் நீதிமன்றத்தின் துலாக்கோல் போன்று இருக்கிறது. உறக்கம் கொள்ளவில்லை. ஒரு மணி நேரமாகப் படுக்கையில் புரண்டு கொண்டிருக்கிறேன். ஆயினும் தூக்கம் வரும் அறிகுறியே இல்லை. வழக்கம்போல காலையில் எழுந்து வீட்டு வேலைகளைச் செய்து முடித்துவிட்டு அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும்.

அவர் மறுபக்கம் திரும்பிக் கொண்டு படுக்கையில் படுத்திருக்கிறார். அவர் திடமான முடிவிற்கு வந்துவிட்டார். தனது முடிவு இறுதியானதென்றும். அதில் விவாதத்திற்கோ, தூண்டுதலுக்கோ இடமில்லை என்றும் தெளிவாக அவர் என்னி



*தெலுங்கில் :* அப்பூரி சாயாதேவி

*ஆங்கில வழித் தமிழாக்கம் :* திருவைகாவூர் கோ.பிச்சை



படிப்பகம்

www.padippakam.com

டம் கூறிவிட்டார். அவர் தனது தீர்மானத்தில் பிடிவாதமாக இருந்தார். அவர் எப்போதுமே சரியான முடிவு எடுப்பதாகவும் ஆகவே அவர் சொல்கிறபடி அனைவரும் நடந்து கொள்ள வேண்டுமென்றும் எதிர்பார்க்கிறார். அவர்தான் இந்த வீட்டின் எஜமானர்.

பதா என்று முடிவு செய்வது அவ்வளவு சுலபம் அல்லவே. உடைக்க வேண்டியது பல் என்றால் எந்தக் கல்லால் உடைப்பது என்பது ஒரு விஷயமா என்ன? வாக்கைப் போட்டே ஆக வேண்டும் என்றால் எந்தக் கட்சி என்பதா முக்கியம்? நீங்கள் நினைக்கலாம்



எனது கணவர்; என் மகனின் தந்தை.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒருவருக்கோ அல்லது வேறு யாருக்காவதோ வாக்களிப்பது பற்றி முடிவு செய்வது போல, என் கணவர் பக்கம் நிற்பதா அல்லது என் மகனை ஆதரிப்

இதுவெல்லாம் பெரிய விஷயமா என்று! இது அம்மாதிரியான நிலைமை இல்லை!

அதிசயமான எங்கள் பையன் அந்தப் பெண்ணைத் தவிர வேறு யாரையும் மணம் செய்து கொள்ளமாட்



படிப்பகம்

www.padippakam.com

டேன் என்று மிக உறுதியாகப் பிரகட னம் செய்துவிட்டான். அந்தப் பெண் ணின் பெயர் கமல்ஜித்சிங். அவன் வேலை பார்க்கும் அதே கம்ப்யூட்டர் நிறுவனத்தில்தான் அவளும் வேலை பார்க்கிறாள். இதைக் கேள்விப்பட்ட நாள்முதல் என் கணவர் கோபாவே சம் கொண்டு விட்டார். "அவனுக்கு அவளைப் பிடித்திருக்கிறது. அவளை மணம் செய்துகொள்ள விரும்புகி றான். நாம் கட்டுப்படுத்துவதற்கோ, வற்புறுத்துவதற்கோ அவன் ஒன்றும் சிறுபிள்ளை அல்லவே. தன் படிப்பை முடித்துவிட்டு வேலையில் சேர்ந்து சம்பாதிக்கிறான். தன் காரியங்களை, தானே சுயமாகக் கவனித்துக் கொண் டிருக்கும்போது, நாம் ஏன் அவன் வழியில் குறுக்கிட வேண்டும்? சரி என்று ஏற்றுக்கொண்டு நாம் நமது கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள் வது நல்லதல்லவா?" என்று சொன் னேன். கோபம் கொண்டவராய், "அவனுக்குத்தான் அறிவு இல்லை என்றால் உன் அறிவு என்னவா யிற்று? சரி என்று சொல்ல இது என்ன முறையான திருமணமா? அல் லது பிறந்த நாள் கொண்டாட்டமா?" என்றார்.

"சாதாரணமாக ஒரு பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ள முடியும் என்றால் ஒரு திருமண வைபவத்தில் கலந்து கொள்வதில் என்ன தவறு?" இதைச் சொல்வதற்கு எனக்குத் துணிவு இல்லை. ஆனால், "இப்போது தான் சமூகத்தில் எந்தச் சாதி மத வேறுபாடும் இல்லை, எல்லோரும் சமம் என்று சொல்கிறோம். இல் லையா?" என்றேன்.

"பிறகு என்ன? நல்லதுதான். நீயும் உன் மகனும் சென்று குருத்வாராவில் சேர்ந்து கொள்ளுங்கள்" என்று சொல்லி சாப்பாட்டு மேஜையி லிருந்து வெகுண்டெழுந்து சென்று கை அலம்பிக் கொண்டார். அவர் நடந்து கொள்ளும் விதம் இப்படித் தான்!

– அவனோ – அந்த முரட்டுப் பிடி வாதக்காரன் – தனது திருமணத்திற்கு வந்து கலந்து கொள்ள சம்மதிக்காத வரை இந்த வீட்டில் சாப்பிட மாட் டேன் என்றும், மேலும் தனக்கு விடுமுறை இல்லை என்றும் அடுத்த ரயிலில் திரும்பு வதாகவும் சொல்லி விட்டான். அவன் இங்கு இருந்த மூன்று நாள்களும் தந்தை யின் முகத்தில் விழிக் கவும் இல்லை. அவரு டன் பேசவுமில்லை. தந்தையை எப்படி யாவது சம்மதிக்கவைப் பது என் பொறுப்பு



**காதலி :** "ஒருவேளை திடீர்னு எங்கேயும் ஓடிடற ஐடியா இருந்தால் மறக்காமல் என்னையும் கூட்டிக் கிட்டுப் போயிடுங்க!"

**காதலன் :** "சே! நான் பைனான்ஸ் கம்பெனி நடத்திக்கிட்டிருக்கிற விஷயத்தை உன்னிடம் சொன் னது பெரிய தப்பாவுல்ல போச்சு!"

– உ.ராஜாஜி

www.padippakam.com

என்று சொல்லிவிட்டு அவன் கிளம்பி விட்டான். இருவருக்கும் இடையில் மாட்டிக் கொண்டு நசுங்கிவிட்டேன். ஒரு வாரமாக என்னால் தூங்க முடிய வில்லை. வெளியே நடுங்க வைக்கும் குளிர், உள்ளே இதற்கு மாறாக என் மனம் உள்ளூர எரிந்து கொண்டிருந்தது.

வெளித் தாழ்வாரத்தில் காலை இளவெயிலில் குளிர் காய்ந்தவாறு அவர் செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்தார். அவரிடம் காஃபியைக் கொடுத்துவிட்டு பக்கத்தில் நாற்காலியில் அமர்ந்தேன். காஃபிக் கோப்பையை டீப்பாயில் வைத்துவிட்டு செய்தித் தாளில் முகத்தைப் புதைத்துக் கொண்டார். "தொலைபேசியில் பையனுக்கு நான் என்ன சொல்வது?" என்று வற்புறுத்திக் கேட்டேன். "அவனது பிரச்சனையை நினைத்து அவனை அழச்சொல்" என்று செய்தித்தாளை படபடவென்ற ஓசையுடன் புரட்டியபடிச் சொன்னார்.



"நாம் போகாமல் இருப்பது நன்றாக இருக்குமா? நாம் சரோஜாவிற்கும் ஏதாவது செய்தி தெரிவிக்க வேண்டும். அவளும் கூட தன் தம்பியின் திருமணத்தில் கலந்து கொள்ள விரும்பமாட்டாளா?" என்றேன்.

"அது நமது பரம்பரை சம்பிரதாய முறைப்படி நடைபெறும் திருமணம் அல்லவென்றும், அதற்குப் போகாமல் இருப்பதால் குடி முழுகிவிடாது என்றும் உன் மகளிடம் சொல்லிவிடு" என்று சரோஜா தனது மகள் அல்லாதவள் போன்று எனது முகத்தைப் பார்க்காமலேயே சொன்னார்.

"இன்றில்லாவிட்டால் என்றாவது ஒரு நாள் அவன் நம்மிடம் வருவான். நாமும் அவனிடம் போக வேண்டி இருக்கும். விஷயங்கள் இவ்வளவு தூரம் வந்துவிட்ட பிறகு நாம் என்ன செய்ய முடியும்? நாம் சென்று மணமக்களுக்கு அட்சதை சொரிந்து ஆசிர் வாதம் செய்வது நாகரிகமாக இருக்காதா?" என்று உத்தேசமாகச் சொன்னேன்.

"இந்த சாதிக் கலப்புத் திருமணத்திற்கு அட்சதை ஒரு கேடா? எல்லோரும் உன் தலையில்தான் அட்சதை போடுவார்கள்" என்றார்.

உண்மையில் அவன் சர்தாரிணியை மணம் புரிவதில் குறிப்பாக எனக்கு எவ்வித வருத்தமும் இல்லை.

சில மாதங்களுக்கு முன்பு திட்ட வேலைகள் சம்பந்தமாக தனது இரண்டு சகாக்களுடன் இந்தப் பெண்ணையும் கூடவே இங்கு அழைத்துக் கொண்டு வந்தது என் ஞாபகத்திற்கு வந்தது. இதையே அவர் ஒரே பிடியாகப் பிடித்துக் கொண்டார். "இதோ



படிப்பகம்

www.padippakam.com

பார் நீயும் உன் மகனும் எப்போதுமே ஒன்றாகவே சேர்ந்து இருக்கிறீர்கள். இந்த விவகாரம் பற்றி உனக்கு முன்பே தெரிந்திருக்கிறது. எனது கவனத்திற்குக் கொண்டு வராமலேயே நீங்கள் இருவரும் இவ்வளவு தூரம். எவ்வளவு ஏற்பாடுகள் செய்திருக்கிறீர்கள். எனக்கு மதிப்பும் இல்லை. என் மீது நம்பிக்கையும் இல்லை" என்று தடாலடியாகப் பேசினார்.

கட்டுப்பாடு என்ற பெயரால் சொந்த மகனைத் தன் அன்புப் பிடியிலிருந்து நழுவவிட்டதற்கு நான் எப்படிக் குற்றவாளியாக முடியும்? பையன் எல்லா காரியங்களுக்கும் என்னிடமே வருகிறான். எதையும் அப்பாவிடம் போய்ச் சொல் என்று நான் கேட்டுக் கொண்டாலும் அவன் போக மாட்டேன் என்கிறான். அவன் தனது அனைத்து காரியங்களுக்கும் என் உதவியையே நாடுகிறான். அப்படியும் அவன் என் சொல்படியே நடக்கிறானா என்றால் அதுவுமில்லை. அவன் எப்போதும் தன் வழியில்தான் செல்கிறான்.

எனக்கு முற்போக்கான கருத்துக்கள் இருந்தபோதிலும், அதை நடைமுறைக்குக் கொண்டுவர வழி இல்லை. எனது குழந்தைப் பருவமும் இப்படித்தான் இருந்தது. இப்போதும்கூட அதே நிலைதான். எனது அனுபவத்தில் நான் கற்றுக்கொண்டது இதுதான். எனது ஆசைகளை நிறைவேற்றத் தேவையான சுதந்திரத்தைத் தியாகம் செய்துவிட்டு வாழ்க்கையில் ஏற்படும் முரண்பாடுகளைத் தவிர்த்து விட்டு இருந்தால்தான் என் மனம் அமைதியைக்காண முடியும் என்பது தான்.

நீ விரும்புவதை அடைய சுதந்திரத்துடன் இருப்பது முக்கியமா அல்லது வாழ்க்கையில் நேரும் சச்சரவுகளில் இருந்து சுதந்திரம் பெறுவது முக்கியமா? எது முக்கியம் என்பதை அனுபவம் எனக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறது. அன்றாடம் ஏற்படும் முரண்பாடுகளின் அடிப்படையைத் தெளிவாகப் புரிந்து கொள்வதுதான். இதுதான் வாழ்க்கை முறை ஆகிறது.

இந்தக் குழப்பத்தில் நான் மூழ்கிக் கிடந்தபோது என் மகனிடமிருந்து ஒரு பதிவுத் தபால் வந்தது. கைகள் நடுங்க அந்த உறையைத் திறந்தேன். திருமண அழைப்புகள், வழக்கமான அழைப்பிதழ்களைப் போல அவைகள் இல்லை. அந்த அட்டைகளில் இரண்டிலிருந்து நான்கு அங்குல அளவு பெரிதாக சில வார்த்தைகள் இரண்டு வரிகளில் இருந்தன. என் பார்வை மங்கியதால் கண்ணாடியை எடுத்து புடவைத் தலைப்பால் துடைத்துவிட்டு மாட்டிக் கொண்டு படித்தேன். அதில், "எங்கள் திருமண நிகழ்ச்சியில் நீங்கள் வந்திருந்து எங்கள் மகிழ்ச்சியில் பங்கு கொள்ள விரும்புகிறோம்" என்று இருந்தது. காலம், இடம், தேதி முதலியவை ஆங்கிலத்தில் இருந்தது. கீழே அவனது பெயரும், அவளது பெயரும் இருந்தது. இருபத்தைந்து அட்டைகள் இருக்கலாம். அத்துடன் சில வார்த்தைகளில் கிறுக்கப்பட்டிருந்த சிறு குறிப்புகள் உள்ள துண்டுக் கடிதம் ஒன்று. "நீங்கள் இருவரும் வந்தால் நான் மகிழ்ச்சி அடைவேன். இதில் உள்ள அழைப்பு அட்டைகளை நீங்கள் விரும்புகிறவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்." அழைப்பில் எங்கள் பெயர்கள் காணப்படவில்லை. ஆனால் நாங்கள் இவைகளை அனுப்ப வேண்டுமாம்! "ஓ என் மகனே! நீ எவ்வளவு பெரிய



படிப்பகம்

www.padippakam.com

மனிதனாகிவிட்டாய்!" இதைக் கவலையோடும், ஆச்சரியத்தோடும் எண்ணிப் பார்த்தேன்.

சரி எங்களைச் சமாதானப்படுத்திக் கொண்டு அனுப்ப நினைத்தாலும் இந்த இருபத்தைந்து அட்டைகள் போதுமா? நாங்கள் அழைக்கிறோமோ இல்லையோ தெரிவிப்பதற்கே இருநூறு பேர்கள் இருக்கிறார்களே. இரு வீட்டார்களின் உறவினர்களே தலா இருபத்தைந்து பேர்களுக்கு மேல் இருக்கிறார்கள். எங்களையே "இஷ்டம் இருந்தால் வாருங்கள்" என்பவன் மற்றவர்களைப் பற்றி என்ன நினைப்பான்?

எப்படிப் பார்த்தாலும் விஷயம் எங்கள் கைமீறிப் போய்விட்டது. என் மன வலிமையை இழந்துவிட்டேன். இந்த நேரம் வரை என் மனதிற்குள் சற்று அவமானமாகக் கருதி இருந்தாலும், நான் அவன் பக்கமாகவே இருந்து அவன் சுதந்திரத்தை ஆதரித்தேன். அவன் இப்போது தன் கடைசி ஆயுதத்தைப் பிரயோகித்திருக்கிறான். நான் எப்படி என் கணவரைச் சம்மதிக்கும்படி செய்ய முடியும்? எனது ஒரே மகனின் திருமணத்தில் கலந்து கொள்ளாமல் தூர இருக்க என் மனம் மறுக்கிறது. இது ஒருவரது வாழ்வில் மீண்டும் மீண்டும் நடைபெறும் நிகழ்ச்சி அல்லவே. அந்த பையன்தான் அறிவில்லாமல் இப்படி நடந்து கொள்கிறான் என்றால் வயதில் முதிர்ந்த அனுபவசாலிகளான நாங்களும் அப்படி நடந்து கொள்வதில் என்ன நியாயம் இருக்கிறது? என் கணவர் சம்மதிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவருடன் இறுதியாக ஒரு முறை பேச வேண்டுமென்று முடிவு செய்துகொண்டேன்.

அவர் மருத்துவமனை சென்றிருக்கிறார். இன்னும் திரும்பி வரவில்லை.

## பட்டம்

***விடியும் பொழுதை***
***வேண்டாமென்றேனா? – நீ***
***விரும்பும் பொருளை***
***வேண்டுமென்றேனா?***
***வீசும் காற்றைத்***
***தடுத்தேனா?***
***விளையும் பயிரைக்***
***கெடுத்தேனா?***
***பெய்யும் மழையை***
***நில்லென்றேனா – நீ***
***பேணும் உயிரைக்***
***கொல்லென்றேனா?***
***எதற்காக எனக்குத்***
***தீண்டத்தகாதவன்***
***பட்டம்!***




❑ **காவியதாசன்** கல்லாங்காடு, திருப்பூர்.



படிப்பகம்

www.padippakam.com

அவர் தனது இரத்த அழுத்தத்தைப் பரிசோதனை செய்து கொள்ளச் சென்றுள்ளார். இயல்பாகவே சமீப காலமாக அவரது இரத்த அழுத்தம் அதிகமாகி இருக்கிறது. வழக்கமாக அவர் மருந்துகளை உட்கொண்டு வந்தபோதிலும் இரத்த அழுத்தம் கட்டுக்குள் இல்லை. இன்று காலையிலிருந்தே தலை கனத்திருப்பதாகச் சொல்லி படுக்கையில் படுத்திருந்தார். எனக்கும் மனம் சோர்ந்திருப்பதாக உணர்ந்தேன். அதனால் நானும் அலுவலகம் செல்லவில்லை. மேலும் டிசம்பருக்குள் பயன்படுத்திக் கொள்ளும்படியாக விடுமுறை நாள்கள் சில இருந்தன.



மருத்துவருக்குச் சொல்லி அனுப்பட்டுமா என்று நான் கேட்டபோது, தேவை இல்லை என்று அவர் சொல்லிவிட்டார். மாலை நான்கு மணிக்கு எழுந்து தானாகவே மருத்துவமனைக்குச் செல்ல கிளம்பிவிட்டார். நானும் வருவதாகச் சொன்னதற்கு வேண்டியதில்லை என்று சொல்லிவிட்டார். சில தினங்களாகவே நான் எதைச் சொன்னாலும் பொதுவாக அது அவருக்கு எரிச்சலூட்டுவதாகவே இருந்தது. அவரது இந்த மன நிலையைப் புரிந்து கொண்டிருந்தபடியால் நான் மேலும் வற்புறுத்தவில்லை.

பலவித சிந்தனைகளாலும் என் தலை வெடித்துவிடும் போலிருந்தது. யாருடனாவது பேசினால் என் மனர் லேசாகும்போல் உணர்ந்தேன். ஆனால் மற்றவர்களிடம் ஏன் என் குடும்ப விஷயங்களை வெளியிட வேண்டும்? நான் அவரை இணங்க வைக்க முடிந்து இந்த நெருக்கடி தணிந்து விட்டால் அதுவே போதுமானது. மற்றவைகளைச் சமாளித்து விடமுடியும். அவர் திரும்பி வந்து சோபாவில் சாய்ந்தார். அவரது முகத்தோற்றத்திலிருந்து இரத்த அழுத்தம் முன் போல் கடுமையாக இல்லை என்று தோன்றியது.

"உடம்பு எப்படி இருக்கிறது? கொஞ்சம் காஃபி குடிக்கிறீர்களா?" என்று கேட்டேன். அவர் என்ன மனோநிலையில் இருக்கிறார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் காபி கொண்டு வரச் சொன்னார்.

காபி பருகி சாவதானமாக அமர்ந்ததும் திருமண அழைப்பு பற்றிச் சொல்லலாம் என்று நினைத்தேன். அதற்குள் அவரே, "தபால்கள் எதுவும் உண்டா?" என்று கேட்டார். இனியும் நான் அதை மறைக்க முடியாது. கைகள் நடுங்க அழைப்பையும், கடிதத்தையும் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தேன். அதைப் படித்துவிட்டு துண்டு துண்டாகக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டார். என் மனம் பதறியது. என்ன இருந்தாலும் அது திருமண அழைப்பு. அதுவும் அது விரோதியினுடையது அல்ல. அது சொந்த மகனுடைய திருமண



படிப்பகம்

www.padippakam.com

அழைப்பு! அப்படியே அது ஒரு பகை வனுடையதாக இருந்தாலும். இப்படிக் கிழித்தெறியத் தோன்றுமா?

"ஏன் இப்படி ஒரு பழிவாங்கும் எண்ணம் உங்களுக்கு? எப்படியானாலும் அவன் நமது மகன் இல்லை என்று ஆகிவிடவில்லை" என்று ஆரம்பித்தேன்.

"போக வேண்டுமென்று உனக்குத் தினவெடுத்தால் நீ போய் அவனது மகிழ்ச்சியில் பங்கு கொள்லலாம். அதைப் பற்றி நான் கவலைப்பட வில்லை" என்றார்.

சில சமயங்களில் நாங்கள் இருவரும் சேர்ந்து போக முடியாத சந்தர்ப்பங்களில் யாராவது ஒருவர் சென்று வருவதில்லையா? இதுவும் கூட அது போலத்தானே. ஏன் இந்த வீண் தடபுடல்? என்று நினைத்தேன்.

"ரொம்ப சரி. அப்படியானால் நான் போய் வருகிறேன்".

"போ, போய்த் தொலை. நீ திரும்ப இங்கு வரவேண்டாம். உன் மகனுடனேயே தங்கி இரு" சோபாவிலிருந்து கோபத்துடன் எழுந்து கொண்டே சொன்னார்.

நான் அதிர்ந்து போனேன். கண்களில் நீர் நிரம்பியது. எவ்வளவு சுலப

## கெஜட்டுகள் கதை

அரசு வெளியிடும் செய்தி இதழை 'கெஜட்' என்கிறோம். இந்த கெஜட் என்ற பெயர் எப்படி வந்தது? கி.பி. 1566ல் இத்தாலியின் வெனிஸ் நகரத்தில் "வால்போஸ்டர்கள்" எனப்படும் சுவரொட்டிகள் செய்தி அறிக்கைகளாக வெளியிடப்பட்டன. 'கெஜட்டா' எனும் நாணயத்தைக் கட்டணமாகத் தந்து இந்தச் சுவரொட்டிகளைப் பொதுமக்கள் படித்தனர். இதனைத் தொடர்ந்து அந்த நாணயத்தின் பெயராலேயே சுவரொட்டிகள் 'கெஜட்டா' என அழைக்கப்படலாயின.



உலகின் மிகத் தொன்மையான முதல் பத்திரிகை "பீகிங் கெஜட்". இது கி.பி. 8 அல்லது 9ம் நூற்றாண்டில் வெளிவந்தது எனக் கூறப்படுகிறது. மரத்தினால் செய்யப் பட்ட அச்சுக் கருவிகளைக் கொண்டு இது வெளிவந்தது.

1816ம் ஆண்டில் கல்கத்தாவிலிருந்து 'பெங்கால் கெஜட்' என்ற ஆங்கில வார இதழ் வெளிவந்தது. பள்ளி ஆசிரியர்களான இரு இந்தியர்கள் இதனை நடத்தினர். 'ஸதி' ஒழிப்பு, விதவை மறுமணம், குழந்தை திருமண எதிர்ப்பு ஆகிய சமூக சீர்திருத்தப் பிரச்சாரம் செய்தது இவ்விதழ். கணவனை இழந்த பெண்ணை உடன் கட்டை ஏற்றும் கொடிய 'ஸதி' வழக்கத்திற்கு எதிராக பெங்கால் கெஜட்டில் கட்டுரைகள் எழுதினார் ராஜாராம் மோகன்ராய்.



படிப்பகம்

www.padippakam.com

மாக அவரால் இதைச் சொல்ல முடிகிறது! முப்பது ஆண்டுகால இணைப்பை மூன்று வினாடிகளில் அறுத்து விடுவதுபோல் அல்லவா இருக்கிறது. இந்த இறுதி எச்சரிக்கைக்குப் பதில் வராது என்று இந்த பயமுறுத்தல் வீசப்படுகிறது. நானும் அவருக்குச் சம்மாகப் படித்தவள்தான். வேலையில் சேர்ந்து கை நிறைய சம்பாதிக்கிறேன். அப்படி இருந்தும் குறைந்தபட்ச மரியாதை கூட எனக்கு அவர் காட்டவில்லை. நான் போய் என் மகனுடன் சேர்ந்து கொண்டால் அவன் என்னை மதித்து நடந்து கொள்வான் என்பதற்கு என்ன உத்தரவாதம்? அவனும் கூட ஒரு ஆண் மகன் அல்லவா? இந்த மனிதர் இல்லை என்றால் -- அதுதானா மாற்று வழி? இந்த இருவரது உதவியும் இல்லாமல் என்னால் வாழ முடியாதா? அப்படி நான் விரும்பினால் மனநிறைவோடு சிறப்பாக வாழ முடியும். நான் மட்டும்தான் சமூகக் கட்டுப்பாட்டுக்கு பயப்பட வேண்டுமா? அதைப் பற்றி அவர்களுக்கு – ஆண்களுக்கு – கவலை இல்லையா? உண்மைதான். அவர்கள் கவலைப்பட மாட்டார்கள். இதில் உள்ள ரகசியம் என்னவென்றால் இந்தச் சமூகம் எப்போதும் பெண்களைத்தான் குற்றம் சொல்லும், தூற்றும்!

ஆயினும் அவர் சொல்லியவைகளை நான் இழிவாகக் கருதியபோதிலும் நான் கோபம் அடையவில்லை. அவர் பேசியது ஆதரவற்ற பலவீனமான ஒருவரின் கூக்குரல் போலத்தான் என்று எனக்குத் தோன்றியது. எனது வினோதமான மகன் – ஐந்து வயது கூட நிறையாதவன் – அவன் கேட்ட எதையோ நான் கொடுக்கவில்லை என்பதற்காக என் மீது கோபம் கொண்டு, "நீ என் அம்மா இல்லை, வீட்டை விட்டுப் போ வெளியே" என்று சொன்னான். இதைப் பெரிதாக எடுத்துக் கொண்டு நான் வெளியே போய் விட்டேனா? 'முட்டாள் வாயை மூடு' என்று சொல்லி அவனுடைய முதுகில் அடித்து "இதை நீ எங்கே கற்றுக் கொண்டாய்?" என்று கண்டித்தேன்.

இப்போதும் கூட என் கணவர் சொல்லிய வார்த்தைகள் எவ்வளவு, "முட்டாள்தனமானது!" என்று எண்ணிக்கொண்டு நடந்தேன்.

எங்கு? வெளியில் தெருவிற்கா? அல்ல.

சமையல் அறைக்குத்தான்.

மனைவியாகவோ, வேலை செய்யும் அடிமையாகவோ அல்ல.

அவரது தேவையைப் புரிந்து கொண்ட ஒரு தாயைப் போல.

நான் இப்போது என் மகனுக்குத் தேவை இல்லை. வரப்போகிற மருமகள் – அவனது மனைவி – இனி அவனைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்வாள். என்னைத் தவிர இந்த மனிதரைக் கவனித்துக் கொள்ள வேறு யார் இருக்கிறார்கள்?

தேர்ந்தெடுக்கப்படும் படைப்புகளைச் சுருக்கவும், திருத்தி அமைக்கவும் ஆசிரியர் குழுவிற்கு உரிமை உண்டு. **வைகை பிரிண்டர்ஸ் & பப்ளிசர்ஸ்** (6/16, புறவழிச்சாலை மதுரை – 625018.) அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : என்.வரதராஜன், ஆசிரியர் கே.முத்தையா. செம்மலர் பதிவு எண்: M 8735/99. Registered with the Registrar of Newspaper for India under Registration No: 17852/70



படிப்பகம்

www.padippakam.com

## திண்ணைப்பேச்சு

# செவ்வாய்க் கிழமையும் அவ்வைக் கிழவியும்

ஒரு மனித உயிரோ அல்லது தாவரமோ அல்லது மிருகமோ உருவாக குறிப்பிட்ட, குறைந்தபட்ச கால அவகாசம் தேவை. ஆனால், தெய்வங்களை உருவாக்குவதற்கு மட்டும் ஒருசில நிமிடங்களே போதும். கொஞ்சம் பூ, கொஞ்சம் சந்தனம், கொஞ்சம் குங்குமம், இரண்டு ஊது பத்தி, கொஞ்சம் சாம்பிராணி இருந்தால் ஒரு சாமியை ரெடிசெய்து விடலாம். ஒரு மரமோ அல்லது கல்லோ கிடைத்து நம்புவதற்கு கொஞ்சம் ஆட்களும் இருந்துவிட்டால் சாமி அருள்பாலிக்கத் துவங்கிவிடும்.

கிராமப்புறங்களில் கொஞ்சம் பொறுமையாக கணக்குப் பார்த்தால் அனேகமாக மக்கள் தொகையை விட அதிக எண்ணிக்கையில் கடவுள்கள் இருக்கக்கூடு ட. ஊர் எல்லையில் அய்யனார் குதிரைகளோடு காவல்காப்பார். சில அய்யனாரின் சிஷ்யர்கள் என்று சொல்லப்படும் மின்னடியான்கள் துப்பாக்கி வைத்திருப்பதுண்டு. நவீன பாதுகாப்பு ஏற்பாடு போலும்! அப்புறம் ஊர் எல்லையில் இருக்கிற பெண் தெய்வங்களில் ஒன்று பிடாரி. ஊருக்குள் வந்தால் வழக்கமான தெய்வங்களான இரண்டு, மூன்று மாரியம்மன்கள், நான்கைந்து காளியம்மன்கள், நொண்டி முனி, செவிட்டு முனி என ஊனமுற்ற தெய்வங்கள், அக்கினி வீரன், அகோரன் என தெருவாரியாக சாமிகளும் இருப்பதுண்டு.

இந்த சாமிகளெல்லாம் மக்களின் வாழ்நிலைக்கேற்பவும், பொருளாதாரத்திற்கு ஏற்பவும் விழாக்காணக் கூடியவை. இதுதவிர, பிரபலமான பிள்ளையார், பெருமாள், முருகன், சிவன் போன்ற தெய்வங்கள் அகில இந்திய அந்தஸ்து பெற்றவை. இவர்களைப் பொறுத்தவரை ஒரு ஊரில் பூஜை புனஸ்காரம் இல்லையென்றாலும் அடுத்த ஊரில் கிடைப்பதை வைத்து அட்ஜெஸ்ட் பண்ணிக் கொள்வார்கள். ஆனால், குறிப்பிட்ட மக்களுக்கென்றே உள்ள குறிப்பிட்ட தெய்வங்கள் பாடுதான் திண்டாட்டம்!

அந்த ஊரில் பஞ்சம் என்றால் கடவுளுக்கும் பஞ்சப்பாடுதான். அருள் இறங்கி சாமி ஆடுபவர்கள் என்னை கவனிக்கவில்லையே என்று வெளிப்படையாக புலம்புவதும் உண்டு. பக்தர்கள் பாவம். சாமி, மழை தண்ணி பெய்யட்டும் என்று சாமிக்கே ஆறுதல் சொல்வார்கள்.


சாதிவாரியாகவும் சாமி உண்டு. உதாரணமாக, அய்யனார் கோவிலில் அவர் சைவமாக இருப்பார். அவரது கர்ப்பக்கிரகத்தில் புரோகிதர் தான் சமஸ்கிருதம் மந்திரத்தை ஓதி, பொங்கல் வைத்து உபசரிப்பார். இது மேல்சாதியினரின் தெய்வமாக கருதப்படும் அய்யனாருக்கு எதிரே அய்யனார் வேட்டைக்குப்போகும் போது முன்னோடியாக ஓடக்கூடிய மின்னடியான் என்று ஒரு சாமி

**மதுக்கூர் இராமலிங்கம்**



படிப்பகம்

www.padippakam.com



பட்டிமன்றத்திற்கு உரிய தலைப்பு. பெண்கள். செவ்வாய்க்கிழமை இரவுகளில் ஊரடங்கியவுடன் ரகசியமாக அவ்வையாரை நினைத்து சாமி கும்பிடுவது வழக்கம். கொழுக்கட்டையை பல சைஸ்களில் செய்து சாப்பிடுவார்களாம். அதில் உப்பு இருக்காதாம்.

இந்த பூஜையின் போது பெண்கள் அவ்வையார் கதை என்று ஒன்றை அலுக்காமல் சலிக்காமல் சொல்லிவருவார்களாம். ஒரே கதைதான். தொலைக்காட்சியின் மெகாத் தொடர்போல ஒரே கதையையே திரும்பத் திரும்ப சொல்வார்கள். தொடரும் என்று போடுவதில்லை. முழுக்கதையையும் முடித்துவிடுவார்கள்.

உண்டு. இவர் சுருட்டு, சாராயம், கறி என சாப்பிடுவார். இந்த சாமியின் பக்கம்கூட குருக்கள் வரமாட்டார். சாதிக்கொரு நீதி அல்ல; சாமிக்கும் ஒரு நீதி!

கிராமப்புறங்களில் மட்டுமல்ல, கிராமங்களிலிருந்து நகரங்களில் குடியேறிய மக்களிடம் செவ்வாய்க்கிழமை பிள்ளையார் கும்பிடுவது என்று ஒரு வழமை உண்டு. இது பிள்ளையாரா. அவ்வையாரா என்பது

செவ்வாய்க்கிழமை பிள்ளையார் கும்பிடும்போது பெண்கள் அப்படி ரகசியமாக என்னதான் செய்கிறார்கள் என்று கிராமங்களில் சில ஆண்களுக்கு குறுகுறுப்பு. எங்கள் ஊரில் ஒருவர் பெண்கள் ரகசியமாக செவ்வாய்க்கிழமை கொழுக்கட்டை செய்துக் கொண்டிருந்தபோது வேலிக்கு பின்னால் ஒளிந்திருந்து பார்த்திருக்



படிப்பகம்

www.padippakam.com

கிறார்.

சட்டியில் கொழுக்கட்டையை வேகவைத்தவுடன் கொதிக்க கொதிக்க வெந்நீரை வீசியிருக்கிறார்கள். ஒளிந்திருந்தவர் முகம் வெந்துவிட்டது. வேதனையில் அவர் கத்தவும் முடியாமல் ஓடிவந்திருக்கிறார். இவர் ஓடியவுடன் திருடன் நினைத்து பெண்கள் இவரை விரட்டியிருக்கின்றனர். இந்த ரகசியம் வெளியில் தெரியக்கூடாது. சாம்பார் சட்டியில் தடுமாறி விழுந்துவிட்டதாக அவர் சொல்லி சமாளித்திருக்கிறார். கொழுக்கட்டை எதுவும் கிடைக்கவில்லை. முகம் வெந்ததுதான் மிச்சம்.

எங்கள் ஊரில் புத்தர் சிலை ஒன்று உண்டு. ஒருகாலத்தில் புத்தமதம் இருந்ததின் அடையாளமாக இன்னமும் இருக்கிறது. மக்கள் அதை புத்தர் செட்டியார் என்பார்கள். வணிகமக்களின் கடவுளாக அவர் இருந்திருக்க வேண்டும். புத்தர் சிலைக்கு கீழே பெரும் புதையல் இருப்பதாக ஒரு வதந்தி உண்டு. இதை நம்பி சிலர் புத்தரை கீழே தள்ளி தோண்டிப் பார்த்திருக்கிறார்கள். புதையல் எதுவும் கிடைக்கவில்லை. புத்தர் சிலை கீழே விழுந்து மூக்கு உடைந்ததுதான் மிச்சம்.

கிராம மக்களை வறுமை நாளுக்கு நாள் விரட்டிக்கொண்டிருக்கிறது. அவர்கள் தங்கள் மனச்சுமைகளை கடவுள்களின் மீது இறக்கி வைக்கிறார்கள்.

கடவுளர்கள் தங்கள் மனச்சுமையை இறக்கிவைக்க மனிதர்களை தேடிக்கொண்டிருக்கிறார்கள்.



## தமிழரைப் பின்பற்றி...

ஆங்கிலச் சொற்களுக்கு இணையாகத் தமிழ்ச் சொற்களைக் கையாளும் தமிழர்களின் பாங்கினைக் கேரள அரசின் திரைப்பட வளர்ச்சிக் கழகத் தலைவர் பி.கோவிந்தபிள்ளை வியந்து பாராட்டியிருக்கிறார். திருவனந்தபுரத்தில், தமிழ் எழுத்தாளர் ஆ.மாதவனின் 'புனலும் மணலும்' நாவலின் மலையாள மொழிபெயர்ப்பான 'புழா' வெளியீட்டு விழாவில் பேசிய பி.கோவிந்தப்பிள்ளை தமிழ்நாட்டவரின் மொழிப்பற்றை எடுத்துக்காட்டுகள் சொல்லி விளக்கினார். மலையாள மக்களும் இந்த விஷயத்தில் தமிழர்களை பின்பற்ற வேண்டும் என்றும் தம் விருப்பத்தினை வெளியிட்டார். ஆங்கிலக் கலைச்சொற்களைத் தமிழில் மாற்றம் செய்யக்கூடாது என்று இங்கே ஒப்பாரி வைக்கும் சில மண்டை வீங்கிகளுக்கு இந்தச் செய்தியைச் சமர்ப்பிப்போம்!

– *ஆதாரம் : 'கேரளத்தமிழ்'*

*மாதஇதழ்.*



படிப்பகம்

www.padippakam.com

இருபதிலிருந்து
(20ஆம் நூற்றாண்டுத் தமிழ்க்கலை-இலக்கியம்)
8
1970-1979


அசோக்குமார்


பாரதிராஜா

# அரசியல் ஏணியான சினிமா


பாலுமகேந்திரா


இளையராஜா


கோமல் சுவாமிநாதன்

**நாடகம்**

1971ல் சகஸ்ரநாமம் நடத்திய 'சத்திய தரிசனம்' ஒரே சீனில் நடந்து முடியும் புதுமை உத்தியைச் செயல்படுத்தியது.

இதே ஆண்டு துவங்கப்பட்ட கோமல் சுவாமிநாதனின் ஸ்டேஜ் பிரண்ட்ஸ் மூலம், அவர்களின் முதல் நாடகமான சன்னிதி தெரு தொட்டு, நவாப் நாற்காலி, மந்திரி குமாரி, பட்டணம் பறிபோகிறது, வாழ்வின் வாசல், பெருமாளே சாட்சி, ஜீசஸ் வருவார், ராஜபரம்பரை, யுத்தகாண்டம், அஞ்சுபுலி ஒரு பெண், கோடில்லாக் கோலங்கள், ஆட்சி மாற்றம், சுல்தான் ஏகாதேசி முதலான பல நாடகங்கள் எழுபதுகளில் அரங்கேறின. இந்தக் காலகட்டத்தில் அவரது நாடகங்கள் நகர்ப்புறப் பின்னணியில் குடும்பச் சிக்கல் களைக் கருவாகக் கொண்டு விளங்கின. 1975 மார்ச் முதல் நாள் சென்னை மைலாப்பூர் 'பைன் ஆர்ட்ஸ் கிளப்'பில் அரங்கேறிய 'ராஜ பரம்பரை' நாடகத்தில் எஸ்.வி.சகஸ்ரநாமம் நடித்தார்.

இதே காலகட்டத்தில் அமெச்சூர் குழுக்கள், நாடகசபாக்கள் மூலம் கே.பாலச்சந்தர், சோ முதலானோ ரின் பல நாடகங்கள் அரங்கேறின.

1971 ஜூன் முதல் 1973 மே வரை, 'இந்திய நாடகக்கலை நாட்டுப்புற – நகர்ப்புற இணைப்பு தொடர்பாக ஜவஹர் நேரு ஆய்வுத் தகைமை உதவியுடன் ஆய்வு மேற்கொண்ட வங்க நாடகாசிரியர் பாதல் சர்க்கார் மூலம் 'மூன்றாம் அரங்கம்' எனும்

ஸ்ரீரசா



படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை நாடக உலகில் பரவியது. தமிழ் நவீன நாடகப் பரப்பிலும் அது வேர்விட்டது.

எழுபதுகளில் இறுதிப்பகுதியில் செயல்பட்டுவந்த ந.முத்துச்சாமியின் கூத்துப்பட்டறை (1977), வீதி நாடக இயக்கம் (1978), மு.ராமசுவாமியின் நிஜ நாடக இயக்கம் (1978), ஞானியின் பரீக்ஷா (1978) போன்ற நாடகக் குழுக்கள் இந்த வகையில் தம்மை அடையாளப்படுத்திக்கொள்ள முனைந்தன.

இவற்றுள் ஞானியின் 'பரீக்ஷா' சபா நாடகங்களுக்கு எதிர் நிலையில் மேடையின் அர்த்தங்களுக்கான புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வந்தமையால் வெகுஜன ரசனை நிறுவனங்களால் வசைபாடப்பட்டது.

அமெரிக்க மற்றும் பன்னாட்டுத் தனியார் நிறுவனங்கள் அமெரிக்க – வியட்நாமியப் போரின் பின்னடைவினால், எழுபதுகளில் மூன்றாம் உலக நாடுகளில் இன அடையாளம் கொண்ட ஒவ்வொரு தேசிய இனத்தின் நிகழ்த்துப் பண்பாட்டுக் கூறுகளிலும் ஆய்வுகள் மேற்கொள்வதற்கும், அவற்றை கற்பதற்கும், பதிவு செய்வதற்கும் அதிக அளவில் நிதியை ஒதுக்கத் துவங்கின. அதன் ஒரு பகுதியாகவே நாட்டுப்புறவியல் கல்வி, தமிழகக் கல்வி நிறுவனங்களில் நுழையத் தொடங்கியது. அமெரிக்காவிலிருந்து திரும்பிய மொழியியல் பேராசிரியர் வ.அய்.சுப்பிரமணியத்தின் மாணவர்களே அறுபதுகளின் இறுதிப்பகுதியில் தமிழ்ச்சூழலில் நாட்டுப்புறவியல் ஆய்வைக் கல்வித் துறையில் மேற்கொண்டவர்கள் என்பதும், அதைத் தொடர்ந்து அமெரிக்காவிலிருந்து திரும்பிய மொழியியல் பேராசிரியர் ச.அகத்தியலிங்கம், எழுபதுகளின் இறுதியிலும் எண்பதுகளின் தொடக்கத்திலும் நாட்டுப்புறவியல் சிந்தனை ஆய்வுகளை நிகழ்த்தி வந்ததும் குறிப்பிடத்தகுந்தது. இவற்றின் மூலம் மக்களின் மன அமைப்பு, பண்பாட்டுப் பின்னலைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பாடுகள் ஆகியவற்றைப் புரியும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் தொடர்ச்சியாகவே எழுபதுகளின் பிற்பகுதியில் எண்பதுகளில் நாடகமானது கல்வியாளர் அங்கீகாரம் பெற்றது. நாட்டுப்புறவியல் ஈடுபாட்டின் நீட்சியாகவே நவீன நாடக ஈடுபாடு தமிழகத்தில் உருப்பெற்றது.

1977ல் தேசிய நாடகப்பள்ளியில் பி.வி.சுரந்த் அவர்களின் வருகையைத் தொடர்ந்து ஜனநாயகப்படுத்தல் தொடங்கியது. தேசிய நாடகம் எது? என்கிற கேள்வி எழுப்பப்பட்டது. இந்திய தேசியத்தின் ஒவ்வொரு மொழிவாரித் தேசிய இனங்களின் பாரம்பரிய வடிவங்களில் பயிற்சி பெறுவது என்பது பிரதானமாக்கப்பட்டது. 'இந்திய நாடக அரங்கில் இந்தியத் தன்மையைத் தேடுதல்' என்ற முழக்கம் உருப்பெற்றது. அது தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தேசிய நாடகப் பள்ளியில் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு மொழிவாரி மாநிலங்களில் நாடகப் பட்டறைகள் நடத்தும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. தேசிய நாடகப் பள்ளியில் பயிற்சிபெற்ற காஷ்மீரத்து இளைஞர் பன்ஸிகௌல் இயக்குனராக இருந்து 1.11.1978 முதல் 10.1.1979 வரை தமிழ்நாட்டில் காந்தி கிராமத்தில் நடத்திய 70நாள் நாடகப்பட்டறை இந்த



"ரிக்ஷாக்காரன்"



படிப்பகம்

www.padippakam.com

வகையிலானதே.

இதே காலத்தில் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பில் 'செம்மலர்'க் கலைக்குழு தமிழகமெங்கும் செயல்பட்டு வந்தது. 1979 மே 25 – 27 ஆகிய மூன்று தினங்கள் தஞ்சை திலகர் திடலில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்திய நாடகக் கலைவிழாவில், தமுஎசவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த வெவ்வேறு பெயரிலான நாடகக்குழுக்கள் கலந்துகொண்டு நாடகங்களை நிகழ்த்தின. மறைந்த பாரதிக் கலைஞர் சகஸ்ரநாமம், கர்நாடகத்தில் 'சமுதாயா' நாடக இயக்கத்தின் அமைப்பாளராகவிருந்த பிரசன்னா ஆகியோர் இதில் கலந்துகொண்டு புதிய நாடக வடிவத்தைத் தேடவேண்டிய அவசியத்தை வற்புறுத்திப் பேசினர்.

## கவிதை

புதுக்கவிதை வளர்ச்சிக்கு அளப்பரிய பங்காற்றி வந்த எழுத்து 1970 ஜனவரி – மார்ச் இதழாக வெளிவந்த தனது 119வது ஏட்டுடன் நின்றுபோனது.

மார்க்சியத் தத்துவத்தின் உந்துதலோடு கவிதை எழுத முற்பட்டவர்கள் 'தாமரையிலும்' 70களில் தொடங்கிய பல சிற்றேடுகளிலும் தம் கவிதைப் பணியைத் தொடர்ந்தனர். தம்மை 'இரண்டாவது அணி' என இவர்கள் அழைத்துக் கொண்டனர்.

எழுத்துவுக்குப் பிறகு புதுக்கவிதைக்கு ஆதரவு காட்டுவதில் 'கணையாழி' முன்னின்றது. 1970ல் தோன்றிய 'கசடதபற'வும் புதுக்கவிதை வளர்ச்சிக்கும் சோதனைக்கும் ஆதரவு தந்தது.

முற்போக்கு இலக்கியப் பணிக்கென்றே தோன்றிய செம்மலர் தாமரை, கார்க்கி, செம்மலர், வானம்பாடி, உதயம் முதலிய பத்திரிகைகளில் கவிதை எழுதியவர்களில் சிலர் இதர இலக்கிய வெளியீடுகளிலும் எழுதியிருக்கின்றனர்.

கணையாழி, கசடதபற, தீபம், ஞானரதம், அஃபோன்ற இலக்கிய வெளியீடுகளில் கவிதை எழுதியிருப்பவர்களில் சிலர் பிற வெளியீடுகளிலும் எழுதியிருக்கிறார்கள். வண்ணங்கள், சதங்கை போன்ற இலக்கியப் பத்திரிகைகள் இரண்டு பிரிவுக் கவிஞர்களின் கவிதைகளையும் பிரசுரித்தன.

கசடதபற மூலம் ஞானக்கூத்தன், பாலகுமாரன், நீலமணி, ஐராவதம், ந.மகாகணபதி, க.நா.சுப்ரமணியம், நகுலன், தருமு அருட்சிவராம், சச்சிதானந்தம், வெ.மாலி, கோ.ராஜாராம், கங்கை கொண்டான், ஆத்மாநாம் போன்றோரின் கவிதைகள் வெளிவந்தன. கசடதபற வெளியிட்ட 'ஒரு ரூபாய் நோட்டை இரண்டாக மடித்த அளவிலான 'புள்ளி' என்கிற 'மினி வெளியீடு' புதிய சின்னஞ்சிறு வெளியீடுகளின் வருகைக்கு அச்சாரமிட்டது.

அதுபோலவே எல்.வைத்தீஸ்வரன், தி.சொ.வேணுகோபாலன், தருமு அருட்சிவராம் போன்றோர் அந்த இதழ்கள் மூலம் கவிதை தந்தனர்.

'கணையாழி' மூலம், முஸ்தபா போன்றவர்களும், 'ஞானரதம்' மூலம் அக்கினிபுத்திரன், 'தீபம்' மூலம் மேத்தா போன்றவர்களும், சுந்தரராமசாமி 'பசுவய்யா' என்ற பெயரிலும் இக்காலத்தில் கவிதையுலகில் அரங்கிற்கு வந்தனர்.

இந்தக் காலத்தில் மரபுக் கட்டுடைந்த புதுக்கவிதையின் தோற்றம், பலரை எழுதவைத்ததெனினும், சிரமமும், சிரத்தையும், பயிற்சியும், பாடுபடலும் இல்லாமலே 'எழுத்தாளர்' என்ற கீர்த்தியை அடைந்துவிட விரும்பியவர்களுக்கும் 'புதுக்கவிதை' எழுதுவது லட்சியச் சித்திக்கு வகை செய்யும் சுலப மார்க்கமாகத்



படிப்பகம்

www.padippakam.com

தோன்றியது. ஆகவே செக்ஸ் விஷயங்களையும், ஜோக்குகளையும், விடுகதைகளையும், வார்த்தை அலங்காரங்களையும், தமிழ்ச் சொற்களோடு, பிற மொழிச்சொற்களைத் தாராளமாகக் கலந்து எழுதுவதையும் கவிதை என்று தரப் பலர் தயங்கவில்லை. கவிதைகளில் ஆங்கிலச் சொற்களை அதிகம் விரவி வைப்பதும், கவிதைகளுக்கு ஆங்கிலத் தலைப்புகள் கொடுப்பதும் சகஜமாயிற்று.

இந்தக் காலகட்டத்தில் 'நிகழ்காலத்தின் சத்தியங்களையும், வருங்காலத்தின் மகேன்னதங்களையும் தரிசிப்பதற்காக உண்மையும் உணர்ச்சியுமே இரு சிறகாய்க் கொண்டு கவிதை வானத்தில் சஞ்சரிக்க 1971ல் கோவையிலிருந்து 'வானம்பாடி' தோன்றியது'.

வானம்பாடிக் கவிஞர்கள் என்றொரு இலக்கியவரிசை தமிழ் கூறு கவிதை உலகுக்குக் கிடைத்தனர்.

'வானம்பாடி திடீரெனத் தோன்றியதல்ல. கோவையில் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக இயங்கிவந்த இலக்கிய அமைப்புகளிலிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்தின் குறியீடாக வானம்பாடி சிறகடிக்கத் தொடங்கியது' என்கிறார் கோவை ஞானி.

*'எங்கள் பொன்னிற அலகுகள் உள்ளே*
*செக்கச்சிவந்த அக்னி நாக்குகள்*
*உள்ளன.*
*ஒவ்வொன்றுமோர் சூரியப் பிரளயம்!*
*எங்கள் குரலிலோ*
*வெல்லும் மானுடத்தின் பிரகடனம்*
*முழங்கிவரும்!'*

என்கிற சேலம் தமிழ்நாடனின் வரிகள் வானம்பாடிகளின் பொது இயக்குரல் எனலாம்.

'வானம்பாடி கட்சி சார்பற்ற ஒரு கவிதை இயக்கம். சமுதாயப் பார்வையை முன்வைத்துக் கவிதை படைப்பவர்களின் இயக்கம் இது. முற்போக்குச் சிந்தனையுடைய அனைவரையும் ஏற்றுக் கொள்ளும் இயக்கம் இது' என்று வானம்பாடிக் கவிஞர்கள் அறிவித்தனர்.

புவியரசு, கங்கை கொண்டான், சிற்பி, தமிழ்நாடன், அக்கினிபுத்திரன், சக்திக்கனல், மு.மேத்தா, ரவீந்திரன், தமிழன்பன், ஞானி, மீரா, பா.செயப்பிரகாசம், பிரபஞ்சன், பாலா, கோ. ராஜாராம் என்று பெரிதாக நீளும் பட்டியலைக் கொண்டது வானம்பாடி இயக்கம்.

1970களில் நிறையக் கவிஞர்களின்


"முள்ளும் மலரும்"

கவிதைகள் புத்தக வடிவம் பெற்றன. 1970ல் எஸ்.வைத்தீஸ்வரனின் 'உதயநிழல்கள்' '1971ல் நா.காமராசனின் 'கறுப்பு மலர்கள்', 1972ல் ஷண்முக சுப்பையாவின் 'கண்ணன்' என் தம்பி. இன்குலாபின் 'இன்குலாப் கவிதைகள்', தமிழவன் போன்றோரின் கவிதைகளை உள்ளடக்கிய 'ஆக்டோபஸும் நீர்ப்பூவும்'. 1973ல் தருமு சிவராமின் 'கண்ணாடியுள்ளிருந்து', வானம்பாடிக் கவிஞர்களின் 'வெளிச்சங்கள்', ஞானக்கூத்தனின் 'அன்று வேறு கிழமை' சேலம் தமிழ்நாடனின் 'மண்ணின் மாண்பு, காமரூபம்', கலாப்பிரியாவின் 'தீர்த்த யாத்திரை', தமிழன்பனின் 'தோணி வருகிறது', 1974ல் ' மு.மேத்தாவின் கண்ணீர்ப்பூக்கள்' மீராவின் 'கனவுகள்



படிப்பகம்

www.padippakam.com



கவிஞர் சிற்பி

+கற்பனைகள்' = காகிதங்கள்', ஊசிகள். துரை சினிச்சாமியின் 'அந்தி', கே.ராஜகோபாலின் 'பசப்பல்', வல்லிக்கண்ணனின் 'அமர வேதனை', சி.சு. செல்லப்பாவின் 'மாற்று இதயம்', அபியின் 'மௌனத்தின் நாவுகள்', அப்துல் ரகுமானின் 'பால்விதி', ப.கங்கை கொண்டானின் 'கூட்டுப்புழுக்கள்', பரிணாமனின் 'ஆகஸ்டும் அக்டோபரும்', சக்திக்கனலின் 'கனகாம்பரமும், டிசம்பர் பூக்களும்', சி.மணியின் 'வரும் போகும்' போன்றவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

1973 முதல் 1979 வரையிலான காலப் பகுதியில் கிட்டத்தட்ட எழுபதுக்கும் மேற்பட்ட கவிதைத் தொகுதிகள் பிரசுரமாகியுள்ளன.

இந்தக் காலகட்டத்தின் முக்கிய நிகழ்வான 'நெருக்கடி நிலை'க்கு ஆதரவாய் பல கவிதைக்காரர்கள் மாறிப்போனதும், ஆத்மாராம் மெல்லிய குரலில் அதை எதிர்த்ததுவும், முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தணிகைச்செல்வன் அதற்கெதிராக உரத்து முழக்கமிட்டது கவிதை வரலாற்றில் முக்கியமாகக் குறிக்கத் தகுந்தவை.

## சிறுகதை

1070ன் ஆரம்பத்தில் சினிமாவும், நாடகமும் சாதாரண மக்களின் ரசனை உணர்வுகளுக்குத் தீனி போட்டுக் கொண்டிருந்த சமயத்தில் சஞ்சிகைகளும் அந்தப் பொழுதுபோக்குப் பணிக்கு, ரசமான கதைகளையும், அவற்றுக்கேற்ற சித்திரங்களையும் பெருவாரியாக வழங்கின. சிறுகதையின் இலக்கிய நோக்கு மறைந்து பொழுதுபோக்கு நோக்கை முதன்மை பெற்றது. இந்தச் சூழ்நிலையில் வெறுப்பு, ஆத்திரம், வேகம், முதலிய பண்புகளைக் கொண்ட ஒரு புதிய தலைமுறை எழுத்தாளர்கள் தோன்றினர்.

வியாபார ரீதியில் நடத்தப்படும் ஆனந்த விகடன், கல்கி, குமுதம், தினமணிகதிர் முதலிய இதழ்கள் இவர்களின் கருத்துக்கும், தேவைக்கும் அப்பால் நின்றதால், தாமே தமக்கெனச் சில சிற்றேடுகளைப் பதிப்பிக்க முன்வந்தனர்.

1970ல் மே மாதத்தில் கு.சின்னப்ப பாரதியை ஆசிரியராகக் கொண்டு மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சியின் இலக்கிய இதழான செம்மலர் பிறந்தது. 1972 முதல் கே.முத்தையாவின் ஆசிரியப் பொறுப்பில் தொடர்கிறது. செம்மலரின் தோற்றம் தமிழகக் கலை இலக்கிய உலகில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்கிற மாபெரும் முற்போக்குக் கலை இலக்கிய அமைப்பு பிறப்பெடுக்கக் காரணமாக இருந்தது. இடதுசாரி எழுத்தாளர்களின் இந்த அமைப்பு நெருக்கடிநிலை காலத்தில் அதனை எதிர்த்துப் பிறந்த துணிகர முயற்சியாக இருந்தது.

ஏற்கெனவே முற்போக்கு இலக்கிய உலகில் தடம்பதித்த கு.சின்னப்ப பாரதி, செல்வராஜ் மற்றும் சு.சமுத்திரம், போன்றவர்கள் செம்மலர் மூலமும் தம் சிறுகதைப் பணியைத்தொடர்ந்தனர். மேலாண்மை பொன்னுச்சாமி, வேல.ராமமூர்த்தி போன்றவர்கள் செம்மலர் மூலம் இந்தக் காலகட்டத்தில் சிறுகதை உலகில் அடியெடுத்துவைத்தனர்.

அதுபோலவே 1972ல் வெளிவந்த 'பிரச்சனை', 1975ல் வெளிவந்த விடியல், ச.செந்தில்நாதனின் 'சிகரம்', குமரி மாவட்டக் கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பாக வெளியிடப்பட்ட 'புதிய வானம்', 1976ல் வெளிவந்த 'இலக்கிய வெளிவட்டம்', இளவேனிலின் 'கார்க்கி',



படிப்பகம்

www.padippakam.com


"தாகம்"

'மகாநதி', ஜீவா, ஜன்னல் பார்வை, பாட்டாளி தோழன், நாம், துளிகள், புதிய நம்பிக்கை, முனைவன், கற்சிலை, மன ஓசை என்று பல சிற்றிதழ்கள் முற்போக்குச் சிறுகதைகளை வெளியிட்டு வளர்த்ததில் முன்னணியில் இருந்தன.

செந்தில்நாதனின் 'சிகரத்தின் மூலம்', பறம்பைச் செல்வன், என்.ஆர்.தாசன், சி.ஆர்.ரவீந்திரன், ப.செயப்பிரகாசம், மேலாண்மை பொன்னுச்சாமி, கொ.மா.கோதண்டம், முத்துராமலிங்கம், ப.வேலுச்சாமி முதலான பலர் சிறுகதை இலக்கியத்திற்கு வளம் சேர்ந்தனர். அதுபோலவே சிகரம் மூலம் சிறுகதை உலகுக்கு எழுபதுகளில் வந்த மற்றுமொரு குறிப்பிடத்தக்க படைப்பாளி ச.தமிழ்ச்செல்வன்.

இன்னொருபுறம், முற்போக்கு இலக்கியவாதிகளின் இலக்கிய, படைப்புக் கொள்கைகளுக்கு நேர் எதிராகவும் அதே நேரம், வெகுஜன இதழ்களின் போக்குகள் பிடிக்காமலும் பல இதழ்கள் எழுபதுகளில் தோற்றம் கண்டன. நடை, கசடதபற, கொல்லிப்பாவை, யாத்ரா, பிரக்ஞை, சுவடு, அஃ, வாசகன் போன்றவை அவையாகும். இவற்றில் எழுதியவர்கள் ஃபிராய்டின் உளவியல் ஆய்வு முறைகளையும், இருந்தியலியல் தத்துவ அடிப்படையின் விளக்கங்களையும், பல்வேறு அரசியல் பிரிவுகளின் கொள்கைகளையும், சிறுகதைப் பொருளாகக் கொண்டனர்.

இந்தக் காலகட்டத்தில் வெளிவந்த பல்வேறு சிற்றேடு எழுத்தாளர்களின் சிறுகதைகளும், பல புத்தக வடிவங்கள் பெற்றன. கசடதபற நடத்திய 'இலக்கியச் சங்கம்' வெளியிட்ட 'கோணல்கள்' என்கிற தொகுதி அந்த வகையில் குறிப்பிடத்தக்கது. ம.ராஜாராம், சா.கந்தசாமி, நா.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ராமகிருஷ்ணன் ஆகிய நால்வரின் கதைகள் அதிலிருந்தன.

நா.முத்துச்சாமி, அசோகமித்திரன், நீலபத்மநாபன், நாஞ்சில் நாடன், கி.ராஜநாரரயணன், வே.கிருஷ்ணமூர்த்தி, பொன்னீலன், வண்ணநிலவன், நவபாரதி, ஆதவன், சுப்ரமணியராஜு, ஐயபாரதி, பாலகுமாரன், வண்ணதாசன், மாலன், இந்துமதி, எம்.சுப்ரமணியன், சிந்துஜா, கவந்தன், கலாஸ்ரீ போன்ற பலரும் இந்தக் காலகட்டத்தில் சிறுகதை இலக்கிய வளர்ச்சிக்குப் பங்காற்றினர்.

1970களில் புதிய தலைமுறை எழுத்தாளர்களில், ஆங்கிலப் படிப்பிலும், பட்டண வாழ்விலும் ஈடுபட்ட இளம் பெண் எழுத்தாளர்கள் பலர் மரபுமீறிய கருப்பொருட்களில் மரபு மீறிய படைப்பு முயற்சியிலும் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கதாகும். இந்துமதி, சிவசங்கரி, வாஸந்தி, லஷ்மி சுப்பிரமணியம், அம்பை, லக்ஷ்மி, கண்ணன் போன்றவர்கள் அந்த வகையில் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் சிவசங்கரியும், வாசந்தியும் சில சிறுகதைகளையே படைத்துப் பின்னர் நாவல் துறையில் தம் கவனத்தைச் செலுத்தினர் வெகுஜன இதழ்களின் பசிக்குத் தீனிபோட்டனர். இவர்களில் 'அம்பை' குறிப்பிடத்தக்கவராக, செறிந்த கதைகளைத் தருபவராகத் திகழ்ந்தார். இந்தக் காலகட்டத்தில் ஆனந்தவிகடன், 'முத்திரைக் கதைகளை'



படிப்பகம்

www.padippakam.com

வெளியிடத் துவங்கியது. அதன்மூலம் சிறுகதைத் துறையின் கவனத்தைப் பெற்றவர்கள் எஸ்.வெங்கட்ராமன் மற்றும் நரசய்யா. அதுபோலவே ஜெயந்தன், ராஜரங்கன், பா.செயப்பிரகாசம், திருப்பூர் கிருஷ்ணன், சுப்ரபாலன், கிருஷ்ணன் நம்பி, சார்வாகன், ஜி.நாகராஜன், ராஜேந்திர சோழன், சுஜாதா என்று பலரும் எழுபதுகளில் சிறுகதை இலக்கியத்திற்கு வளம் சேர்த்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இந்தக்கால கட்டத்தில் 1970ல் தோன்றிய 'இலக்கியச் சிந்தனை' அமைப்பு சிறுகதை வளர்ச்சிக்குத் தமது பங்கை ஆற்றிவரும் சிறப்பான அமைப்பு. இலக்கியச் சிந்தனையின் முயற்சியில் பல புதிய தலைமுறை எழுத்தாளர்கள் இனங்காணப்பட்டனர்.

வண்ணதாசன், வண்ணநிலவன், ஐராவதம், ஆதவன், ராஜநாராயணன், கொ.மா.கோதண்டம், பிரபஞ்சன், வீரவேலுச் சாமி, நாஞ்சில் நாடன் — இன்னும் எத்தனையோ முன்னணி எழுத்தாளர்களின் பெயர் இலக்கியச் சிந்தனையின் பட்டியலில் இடம்பெற்றிருக்கின்றன.

இலக்கியச் சிந்தனையின் 1978ம் ஆண்டுப் பரிசைப் பெற்ற மும்தாஜ் யாசின் அந்த ஆண்டில்தான் சிறுகதை எழுதத் தொடங்கியவர் என்பதுவும், அவர் எழுதிய 'பசி' (செம்மலர் 1978) என்ற கதையைத் தி.ஜானகிராமன் பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுத்ததுவும், சிறுகதைத் துறையில் இளைய தலைமுறையின் வளர்ச்சியைப் படம்பிடித்துக் காட்டியது.

இலக்கியச் சிந்தனைப் பரிசுத்திட்டம் தொடங்கப்பட்டதன் மற்றுமொரு விளைவு, பெருமளவில் விற்பனையாகும் பத்திரிகைகள் அதிகமாகக் கதைகள் வெளியிடவும், அந்தப் பிரசுரங்களுக்குத் தாராளமாகச் சன்மானம் வழங்கவும் முன்வந்தன.


"பசி"

## நாவல்

எழுபதுகளில் ஜெகசிற்பியன், ராஜம் கிருஷ்ணன், த.ஜெயகாந்தன், இந்திரா பார்த்தசாரதி, லா.சா.ராமாமிர்தம், நா.பார்த்தசாரதி, நீலபத்மநாபன், கு.ப. சேது அம்மாள், நகுலன், கிருத்திகா, ரா.சு. நல்லபெருமாள், அசோகமித்திரன், ஸரோஜா ராமமூர்த்தி, விக்கிரமன் (வேம்பு), ஆ.மாதவன், தி.ஜானகிராமன், ஆர்வி., கு.சின்னப்பபாரதி, ஐசக் அருமைராஜன், கமலா சடகோபன், கி.ராஜநாராயணன், பொன்னீலன், து.ராமமூர்த்தி, அநுத்தமா, எஸ்.வையாபுரிப் பிள்ளை, லக்ஷ்மி, சி.என். அண்ணாதுரை, வி.எஸ். மணி, கோ.வி. மணிசேகரன் என்று பலர் நாவல் இலக்கியத் தளத்தில் செயல்பட்டனர்.

இந்திரா பார்த்தசாரதியின் தந்திர பூமி போலவே 1970ல் வெளிவந்த 'சுதந்திர பூமி'யும், வணிகத்தன்மை வாய்ந்த இன்றைய கானல்நீர்த்தன்மையைப் பரிகசிக்கிறது.

இதே ஆண்டில் வந்த 'வேரும் விழுதும்' என்ற க.சுப்பிரமணியத்தின் நாவல் ஒரு தனிப்பட்ட செல்வாக்கு மிகுந்த அரசியல்வாதியின் அணைக்கட்டுத் திட்டத்தினால் ஒரு கிராமவாழ்க்கை முற்றிலும் மாறுபட்டுச் சிலர் இடம் பெயரும் நிலை வந்ததைச் சொல்கிறது. 60களின் இறுதியில் ஆனந்தவிகடனின் தொடராக வந்து 1970ல் புத்தக வடிவம் பெற்ற



படிப்பகம்

www.padippakam.com

கொத்தமங்கலம் சுப்புவின் தில்லானா மோகனாம்பாள், இசைக்கலையையும், நாட்டியக் கலையையும் பரம்பரைத் தொழிலாகக் கொண்ட கலைஞர்களின் சிறப்பைச் சித்தரித்தது.

ல.சா.ரா.வின் சொற்போல உத்தியுடன் இந்த ஆண்டு 'அபிதா' வெளிவந்தது. விவிலிய நூலில் கண்ட சம்பவங்களின் பின்னணியில் டேவிட் சித்தையாவின் 'வெறுசிலைகள்' இதே ஆண்டு வெளிவந்தது.

1971ல் வெளிவந்த நீலபத்மநாபனின் 'பள்ளிகொண்டபுரம்' ஒரு நகரத்தின் பல்வேறு தோற்றங்களையும் காலத்தையொட்டிய நிகழ்ச்சியையும் சித்தரிக்கிறது.

பெண்ணின் சக்தி அம்சத்தை விளக்கும் ஒரு லட்சிய உலகத்தை 1972ல் வந்த கிருத்திகாவின் 'புதிய கோணங்கி' படைத்தது.

1973ல் வெளிவந்த நா.பார்த்தசாரதியின் 'சத்தியவெள்ளம்' மாணவ சமுதாயத்தின் அபிலாசைகளையும், அவைகளை அடைவதில் அவர்கள் சந்திக்க வேண்டிய எதிர்ப்புக்களையும் பற்றிக் கூறுகிறார். இதே ஆண்டில் வந்த ராஜம் கிருஷ்ணனின் 'வேருக்கு நீர்', சுதந்திர இந்தியாவின் அமைப்பில் பல்வேறு கட்சிகள் தோன்றிப் பொதுமக்களுக்குக் குழப்பத்தை ஏற்படுத்தும் நிலையைப் பேசுகிறது. உள்ளவனுக்கும் இல்லாதவனுக்கும் இடையே நடைபெறும்போராட்டங்களை இதே ஆண்டில் வெளிவந்த ரா.சு. நல்லபெருமாளின் 'போராட்டங்கள்' நாவல் சித்தரிக்கிறது. திருமணத்திற்குக் கேட்கப்படும் வரதட்சணையை எதிர்த்து, அதைவிடப் பன்மடங்கு தொகையைத் தன் உடலை விற்றுச் சம்பாதிக்க முடியும் என்று கூறி நிரூபித்துக் காட்டும் பெண்ணை இதே ஆண்டில் வெளிவந்த அகிலனின் 'எங்கே, போகிறோம்?' காட்டியது. சந்தர்ப்பவசத்தால் கற்பிழந்து, தனிப்பட்டு வாழ்ந்து, பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப்பின், தன்னைக் கெடுத்தவனையே கண்டுபிடித்து, அவன் மீது உண்மையில் காதல்கொண்டு அவனுடன் வாழ முயலும் வித்தியாசமான பெண்ணை, இதே ஆண்டில் வந்த ஜெயகாந்தனின் 'சில நேரங்களில் சில மனிதர்கள்' சித்தரித்தது. இதே ஆண்டில் வந்த டி.செல்வராஜின் 'தேநீர்' தேயிலைத் தோட்டங்களில் உழைக்கும் தொழிலாளர் போராட்டத்தைச் சித்தரித்தது. சென்னை நகரில் ஏற்பட்ட கடுமையான தண்ணீர்ப்பஞ்சம் ஏற்பட்டபோது மக்கள்பட்ட அவஸ்தையை இதே ஆண்டில் வந்த அசோகமித்திரனின் 'தண்ணீர்' அற்புதமாகச் சித்தரித்தது.

1974ல் வெளிவந்த ஆ.மாதவனின் 'புனலும் மணலும்' திருவனந்தபுரம் வட்டாரத்தில் ஆற்றிலிருந்து மணலை வாரி லாரிகளில் நிரப்பிக் கூலி வேலை செய்து பிழைக்கும் ஒரு கூட்டத்தின் வாழ்வைக் கூறுகிறது.

இந்திய விடுதலைக்குப் பிறகு நடந்த தமிழ்நாட்டின் சமகால அரசியல் மாறுதல்களை இதே ஆண்டில் வந்த ராஜம் கிருஷ்ணனில் 'ரோஜா இதழ்கள்' அற்புதமாகச் சித்தரித்தது.

தஞ்சையில் நிலப்புரபுக்களால் 44 விவசாயக் கூலிகள் கொடூரமாகக் கொளுத்தப்பட்ட கீழவெண்மணி நிகழ்ச்சியை 1975ல் வெளிவந்த இந்திரா பார்த்தசாரதியின் 'குருதிப்புனல்' பிராய்டிய அணுகுமுறையில் விளக்கமுயன்றது.

இதே ஆண்டில் வெளிவந்த தி.ஜானகிராமனின் 'மரப்பசு' எல்லோரையும் தொட்டுப்பேச வேண்டும் என்கிற அடக்க முடியாத விருப்பமுள்ள பெண்ணின் உளவியலைச் சித்தரித்தது.

'தலைமுறைகள்' நாவல் போலவே இன்னொரு அமைப்பின் வாழ்க்கை முறையை நீலபத்மநாபனின் 'உறவுகள்'



படிப்பகம்

www.padippakam.com

இதே ஆண்டில் வெளிவந்து கூறியது.

இட்லிப் பாட்டியால் வளர்க்கப்படும் அனாதைப்பையன் ஒருவனின் வாழ்க்கையை ஆர்.வி.யின் 'மனிதநிழல்கள்'(1975) சித்தரித்தது.

வறுமையின் பிடியில் சிக்கிய ஒருவனுக்கு வசதிபடைத்தவர்களைக் காணும்போது ஏற்படும் உணர்ச்சிப் போராட்டம் ஐசக் அருமைராஜனின் 'கீறல்கள்'(1975) மூலம் அற்புதமாக வெளிப்பட்டது. அதுபோலவே ஓர் ஏழை அரிஜன விவசாயக் குடும்பத்தின் மிகவும் கடினமான வாழ்க்கைப் போராட்டங்களை இதே ஆண்டில் வெளிவந்த கு.சின்னப்பபாரதியின் 'தாகம்' அழுத்தமாகவும், அற்புதமாகவும் சித்தரித்தது.

இதே ஆண்டில் வெளிவந்த கிருத்திகாவின் 'நேற்றிருந்தோம்' மேல்நாடு சென்று திரும்பிய ஒருவனுக்கு இங்கிருப்பவர்களுடன் ஏற்படும் தலைமுறை இடைவெளியைக் காண்பித்தது.

ராஜம் கிருஷ்ணனின் 'முள்ளும் மலர்ந்தது'(1975) மத்தியப்பிரதேசத்துச் சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளையன் ஒருவனைக் கதாநாயகனாகக் கொண்டு வெளிவந்தது.

நா.பார்த்த சாரதியின் 'நீல நயனங்கள்' லட்சியப்படமெடுக்க நினைக்கும் இயக்குனர் ஒருவருக்கு லட்சித்துடன் பொருந்தும் லட்சிய கதாநாயகி கிடைப்பதைச் சித்தரித்தது.

1976ல் வெளிவந்த கோ.வி.மணிசேகரனின் 'ஒரு தீபம் ஐந்து திரிகள்' ஒரு லட்சியக் குடும்பத்தைச் சித்தரித்தது.

இதே ஆண்டில் வந்த பொன்னீலனின் 'கரிசல்' திருநெல்வேலிச் சீமைக் கரிசல்காட்டு ஏழை விவசாயிகளின் புரட்சிகர முயற்சியைப் படம்பிடித்தது.

பிரிட்டீஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் இறுதிநாட்களில் தமிழ்நாட்டில் வந்து குடியேறிய சில தெலுங்குக் குடும்பங்களைப் பற்றி அற்புதமாக இதே ஆண்டில் வெளிவந்த கி.ராஜநாராயணனின் 'கோபல்ல கிராமம்' சித்தரித்தது.



கே.பாக்யராஜ்

இதே காலகட்டத்தில் ஜெயகாந்தனின் 'ஜயஜய சங்கர', நீலபத்மநாபனின் 'மின் உலகம்', அநுத்தமாவின் 'ஒரே ஒரு வார்த்தை' முதலான பல நாவல்கள். எஸ்.வையாபுரிப்பிள்ளை எழுதிய 'ராஜி, லக்ஷ்மி எழுதிய பல குடும்ப நாவல்கள், வி.எஸ்.மணியின் 'புது உலகம்' போன்ற பல நாவல்கள் வெளிவந்தன.

சி.என்.அண்ணாதுரையின் ரங்கோன்ராதா, கபோதிபுரக் காதல், பார்வதி பி.ஏ., கலிங்கராணி முதலான படைப்புகளும் இக்காலத்தில் புத்தக ரூபம் கொண்டன.

1975ல் நெருக்கடி நிலை இதே காலகட்டத்தில்தான் பிரகடனம் செய்யப்பட்டது. அதைக் குறித்து ஏதும் நாவல் இக்காலகட்டத்தில் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

## சினிமா

ஜானகிராமனைத் தயாரிப்பாளராகக் கொண்டு, பாபுநந்தன் சோமு இயக்கத்திலும், எம்.பி.சீனிவாசனின் இசையிலும் 1974ல் வெளிவந்த 'தாகம்' மற்றும் ராஜாஜியின் சிறுகதையை அடிப்படை



படிப்பகம்

www.padippakam.com

செம்மலர்
ஆண்டுச்சந்தா ரூ.55-
6 மாதச் சந்தா ரூ.30-

யாகக் கொண்டு வந்த திக்கற்ற பார்வதியும் இந்தக் காலகட்டத்தில் குறிப்பிடத்தக்க திரைமுயற்சியாக 'யதார்த்தவாதப்' படங்களாக இருந்தன.

ஆனால் 1972 முதல் இந்தக் காலகட்டத்தில் சினிமாவின் அரசியல் செல்வாக்கு தமிழகத்தில் தெளிவாக வெளிப்பட்டது. ஒரு சுவாரசியமான கதை. 1972ல் எம்.ஜி.ஆர்.நடித்த சங்கே முழங்கு. ராமன் தேடிய சீதை, நான் ஏன் பிறந்தேன் ஆகிய படங்கள் வெளிவந்தன. எம்.ஜி. ஆரின் செல்வாக்கு மண்டலத்தைக் குறைக்கும் வகையில் கருணாநிதியின் மகனான மு.க.முத்துவை வைத்து 'பிள்ளையோ பிள்ளை' படம் வெளியிடப்பட்டது மு.க.முத்து ரசிகர்மன்றங்கள் அமைக்கப்பட்டன.

இதே ஆண்டு ரிக்ஷாக்காரன் படத்தில் நடித்ததற்காக எம்.ஜி.ஆருக்கு 'பாரத் விருது' வழங்கப்பட்டது.

1.10.1972ல் ஆர்.எம்.வீரப்பன் தலைமையில் எம்.ஜி.ஆர். மன்றங்களின் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. 8.10.1972ல் சென்னை ராயப்பேட்டை லாயிட்ஸ் சாலை பொதுக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் எம்.ஜி.ஆர், 'பதவியில் இருப்பவர்கள் சொத்துக் கணக்குக் காட்டவேண்டும்' என முழங்கினார். அக்.10ல் கூடிய திமுக பொதுக்குழு எம்.ஜி. ஆரை கழகத்தைவிட்டு வெளியேற்றியது. 16.10.1972ல் 'அண்ணா திமுக' ஆரம்பிக்கப் போவதாக எம்.ஜி.ஆர். அறிவித்தார்.

1973ல் எம்.ஜி.ஆரின் நேற்று இன்று நாளை. 1975ல் இதயக்கனி போன்ற படங்கள் கூடுதல் அரசியல் நெடியுடன், திமுக எதிர்ப்பு மனோபாவத்தை மக்கள் மத்தியில் விதைத்தன. 1977 ஜூன் மாதம் தேர்தல். அதிமுக 127 இடங்களில் வெற்றி பெற்று ஜூன் 30ல் எம்.ஜி.ஆர். தமிழக முதலமைச்சரானார்.

'சினிமாக் கவர்ச்சிக்கு மக்கள் ஏமாந்துவிட்டனர்' என்று திமுக தலைவர்கள் குற்றஞ்சாட்டினர். 1977ல் எம்ஜிஆர் நடித்த படங்களாக ஏ.பி.நாகராஜனின் நவரத்தினம், மீனவநண்பன், 1978ல் மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் ஆகிய படங்கள் வெளிவந்தன. எம்.ஜி. ஆரின் திரைப்பட வாழ்வு இத்துடன் முடிந்து அரசியல் வாழ்வு தொடர்ந்தது.

1971ல் சிவாஜிகணேசனின் 150வது படமான சவாலே சமாளி, மல்லியம் ராஜகோபால் இயக்கத்தில் வெளிவந்தது. 1972ல் ஞானஒளி, பட்டிக்காடா பட்டணமா, தர்மம் எங்கே போன்ற படங்கள் வெளிவந்தன. கே.பாலாஜி தயாரித்த நகலெடுப்புப் படங்களான ராஜா, நீதி போன்ற பல படங்கள் இந்தக்காலத்தில் வெளிவந்தன. 1973ல் ராஜபார்ட் ரங்கதுரை, 1974ல் தங்கப்பதக்கம், 1977ல் இளைய தலைமுறை, 1978ல் என்னைப்போல் ஒருவன். 1979ல் பட்டாக்கத்தி பைரவன் என்று சிவாஜியின் படப்பட்டியல்கள் 70களில் நீண்டன. ஆனந்தவிகடனும், கல்கியும் சிவாஜி வயதுக்குத் தக்க வேடங்களில் நீடிக்க வேண்டும் என இக்காலத்தில் அறிவுரை கூறின. கல்கி பட்டிமன்றமே நடத்தியது.

1973ல் பொன்னுக்குத் தங்க மனசு மூலம் புகழ்பெற்ற தேவராஜ் மோகனின் இயக்கத்தில் செல்வராஜ் கதையில், இளையராஜாவின் இசையில் 1976ல்



படிப்பகம்

www.padippakam.com

'அன்னக்கிளி' வந்து மாபெரும் வெற்றி பெற்றவுடன். இளையராஜா என்கிற மாபெரும் இசைக்கலைஞனை தமிழ்த் திரை உலகுக்குக் கொண்டுவந்து சேர்த்தது.

இளைய ராஜாவின் வரவால் தமிழ் கூறும் நல்லுலகில் அந்தக்காலகட்டத்தில் உச்சகட்டத்திலிருந்த இந்திச் சினிமாப் பாடல் கேட்கும் வழக்கம் அடியோடு ஒழித்துக் கட்டப்பட்டது. பாலசந்தரின்' மூன்று முடிச்சு' வெளிவந்தது. சிவாஜி ராவ் 'ரஜினிகாந்த்' ஆகித் தமிழ்த் திரைக்கு அறிமுகமானார். ஸ்ரீதேவியும் குழந்தை நட்சத்திரத்திலிருந்து பெரிய நட்சத்திர அந்தஸ்தை இதன்மூலம் பெற்றார்.

'அன்னக்கிளி' பத்ரகாளி போன்ற புதியவர்களின் படங்களில் மெய்சிலிர்த் துப் போயிருந்த சினிமா உலகத்தைப் பிடித்து மேலும் குலுக்கிட 1977ல் மாபெரும் வசூல் படமொன்று வந்தது. அதே 1977ல் 'அவர்கள்'படமெடுத்துத் தோல்வி கண்டிருந்த பாலச்சந்தர்கூட அந்தப்படத்தின் மாபெரும் வெற்றி கண்டு மலைத்துப் போனார். பாரதி ராஜா என்கிற மாபெரும் கலைஞனை அறிமுகப்படுத்திய '16 வயதினிலே' படம்தான் இது. தொடர்ந்து 1978ல் 'கிழக்கே போகும் ரயில்' என்று பாரதி ராஜாவின் வெற்றிப்பயணம் தொடர்ந்தது.

மிருணாள் சென், சத்யஜித்ரே மாதிரி நகர்ப்புறத்துப் பொறுக்கி வர்க்கத்து ஏழைகளைப் பற்றி 1978ல் பாலசந்தர் சொல்ல முயன்ற படம் 'தப்புத்தாளங்கள்' பாரதிராஜாவின் 'சிவப்பு ரோஜாக்கள்' இதே ஆண்டு வெளிவந்து வசூலில் வெற்றிகண்டது. இந்தக் காலகட்டத்தில் வண்ணத் திரைப்படங்களில் கலர் ஃபிலிம் உற்பத்தி மிகுதியால் அதிகமாகத் தமிழில் வந்தன.

எழுபதுகளின் இறுதியில் 1978ல் வெளிவந்த 'முள்ளும் மலரும்' மூலம் மகேந்திரன் பாலமகேந்திரா என்கிற அற்புதமான கலைஞர்கள் தமிழ்த்திரை உலகுக்குக் கிடைத்தனர்.

இந்தப் படத்தின் வெற்றிவிளைவித்த முரண்பாட்டில் பாலுமகேந்திரா மகேந் திரனை விட்டுப்பிரிந்து 1979ல் 'அழியாத கோலங்களை' இயக்கினார். பாலுமகேந் திரா பிரிந்ததால் மேகந்திரன் புதுமைப் பித்தனின் 'சிற்றன்னை'யை ஆதாரமா கக் கொண்டு 1979ல் தந்த உதிரிப்பூக்கள் மூலம் அசோக் குமார் என்கிற காமேராக் கலைஞன் தமிழ்த்திரை உலகுக்கு அறி முகமானார்.

1972ல் 'கனிமுத்துப் பாப்பா' மூலம் இயக்குனரான எஸ்.பி.முத்துராமன் இந்தக் காலத்தில் ஸ்டைல் பிசினஸ் இல்லாத ரஜினிகாந்தை 'ஆறிலிருந்து அறுபதுவரை' மூலம் நடிக்கவைத்தார்.

1979ல் வெளிவந்த பாரதிராஜாவின் மற்ற படங்கள் புதிய வார்ப்புகள். 'நிறம் மாறாத பூக்கள்' பாரதி ராஜாவுடன் இணைந்து பணியாற்றிய பாக்கியராஜ் தானே நடித்து இயக்கி இதே ஆண்டில் வெளியிட்ட படம் 'சுவரில்லாத சித்திரங்கள்'.

1975ல் 'அவளும் பெண்தானே' படத் தின் மூலம் இயக்குனராகிய துரை 1979ல் தந்த அற்புதமான படம் 'பசி' இதே ஆண்டு பாலச்சந்தரின் 'மழலைப் பட் டாளம்' ஏராளமான குழந்தைகள் நடித்து வெளிவந்து பெண்களைக் கவர்ந்தது.

பெண்கள் ரவிக்கை அணியும் கலாச் சாரம் ஒரு கிராமத்தில் ஏற்படுத்திய பாதிப்புக்களை மிகச் சுவராசியமாகச் சொன்ன படமான 'ரோஜாப்பூ ரவிக் கைக்காரி', தேவராஜ் மோகன் இயக்கத் திலும், நடிகர் சிவக்குமாரின் நூறாவது படமாகவும் வெளிவந்தது. தமிழ்த்திரை உலகில் புதியவர்களின் சகாப்தம் தொடங்கிவிட்டதை எழுபதுகள் உணர்த் தின. இந்தக் காலத்தில் வெளிவந்த 628 படங்களில் 35 படங்கள் தவிர்த்து மற் றவை, புராண இதிகாச, ராஜாராணி இல்லாத சமூகக் கதைகளே என்பது குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)




படிப்பகம்

# மழை

ம.கண்ணன்

அவசர கதியில்
அத்தனை கால்களும்-
ஓட்ட நடையா
நடை ஓட்டமா?
மழைதனில் நனைந்தால்
முகம் கரைந்து
உண்மை முகந்தான்
வெளிப்பட்டு விடுமோ?
ஓடி ஒளிய
ஒவ்வொரு மனகம்
கறுத்து விரிந்த
காளான்களுக்குள்ளே.

'வெயிலில் காய்கையில்,
வெறுமையாய்ப் போகையில்,
விழுந்தால் மழைத்துளி
நன்றாயிருக்குமே!'
எண்ணிய எண்ணங்கள்
விழுந்த துளியில்
போட்ட கோலமாய்
கரைந்து போனது.
கப்பல் விட்ட காலமெல்லாம்
கண்ணில் வந்துவந்து சென்றது.
பள்ளிக் கூடம் விட்டதும் மழையில்
பையப் பைய நடந்து வந்தது
ஞாபக மேகமாய் தூறல் செய்தது.
மழையில் நனைந்தும் -
பச்சைப் புல்லாய்
உடல் சிலிர்த்தும்-
உள்ள படியே
நானும் ஓடித்தான் போனேன்-
சளிபிடிக்குமோ-
சட்டைவேட்டி
சகதியாகிடுமோ?..



LICENCED TO POST WITHOUT PREPAYMENT. LICENCE NO: TN/SR-60/20

www.padippakam.com

# VADAMALAYAN HOSPITAL

## 40 YEARS OF DEDICATED SERVICE

**MULTI - SPECIALITY CENTRE**

**ROUND THE CLOCK SERVICE**

**DAY AND NIGHT PHARMACY**

**24 Hrs DIAGNOSTIC CENTRE**

**ACUTE CARE AMBULANCE**

## FACILITIES AVAILABLE

- CARDIOLOGY - INTENSIVE CORONARY CARE UNIT
- WHOLE BODY COLOUR DOPPLER SCAN
- NEUROLOGY - DIGITAL E.E.G. & E.M.G.
- GENERAL MEDICINE - INTENSIVE RESPIRATORY CARE UNIT
- GENERAL SURGERY - FULLY EQUIPPED OPERATION THEATRES
- OBSTRERICS & GYNAECOLOGY - HI-TEC LABOUR THEATRE & LAPROSCOPY
- COLO-RECTAL SURGERY - INFRA RED COAGULATOR & SIGMOIDOSCOPY
- PAEDIATRICS - PAEDIATRIC SURGERY - NEO-NATAL CARE
- GASTRO ENTEROLOGY
- DENTISTRY - ORTHODONTIC CENTRE
- E.N.T. AND EYE CARE CENTRE
- COSMETIC AND RECONSTRUCTIVE SURGERY
- DERMATOLOGY - CRYO PROCEDURES
- NEURO SURGERY - ORTHOPAEDIC CENTRE
- TRAUMA CARE CENTRE
- CARDIO - THORACIC SURGERY
- NEPHROLOGY AND UROLOGY
- MEDICAL ONCOLOGY
- IMMUNISATION CENTRE - HEALTH CHECK-UP PROGRAMME

**9-A, Vallabai Road, Chokkikulam, MADURAI - 625 002**

**Tel. : 0452 - 532180, 530657, 532595, 654835**

**Fax : 0452 - 533736**

படிப்பகம்